# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebetian's St. Mannar, Sri Lanka.


Telephone No : 023-2232377, Fax No - 023 - 2232377, E-mail - christhunesan@pre.slt.lk / pc_nesan@yahoo.com


பொழிவு - 10
குவிப்பு - 01
பக்கங்கள் - 20

விலை ரூபா 25.00
ஜனவரி - 2007

(ISSN 1800-2641)





## பொங்கல் வாழ்த்துக்கள்

### பொங்கல் எங்கே பொங்குவது?

உழுது பயிரிட்ட நிலமெல்லாம் இப்பொழுது
கழுகுக்கூட்டங்கள் அடைகின்ற காடாச்சு!
அழுதும் பயனில்லை - உழுதும் பயனில்லை
பழுது யார் பக்கம்? முழுதும் வன்செயலே.

பொங்கிப் படைப்பதற்கு எங்கிருந்து அரிசி வரும்?
தங்கியிருந்த வேளார் குலமெல்லாம் அகதியானார்
இங்கிருந்து ஓர் பானை எடுப்பதற்குத் தேடுகிறோம்
மங்கி அணைந்த சூளைச் சாம்பலையே காணுகிறோம்.

கோலம் போடுவதற்கு முற்றம் மெழுகிவிட்டு
காலையிலே பார்க்கையிலே பூட்ஸ் அடிகள் தடமிருக்கு
வேழம் உண்ட விளாம்பழம்போல வாழ்வாச்சு
ஈழம் இதனில் இனி என்றுதான் பொங்குவது?

நெற்கதிர்கள் கொய்யவென்று வயலுக்குப் போவதற்கே
பற்பலவாய் அச்சுறுத்தல் அதிகமாயிருக்கு
சிற்சிலரோ சென்றனர்கள், திரும்பி வரும் வரைக்கும்
கற்சிலையாய் காத்திருப்போம் பொற்பரனே காருமென்று.

மாதோட்ட நன்னகரில் மாதமும் மாரிபெய்து
நீரோட்டம் பெருகியதாம் நெடுநாட்கள் முன்னாலே
ஏரோட்டம் இன்றில்லை! இரத்தத்தாரை தவிர்
வேரோட்டம் இங்கில்லை, பொங்கலெங்கே பொங்குவது?

ஏ. டி. தேவதாசன் அல்மேடா
பறப்பாங்கண்டல்.

## குருத்துவப் பணி வாழ்வில் பொன் விழாக் காணும் அருட்தந்தை ஜே. பி. தேவராஜா அடிகளார்



அன்று...
[குருப்பட்டம் பெற்ற நாளில்]
04-02-1957



இன்று...
[50 ஆண்டுகள் நிறைவில்]
04-02-2007

குருத்துவப் பணிவாழ்வில் பொன்விழாவைக் கொண்டாடும் எமது அன்புத் தந்தை ஜே. பி. தேவராஜா அடிகளாருக்கு மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை மற்றும் குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரதும் செபம் நிறைந்த நல் வாழ்த்துக்களை அன்போடும், மிகுந்த நன்றியோடும் தெரிவிக்கின்றோம்

அருட்பணியாளர் நேசன் —மன்னா பதிப்பாசிரியர்

## மக்கள் பணியில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் கொண்டாடும் வாழ்வுதயம்


உள்ளே...







கடந்த டிசம்பர் 22ம் திகதி வாழ்வுதயத்தின் 25வது ஆண்டு வெள்ளி விழா நிகழ்வுகளின்போது, யூபிலி விழாத் திருப்பலி இடம்பெறுகின்றது. பேராலய வளாகத்தில் நடைபெற்ற யூபிலி விழா நிகழ்வில் மன்னார் ஆயர் மங்கள விளக்கேற்றுகின்றார். கலை நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

## பஸ்ரியான் அடிகளாரின் 22வது ஆண்டு நினைவு




வங்காலையில் கடந்த ஜனவரி 6ம் திகதி நடைபெற்ற பஸ்ரியன் அடிகளாரின் நினைவு நிகழ்வின்போது, அடிகளாரின் புதிய உருவச் சிலையை மன்னார் ஆயர் திறந்து வைக்கிறார். அடிகளாரின் புதிய உருவச் சிலைக்கு மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் மாலை அணிவிக்கின்றார்..

# மன்னா

மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

## மெய்யாகும் பொய்கள்!

"தண்ணீரில் மீன் அழுதால்
அதன் கண்ணீரை யார் அறிவார்?"

என்ற கேள்வி நிலையிலேயே இன்றைய ஈழத்தமிழர் வாழ்வு இருக்கின்றது. சுகங்களெல்லாம் சோகங்களாகி விட்டன! வாழ்வுக்காகப் போராடியவர்கள் இன்று வாழ்க்கையோடு போராடவேண்டிய நிலை! எதிர்கால நம்பிக்கைகள் பொய்த்துவிட்டதைப் போன்ற ஓர் உணர்வு! வாழ்வியல் தாக்கங்களும், எதிர்கால ஏக்கங்களும் மனிதரைப் பாடாய்ப் படுத்துகின்றன.

### திட்டமிட்டுத் திரிக்கப்படும் உண்மைகள்

இத்தகைய துன்பகரமான ஒரு சூழ்நிலையில், இன்றைய நமது நாட்டின் நடப்புக்கள் வித்தியாசமாக, விசித்திரமாக ஏன் வினோதமாகக்கூட உள்ளன. மெய்கள் பொய்களாகவும், பொய்கள் மெய்களாகவும் திட்டமிட்டுத் திரிக்கப்படுகின்றன.

இன்றைய போர்க்கால - அரசியல் சூழ்நிலையில் எங்கும் பொய்மைகளே மலிந்துபோயுள்ளன. சண்டையில் ஈடுபடும் தரப்பினரின் நிலை ஒருபுறம் இருக்க - சாதாரண அப்பாவி மக்களின் சொல்லொணாத் துன்பங்களை, வேதனைகளை, மனிதாபிமானப் பிரச்சினைகளை, அவலச் சாவுகளை மூடிமறைக்கும் நிலைமையையே இங்கே சுட்டிக்காட்ட முனைகின்றோம்.

நடந்தது ஏதோ இருக்க அப்பட்டமாகப் பொய்சொல்லுகின்ற நிலைமை இன்று சர்வசாதாரணமாகிவிட்டது. **முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள்** மறைக்கும் முயற்சியாக சிலர் செயற்படுவது வேதனையானதும் வேடிக்கையானதுமாகும். இந்த உண்மை மறைப்புக்கள் ஏதோ தற்செயலாக, அல்லது விளக்கக் குறைவினால் நடப்பவை அல்ல. மாறாகத் திட்டமிட்ட முறையிலேயே உண்மைகள் இங்கே திரிக்கப்படுகின்றன, மறைக்கப்படுகின்றன. இந்நிலைப்பாடு உண்மையின் அடிப்படையில் சமாதானத்தைத் தேடும் முயற்சிக்கு முற்றுமுழுதான - முரண்பாடான நிலைப்பாடாகும்.

### பொய்மையைத் தோலுரிக்கும் வார்த்தை

பொய்மைகள் மலிந்த நிலையை இறைவார்த்தையும் தெளிவாகத் தோலுரித்துக் காட்டுகின்றது. *"நீதி துரத்தப்பட்டது; நேர்மை தொலைவில் நின்றது: பொது இடங்களில் வாய்மை நிலைகுலைந்தது; உண்மைக்கு அங்கே இடமில்லை. உண்மை என்பதே இல்லாமல் போய்விட்டது"* (எசாயா 59: 13,14a). *"பொய்பேசத் தங்கள் நாவை வில்லைப்போல் அவர்கள் வளைக்கின்றனர்: உண்மைக்காக யாரும் நாட்டில் நிமிர்ந்து நிற்பதில்லை."* (எரேமியா 9 : 3). ***"உண்மையா? அது என்ன?"*** என்று கேட்ட பிலாத்துவின் நிலையிலேயே இன்றைய அரசியல் உலகம் சுழல்கின்றது. உண்மைகள் திட்டமிட்டு மூடிமறைக்கப்படும் சூழ்நிலையில் இயேசுவின் வழியில் உண்மைக்கு சான்றுபகரவே திருச்சபை அழைக்கப்படுகின்றது.

### உண்மையை எடுத்துரைக்கும் பணி

*"உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன். இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்."* (யோவான் 18: 37, 38) என இயேசு தன் பணியின் தொனிப்பொருள் என்ற என்பதை திட்டவட்டமாக பிலாத்துவின் முன்னிலையில் மொழிந்தார்.

உண்மைகள் உறங்கிக்கொண்டிருக்கும் இன்றைய சூழலில் இயேசுவின் வழிநின்று உண்மைகளை உரத்துச்சொல்லும் பணி திருச்சபையினுடைய பணியாகும். மன்னார் மற்றும் யாழ்ப்பாண ஆயர்கள் காலத்திற்குக் காலம் அரசியல் தலைவர்களை, போராளித் தலைவர்களை நேரடியாகச் சந்தித்தும், கடிதங்கள் வாயிலாகவும், ஊடகங்களுக்கு வழங்கும் பேட்டிகள் மூலமாகவும் உண்மை நிலையை வெளிச்சத்திற்கு கொண்டுவருகின்றமை பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும். அரச மற்றும் தனியார் அமைப்புக்கள் உரத்துக் குரல் கொடுக்க அஞ்சும் இன்றைய நிலையில் *'குரலற்ற மக்களின் குரலாக'* திருச்சபை இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு நியாயமானதே.

பொய்களை மெய்களாக்கும் இன்றைய யுத்த - அரசியல் சூழ்நிலையில் அனைத்து இன மக்களும் விழிப்போடு இருந்து உண்மையை உணர வேண்டும். ஒரு பொய்யை எத்தனை தடவை சொன்னாலும் அது மெய்யாகிவிடாது என்பதை சம்மந்தப்பட்டவர்கள் உணர்வார்களா?

**மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை,**
**அன்புடன் - அருட்பணியாளர் நேசன்,**



# வாசகர் எண்ணங்கள்

### மன்னாவை வெகுவாகப் பாராட்டுகின்றோம்

அன்பின் அருட்தந்தைக்கு,
மன்னாப் பத்திரிகையை எமக்கு அனுப்பி வைப்பதற்காக தங்களுக்கு நன்றி கூறுகின்றேன். மன்னாவை நாங்கள் வெகுவாகப் பாராட்டுகின்றோம். உலகத் திருச்சபையின் செய்திகளை அறிந்துகொள்ள மன்னா மிகவும் பயனுள்ள ஊடகமாக இருக்கின்றது. இறைவார்த்தையை உலகிற்குக் கொடுக்கும் ஒரு வழியாக இது அமைகின்றது. அனைத்து மக்களுக்கும் நீங்கள் செய்யும் இப்பாரிய பணி இறைவனால் நிறைவாக ஆசீர்வதிக்கப்படுவதாக.

*அருட்சகோதரி எலிசபெத் போல்,*
*புனித வளனார் கன்னியர் இல்லம், கேகாலை.*

### தரமான செய்திகளைத் தாங்கி வரும் மன்னா

மாதமொருமுறை மறையின் நிறைகளை
மக்களுக்கு அளித்திடும் மன்னாவே!
மறை வாழ்வை மங்காமல் பரப்பி வரும் உன்னை
மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.
இளைஞர்கள், இளமொட்டுக்கள், கலைஞர்கள்
கவிமான்கள், பொதுநிலையினருடன் பொக்கை வாயினரும்
முகம் மலர்ந்திட நீ முந்தி வருகின்றாய்!
தரமான செய்திகளையும் தார்மீகக் கொள்கைகளையும்,
குழந்தை வளர்ப்புக்குப் பல நெறிகளையும்
குடும்ப வாழ்விற்கு பல வழிகளையும்
ஆன்மீகத்துடன் அரசியலையும் தாங்கி வருகிறாய்.
தத்துவச் சொற்களெடுத்து உன்னை
இத்தரணிமீது வாழ்த்துகின்றேன்.
வளர்க உன்பணி! தொடர்க உன் சேவை!

*A. ஜெசி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.*

### இளைஞர் பொழிவு அருமை!

வழி தவறும் இளம் சமுதாயத்தை நேர்வழி நடத்த நீ அளிக்கும் இளைஞர் பொழிவு அருமையிலும் அருமை!
உன் ஆக்கங்களில் எனை ஆட்கொண்டது இளைஞர் பொழிவே.
வாழ்க உன் பணி! இஸ்ராயேல் மக்களின் பசி தீர்த்தது மன்னா என்ற உணவு! இலங்கைக் கத்தோலிக்கர் எம் ஆன்ம பசி தீர்ப்பவன் மன்னா நீயே!

*கே. சுரேஜினி, யோசவ்வாஸ் மறைப்பணி நிலையம்,*
*அனுராதபுர வீதி, புத்தளம்.*

### வெளிச்சமிட்டுக் காட்டிய மன்னாவுக்கு நன்றி

கிறிஸ்மஸ் புதுவருட சிறப்புப் பொழிவாக மன்னா மலர்ந்த வேளையில் அதில் மகிழ்ச்சிதரும் பிரசுரிப்பாக அமைந்ததுதான் "கிறிஸ்தவ நாகரீகத்தை க.பொ.த. உயர்தரப் பாடத்தில் இணைக்க அனுமதி" என்ற செய்தி.

கிறிஸ்துவ நாகரீகம் கிறிஸ்துவின் பிறப்பிற்கு முன்னரே தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டிருந்தது என்பது வரலாற்று உண்மை. இதழ் இயல் (JOURNALISM) ஆரம்ப வரலாறே, அச்சுக்கலையோடு பின்னிப் பிணைந்ததாகும். உலகில் முதன் முதலில் நூல்வடிவில் பிரசுரிக்கப்பட்ட புத்தகம் புனித வேதாகமம் (BIBLE) ஆகும். இது ஜேர்மனி தேசத்திலுள்ள கெயிட் பேர்க் (HEIDE BURG) என்ற நகரில்தான் வெளியிடப்பட்டது.

இவ்வெளியீட்டின் காரணமாக முதலில் வடிவமைக்கப்பட்ட அச்சு இயந்திரம் இங்குதான் செயற்படத் தொடங்கியது என நம்ப இடமுண்டு. இத்தகைய புராதனப் பெருமை வாய்ந்த நாகரீகம், இத்தனை காலமும் ஏன் இலைமறை காயாக இருந்திருக்க வேண்டும்?

உயர்கல்வி பயிலும் மாணவ மாணவியரின் கனவை நனவாக்க, முன்னின்று உழைத்த மன்னார் வலயக் கல்விப் பணிமனையினருக்கும் இக்குறைபாட்டினை வெளிச்சமிட்டுக் காட்டிய மன்னா பதிப்பாசிரியர் பா. கிறிஸ்து நேசன் அடிகளாருக்கும் இது செயல் வடிவம் பெற ஆக்கபூர்வமான பணியை மேற்கொண்ட மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களுக்கும் கிறிஸ்தவ உலகம் கடமைப்பாடுடையதாகும்.

*வின்சென்ட் டலிமா,*
*தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.*

### உன் வரவு கண்டு மலைத்துப் போகின்றேன்

கரத்தில் மலரும் மலரே, மக்கள் மன்னாவே!
உன் வரவு கண்டு மலைத்துப் போகின்றேன்.
மாதத்தில் ஒருநாள் வந்தாலும் நீ வசந்தமாய் வருகிறாய்!
நீ சுமந்துவரும் எல்லா அம்சங்களும் அருமையானது!
எம்மைத் தித்திக்க வைத்த தேன் மொழியே.
உன்னை நினைத்தாலே நாவெல்லாம் உமிழ்நீர் சுரக்கிறது.
மக்களாகிய நாங்கள் உன்னை என்னவென்று போற்றுவது?
வாடா மலர் தூவி வாழ்த்துகின்றேன்.
மன்னாவே தேன் கிண்ணமே......!
செந்தமிழ் பொங்கும் செல்வக் குடமே!
ஏழிசையும் மெச்ச ஏற்றம் தந்தாயே!
எல்லோர் திறமைக்கும் முன்னுருமை கொடுத்தாயே!
குறை காண முடியாத நிறை குடமே
சுடர்விட்டொளிரும் மன்னாவே!
உன் வரவுக்காய் வழிமேல் விழிவைத்துக்
காத்திருக்கும் வாசகர்களில் நானும் ஒருவர்.
காலம் முழுவதும் நீ தொடர்ந்து வர வாழ்த்துக்கள்.

*ஞா. கிறிஷாந்தா (குயின்சி),*
*சாளம்பன், ஆண்டாங்குளம்.*

# மன்னா பத்திரிகைப் பணியக அறிவித்தல்கள்

### மன்னா வாசகர்களுக்கு ஓர் மகிழ்ச்சியூட்டும் செய்தி

2007ம் ஆண்டு ஜனவரியில் இருந்து மன்னா பத்திரிகையின் வெளிப்பக்கங்களை பல நிறங்களில் வெளியிடத் தீர்மானித்துள்ளோம். எனவே பத்திரிகையின் விலையும் இனிமேல் 25 ரூபாவாக இருக்கும். தனிப்பிரதிகளின் விலை அதிகரிக்கப்பட்டாலும் ஆண்டுச் சந்தாவில் மாற்றம் செய்யப்படவில்லை. ஏற்கனவே உள்ளபடி உள்நாட்டில் உள்ளவர்கள் ஆண்டுச் சந்தாவாக 400 ரூபாவும் வெளிநாட்டில் உள்ளவர்கள் 2000 ரூபாவும் செலுத்தினால் போதுமானது.

### இறந்தவர் நினைவு மற்றும் யூபிலி, பிறந்தநாள் நினைவுகளைப் பிரசுரிப்போர் கவனத்திற்கு

இறந்துபோன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி, மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக இனிமேல் ரூபா 2000 அறவிடப்படும். இவற்றை கலர் பக்கத்தில் பிரசுரிப்பதாக இருந்தால் ரூபா 4000 அறவிடப்படும்.

இந்த நினைவுகள் நீங்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக இவற்றை அனுப்பிவைக்க வேண்டும்.

### மன்னாவிற்கு ஆக்கங்களை, செய்திகளை அனுப்புவோரின் கவனத்திற்கு!



மன்னாவிற்கு ஆக்கங்களை அல்லது செய்திகளை அனுப்புவோர் உங்கள் விடயங்கள் எந்த மாதத்தில் இடம்பெறவேண்டும் என எதிர்பார்க்கின்றீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

நீங்கள் எத்தனை ஆக்கங்களையும் அனுப்பலாம். ஒரே கவருக்குள் வைத்தும் அனுப்பலாம். ஆனால் அவை ஒவ்வொன்றும் ஒரே தாளில் எழுதப்படாமல் **தனித்தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.**

அப்போதுதான் ஒவ்வொரு ஆக்கத்தையும் அதற்குரிய கோப்புகளுக்குள் (Files) வைக்க முடியும். ஒரே தாளில் 3 விடயங்களை எழுதினால் (உதாரணத்திற்கு பெரியப்பா பதில், நகைச்சுவை, கவிதை) அந்தத் தாளை அல்லது பேப்பரை எந்தக் கோப்புக்குள் வைப்பது என்ற சிக்கல் எழுகின்றது. எனவே எழுத்தாளர்கள் தனித்தனி தாளில் எழுதி (விரும்பினால் ஒரே கவருக்குள் சேர்த்து வைத்து) அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா பத்திரிகை நிர்வாகம்

## புனிதர் பொன்மொழிகள்!

"இயேசுவுக்காக இரத்தத்தைச் சிந்தியவர்கள் மாத்திரமல்ல இயேசுவுக்கு விடா முயற்சியுடன் சேவை செய்கிறவர்களும் மறைசாட்சிகளே" - *புனித ஜெரோம்.*

"ஏழைகளைச் சந்தியுங்கள். இயேசுவைச் சந்திக்க வேறு எளிதான வழியில்லை."
- *புனித மார்க்கறீத்தம்மாள்.*

"கீழ்ப்படிதலைவிட கடினமான ஆனால் நிறைவுதரும் புண்ணியம் வேறில்லை."
- *புனித கத்தரீனம்மாள்.*

### மன்னார் படகுதுறையில் நடாத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சு

## அப்பாவி மக்கள் படுகொலைசெய்யப்பட்டமை தொடர்பாக

# மன்னார் ஆயர் ஜனாதிபதிக்கு அவசரக் கடிதம்

மன்னார் இலுப்பைக்கடவை படகுதுறையில் கடந்த ஜனவரி 2ந் திகதி இலங்கை விமானப் படையினர் நடத்திய தாக்குதலில் குழந்தைகள், கர்ப்பிணிகள் உட்பட அப்பாவிப் பொதுமக்கள் 22 பேர் பலியாகி இன்னும் பலர் படுகாயமடைந்தனர். இந்த இடத்திற்கு உடனடியாக விஜயம்செய்த மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தான் நேரடியாகப் பார்த்த, கேட்ட, விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த 02.01.2007ல் அவர் அனுப்பிய கடிதத்தின் முக்கிய விபரங்கள் வருமாறு:

மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் இடமான இலுப்பைக்கடவைக்கு அருகே படகுதுறை என்ற இடத்தில் ஜனவரி 2ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வான் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், நாவாந்துறையிலிருந்து இடம்பெயர்ந்த 35 குடும்பங்கள் வசிக்கும் சிறு குடியிருப்பில் வேவுத் தகவல் தருவதாகச் சொல்லப்படும் ஒரு விமானத்தின் துணையுடன் மூன்று கிபிர் குண்டு வீசும் விமானங்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளன.

இந்த வான் தாக்குதல் நடைபெற்ற, குண்டுகள் வீழ்ந்த 12 இடங்களை நான் பார்வையிட்டேன். அங்கு இரண்டு குண்டுகள் வெடிக்காத நிலையில் இருந்தன. தாக்குதல் நடந்த இடம் கடற்கரையிலிருந்து 100 மீற்றர் சுற்று வட்டாரத்துக்குள்ளேயே உள்ளது. இந்த மக்கள் குடியிருப்பில், மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள 35 கத்தோலிக்க மீன்பிடிக் குடும்பங்கள் வசித்து வந்தன. அந்த மக்கள் மிகச் சிறிய குடிசைகளில் வசித்து வந்தனர். அந்த இடத்தில் ஒரு கத்தோலிக்க தேவாலயம் இருந்தது. அது மிகத் தெளிவாகத் தெரியக்கூடியதாக இருந்தது.



இந்தப் பகுதியின் பங்குத்தந்தை பி. அருள்நாதன் அடிகளாருக்கும் மற்றும் இந்தப் பகுதியில் பணியாற்றும் பெரும்பாலான அருட்தந்தையர்களுக்கும் சமயத் தொண்டர்களுக்கும் இந்த இடமும் இங்கு வாழ்ந்த மக்களும் நன்கு அறிமுகமானவர்கள்.

இந்த இடத்தை நான் 2ஆம் திகதி நண்பகல் 12.45 மணிக்கு சென்று பார்வையிட்டேன். இந்தப் பகுதி மக்கள், அருட்தந்தை மற்றும் சமயத்தொண்டர்களிடம் பேசியதிலிருந்தும் எனது நேரடி அவதானிப்பிலிருந்தும் இந்தப் பகுதியிலோ அல்லது இதன் சுற்றுப்புறத்திலோ விடுதலைப் புலிகளின் இராணுவப் பதுங்கு குழிகளோ அல்லது அவர்களது முகாம்களோ அல்லது விடுதலைப் புலிகள் எனக் கருதக்கூடிய தனிப்பட்டவர்கள் தங்கும் வசிப்பிடங்களோ இல்லை என்பதை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (தொடர்ச்சி 17ம் பக்கம்)

### விவிலிய நாட்குறிப்பேடு, மற்றும் நாட்காட்டிகள் விற்பனைக்கு உண்டு

புதிய ஆண்டுக்கான விவிலிய நாட்குறிப்பேடு மற்றும் விவிலிய நாட்காட்டிகள் மன்னார் வளனகத்தில் விற்பனைக்காக உண்டு. இவை பெப்ரவரி மாதம் 25ம் திகதி வரையில் மட்டுமே விற்பனை செய்யப்படும் என வளனக நிர்வாகம் அறிவித்துள்ளது.

மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழுவினால் அச்சிடப்பட்ட திருவழிபாட்டு நாட்காட்டிகள் (கலண்டர்கள்) முடிவடைந்த நிலையில் மன்னார் மறைக்கல்வி நிலையம் பிரத்தியேகமாக இந்த நாட்காட்டிகளைத் தயாரித்து இறைமக்களின் தேவைக்காக விற்பனை செய்கின்றது. எனவே இந்நாட்காட்டிகள் வழமையான விலையைவிட அதிகமான விலைக்கே விற்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 4வது வாசக நூல் விற்பனைக்கு

திருப்பலி வாசகநூல் தொடரில் இறுதித் தொடராகிய 'திருப்பலி வாசக நூல் 4' தற்போது வளனகத்தில் விற்பனைக்கு வந்துள்ளது. திருச்சடங்குகளுக்கான, பல்வேறு தேவைகளுக்கான, நேர்ச்சி மற்றும் இறந்தோருக்கான திருப்பலி வாசகங்களைக் கொண்டதாக இந்த வாசக நூல் அமைந்துள்ளது.

## மன்னார் வாழ்வுதயத்தின் 25வது ஆண்டு நினைவு நிகழ்வுகள்

மன்னார் மறைமாவட்டத்தில் மனித்நேயப் பணிகளை சிறப்பாகச் செய்துவரும் வாழ்வுதயம் ஏற்படுத்தப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுவிழா கடந்த டிசம்பர் மாதம் 22ந் திகதி மன்னார் பேராலயத்தில் சிறப்பாக நினைவுகூரப்பட்டது. அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு மன்னார் ஆயர் தலைமையில் யூபிலிவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து பேராலய வளாகத்தில் சிறப்புரைகளும் சில கலைநிகழ்வுகளும் தொடர்ந்து மதிய விருந்தும் இடம்பெற்றது.





## கார்மேல் அருட்சகோதரிகளின் நித்திய அர்ப்பண நிகழ்வு

கடந்த டிசம்பர் மாதம் 20ம் திகதி கார்மேல் அருட்சகோதரிகளின் நித்திய அர்ப்பண நிகழ்வு இந்தியா, மங்களூர் கார்மேல் சகோதரிகளின் தலைமை இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது இலங்கை மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 43 அருட்சகோதரிகள் நித்தியத்திற்கும் தம்மை அர்ப்பணித்தனர். இதில் இலங்கையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் நவோதினி (கொழும்பு), ரூபினி (யாழ். சில்லாலை), அன்ரனெற் - (பள்ளிமுனை), வளர்மதி (மன்னார் - நறுவிலிக்குளம், மாதிரிக்கிராமம்), கிறிஸ்மிலா (கொழும்பு), சுபசிறி (கொழும்பு) ஆகியோர் தமது நித்திய அர்ப்பணத்தை மேற்கொண்டனர்.

இவர்களில் அருட்சகோதரி அன்ரனெற் அவர்களுக்கான நன்றித் திருப்பலி பள்ளிமுனையில் கடந்த ஜனவரி 2ந் திகதி நடைபெற்றது. அருட்சகோதரி மேரி வளர்மதி அவர்களுக்கான நன்றித் திருப்பலி ஜனவரி 3ந் திகதி மாதிரிக்கிராமத்தில் நடைபெற்றது.

நித்திய அர்ப்பணத்தைப் பெற்றவர்களில் அருட்சகோதரி ரூபினி, அன்ரனெற் ஆகியோர் கொழும்பு - பொறல்ல மாகாண முதல்வர் இல்லத்திலும் அருட்சகோதரி வளர்மதி திருகோணமலை புனித ஜோசவ் கன்னியர் இல்லத்திலும் பணிப்பொறுப்பை ஏற்றுள்ளனர்.

நித்திய அர்ப்பணம் பெற்று புதிய பணிப்பொறுப்பை ஏற்றுள்ள அனைத்து சகோதரிகளுக்கும் மன்னா செபங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## அமரர் அருட்திரு மேரி பஸ்ரியன் அடிகளாரின் 22வது ஆண்டு நினைவு தினம்

கடந்த ஜனவரி மாதம் 6ம் திகதி வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் 22வது நினைவுதினம் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது. அன்று காலை 6.30 மணிக்கு மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணியாளர் விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் மறைமாவட்டக் குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரும் சேர்ந்து இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். திருப்பலியின்போது அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் பஸ்ரியன் அடிகளாரின் நினைவுகளை இரைமீட்டு மறையுரையாற்றினார். (தொடர்ச்சி 19ம் பக்கம்)

## இன்றைய உலகில் கத்தோலிக்க திருச்சபை!

### திருநிலையினர் மற்றும் பொதுநிலையினர் பற்றிய தரவுகள்

இன்று உலகில் 110 கோடி கத்தோலிக்க மக்கள் உள்ளனர். அதில் 11 கோடி 35 இலட்சம் மக்கள் ஆசியாவில் உள்ளனர். உலகிலும் ஆசியாவிலும் கத்தோலிக்க திருச்சபையின் நிலைபற்றிய புள்ளிவிபரமொன்றை பிலிப்பைன்ஸ் தேசத்தில் இருந்து வெளியாகும் 'வேள்ட் மிசன்' (World Mission) என்ற சஞ்சிகை வெளியிட்டுள்ளது. இதன்படி ஆசியாக்கண்டத்தில் உலக கத்தோலிக்க தொகையில் 10.33 வீதத்தினர் வாழுகின்றனர்.

ஆயர்கள் - அகில உலகம் - 4, 784 ஆசியா - 682 (14.26%),
குருக்கள் - அகில உலகம் - 405,891 ஆசியா - 48,222 (8.41%)
கன்னியர்கள் - அகில உலகம் - 764,459 ஆசியா - 150,736 (19.64%),
நிரந்தர தியாக்கோன்கள் - அகில உலகம் - 32,324 ஆசியா - 148 (0.46%),
ஆண் துறவியர் - அகில உலகம் - 55,030 ஆசியா - 9,028 (16.40%)
குருமட மாணவர்கள் - அகில உலகம் - 113,044 ஆசியா - 29,220 (25.85%)

மேற்படி விபரங்களை ஆராயும்போது எதிர்காலத்தில் அதிகமான குருக்கள் ஆசிய நாடுகளிலிருந்து உருவாகி உலகின் ஏனைய பகுதிகளுக்குச் சென்று இறைபணி ஆற்ற வாய்ப்பு உண்டு.

## இளைஞர் மறைக்கல்விக்கு அரச அங்கீகாரம்

- 2007ம் ஆண்டு ஒக்ரோபரில் அர்சாங்கப்பரீட்சை!
- பங்குத்தந்தையர்களும் பங்கு மறையாசிரியர் ஒன்றியங்களும் இளைஞர் மறைக்கல்வி வகுப்புக்களை கிரமமாக நடாத்தும்படி கோரப்படுகின்றார்கள்!

க.பொ.த. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்காக தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் கடந்த வருட ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இளைஞர் மறைக்கல்விக்கான இறுதித்தேர்வு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சை மூன்று மொழிகளிலும் நடைபெறும். 2007ம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் இத்தேர்வு ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் நடாத்தப்படுவதோடு இதில் சித்திபெறும் மாணவர்களுக்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் சிறப்பு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேற்படி பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் மூன்று மணித்தியாளங்களாக 2 வினாத்தாள்களுக்கு பரீட்சார்த்தி விடையளிக்க வேண்டும். 35% புள்ளிகளுக்கு மேல் பெறுவோர் சித்திபெற்றோராகக் கணிக்கப்படுவார். இப்பரீட்சைக்குத் தோற்றுவோர் மறைக்கல்விப் பாடசாலை வழியாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

மறைக்கல்விப் பாடசாலையில் இளைஞர் மறைக்கல்விக்காக நாம் வெளியிட்டுள்ள பாட அலகுகள் மீள்பரிசோதனை செய்யப்பட்டு பரீட்சைக்கான ஒழுங்குகள், விதிமுறைகள், அறிவுரைகள் அடங்கிய அரச வர்த்தமானி வெளியீடு உரிய காலத்தில் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும்.

மறைக்கல்விப் பாடசாலையில் இளைஞர் மறைக்கல்வியின் முதற்கட்டமாக 20 பாட அலகுகள் அடங்கிய மாதிரி பாடத்தொகுப்பு, "திருமறை வழிகாட்டி" சஞ்சிகையின் கடந்த மூன்று வெளியீடுகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

*தகவல் : அருட்சகோதரி ரஞ்சி,*
*தேசிய மறைக்கல்வி நடுநிலையம், தமிழ்ப்பிரிவு பொறுப்பாளர்.*

## கருணாகரர் அடிகளார் இறைபதம்

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஜே. ஏ. கருணாகரர் அடிகளார் 19.11.2006 அன்று யாழ் ஆயர் இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார். 20.11.2006 அன்று மாலை 3 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் அடக்க ஆராதனைகள் இடம்பெற்றன.

தமது மறைப்பணிகளோடு கல்வி வளர்ச்சிப் பணியில் தமது முழுமையான பங்களிப்பைச் செய்த அடிகளாரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற மன்னா அன்பு நெஞ்சங்களின் செபங்களைக் காணிக்கையாக்குகின்றோம்.



### அருட்சகோதரி அசும்ரீனா இறைபதம்

கார்மேல் சபையைச் சேர்ந்த அருள் சகோதரி அசும்ரீனா 16.11.2006 அன்று திருகோணமலை சென். யோசவ் கன்னியர் இல்லத்தில் காலமானார். இவர் யாழ்ப்பாணம் டேவிட் வீதியை சேர்ந்த காலம்சென்ற ஜேக்கப் மரியாம்பிள்ளை மரிய பாக்கியம் தம்பதியர்களின் புதல்வி ஆவார். அன்பின் கன்னியர் சபையை சார்ந்த அருட்சகோதரி மரிய கொறற்றியின் சகோதரியான இவரின் இறுதிக்கிரிகைகள் 17.11.2006 அன்று திருகோணமலையில் இடம்பெற்றது.

### அருட்சகோதரி கிளாரா இறைபதம்

செபமாலைத்தாசர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மேரி கிளாரா 10.09.2006 அன்று இறைபதமடைந்தார். துறவற வாழ்வில் பொன்விழாக் கண்ட அருள்சகோதரியின் இறுதி அடக்க ஆராதனைகள் 11.09.2006 அன்று அச்சுவேலி அமலிவனத்தில் நடைபெற்றது.

1951 ஏப்பிரல் 21ல் செபமாலைத் தாசர் சபையில் தன்னை இணைத்துக்கொண்ட இவர் 2004ல் துறவற வாழ்வில் பொன்விழாக் கண்டமை குறிப்பிடத்தக்கது.

# திருப்பாலத்துவ ஞாயிறு தினம் - 28.01.2007



## சிறப்புச் செய்தி

அருட்பணியாளர் அவிதப்பர்,
இயக்குனர்,
மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை.

"பாலரை என்னிடத்தில் வரவிடுங்கள் அவர்களைத் தடைசெய்யாதீர்கள்" (லூக்.18:16) என்கிறார் இறைமகன் இயேசு. சிறுவர்கள்தான் எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகள். நவநாகரீகம் தாண்டவமாடுகின்ற, விஞ்ஞானம் மேலோங்கி அதன் உச்சநிலை வானத்தை எட்டிப்பிடிக்கும் காலகட்டத்தில், தொடர்புசாதனங்கள் பெருகி அதன் நுகர்வை சுவாசித்துக் கொண்டிருக்கும் இந்நூற்றாண்டில் மனிதனை மனிதன் மதியாது மனித மாண்பை அழித்துக்கொண்டிருக்கின்றான். வன்செயல்கள், கொலைகள் மலிந்து உலகினை உலுப்பிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் வருங்கால மாசற்ற குழந்தைகளின் நிலைபற்றி சிந்திக்க வேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் நம்முடைய கரங்களில் உள்ளது.

சிறுவர்கள், சிறுவர்கள்தான் என்று தட்டிக்கழிக்க முடியாது. வரையறுக்கப்படாத இயல்புகளையும், ஆற்றல்களையும், சக்திகளையும், அபிலாசைகளையும் கொண்டவர்கள்தான் சிறுவர்கள். இவர்களை நெறிப்படுத்தி, உருப்படுத்தி, நிலைப்படுத்துவது பெற்றோரின் பாரிய பொறுப்பாகும். அவர்களின் உடல், உள வளர்ச்சிக்குத் தேவையான வழிவகைகளைத் தேடிச்செயற்படுத்துவது சமூகத்தினதும், பெரியோர்களினதும், சமய அமைப்புக்களினதும் பொறுப்பு வாய்ந்த கடமையாகும். இதை உன்னிப்பாக எண்ணிய தாய்த் திருச்சபை, திருப்பாலத்துவ சபையை உருவாக்கி அதன் ஊடாக சிறுவர்களை உடல், உள, ஆன்மீக நிலைகளில் வளப்படுத்திக்கொண்டு வருகின்றது. இது வரவேற்கத்தக்கதும், போற்றப்படக்கூடிய விடயமும் ஆகும்.

சிறுவர்களை சமுதாயத்திற்கு உகந்த முழு மனிதர்களாக்குவதற்கு அவர்களிடம் காணப்படும் நிறைகுறைகளை இனம்க்ண்டு சிறந்த முறையில் உருவாக்க வேண்டும். அவற்றில் பின்வரும் அம்சங்கள் ஆதாரமாக உள்ளன.

01. நான் யார்? என்பதையும், என் உடன் மாணவர்கள் யார் என்பதையும் அவர்களுக்கிடையே உள்ள அந்நியோன்னிய உறவையும், மரியாதையையும் கட்டி எழுப்பி தன் ஆளுமையை வளப்படுத்தலின் மூலம் தன் மட்டில் நல்ல அபிப்பிராயத்தைக் கட்டி எழுப்புதல் வேண்டும்.



02. சமூக உணர்வு. தனது உடன் மாணவர்களின் நல்ல பண்புகளை பாராட்டுவதன் மூலம் சமூக உணர்வை தன்னில் ஏற்படுத்திக்கொள்ளுதல்.

03. சுய அபிமானம். சிறுவர் தம்மிடமுள்ள நற்குணத்தை அறிவதன் மூலம் தம் சுய அபிமானத்தைக் கட்டி எழுப்புகின்றனர்.

04. தாழ்வுமனப்பான்மை. சில மாணவர்கள் குடும்பப் பின்னணி காரணமாக ஒதுங்கி வாழும் தன்மை உடையவர்களாக இருப்பர். இவர்களை இனம்கண்டு, உற்சாகப்படுத்தி அதிலிருந்து விடுதலைபெறச் செய்தல்.

05. பகிர்ந்து வாழும் தன்மை. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, மன்னிக்கும் மனப்பான்மை, சமூக சேவையில் ஆர்வம், இவற்றை கவர்ச்சிகரமான விளையாட்டுக்கள் மூலம் உள்வாங்கச் செய்தல்.

மேற்கூறியவற்றின் மூலம் சிறுவர்களை சிறந்த மனிதர்களாக்கி குழந்தை இயேசு வாழ்ந்த வாழ்வை அவர்கள் வாழவும், கிறிஸ்துவின் தூதுரைப்பணியை தமது பணியாக ஏற்று அதை உணர்ந்து தாமே செயற்படவும் முன்வருவர். இன்னும் அன்பு, இரக்கம், தியாகம் போன்ற பண்புகளும் அவர்களிடத்தில் தானாக வளரும்.

திருப்பாலத்துவ சபை இலங்கையில் ஆரம்பித்து இருபது வருட நிறைவை இவ்வருடம் கொண்டாடுகின்ற வேளையில், இலங்கையில் திருப்பாலத்துவ சபை ஆரம்பிப்பதற்குக் காரண கர்த்தாவாக இருந்த பேராயர் மல்கம் றஞ்சித் மற்றும் அனைத்து அருட்பணியாளர்களுக்கும், ஊக்குவிப்பாளர்களுக்கும் திருப்பாலத்துவசபை அங்கத்தவர்களுக்கும் மன்னார் மறை மாவட்டத்தின் சார்பாக நன்றி கலந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் - குடும்ப. உளவளத்துணை
அருட்பணி மைய இயக்குனரிடமிருந்து

## திருமண முன்ஆயத்த வகுப்புகள்

மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் - குடும்ப, உளவளத்துணை அருட்பணி மையம் திருமணமாகவுள்ள இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்கான ஆயத்த வகுப்புக்களை ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மன்னார் பொதுநிலையினர் - குடும்ப, உளவளத்துணை அருட்பணி மையத்திலும், ஒன்றுவிட்ட ஒவ்வொரு மாதத்தில் வரும் இரண்டாவது சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் வவுனியா, இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்திலும் நடாத்தி வருகின்றது.

எனவே திருமண அருட்சாதனத்தில் இணைந்துகொள்ள இருப்பவர்கள் இந்த ஆயத்த வகுப்பில் கட்டாயம் கலந்து பயன் அடையவேண்டுமென்றும் குறிப்பிட்ட நேரத்திற்குச் சமூகம் தரவேண்டுமெனவும் கேட்கப்படுகின்றார்கள்.

இந்த ஆயத்த வகுப்புக்கள் சனிக்கிழமைகளில் காலை 9. 00 மணி தொடக்கம் மாலை 4. 00 மணி வரையிலும், ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் பகல் 2.00 மணி வரையிலும் நடைபெறும். இவ்வாயத்த வகுப்பிற்கு வருகின்றவர்கள் குறிப்பெடுப்பதற்கான எழுதுகருவிகளோடு திருவிவிலியமும் கொண்டுவர வேண்டும்.

இவ்வாயத்த வகுப்பில் பங்குபற்றாமல் விசேட சலுகைகளையோ, விதிவிலக்குகளையோ திருமண அருட்சாதனத்தில் இணைந்துகொள்ள எதிர்பார்க்க வேண்டாம் என எதிர்காலத் தம்பதியர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

### வகுப்புக்கள் நடைபெறும் திகதிகள்

| மன்னாரில் மாதம் | திகதி | வவுனியாவில் மாதம் | திகதி |
|---|---|---|---|
| தை | 20, 21 | தை | 20, 21 |
| மாசி | 17, 18 | மாசி | 17, 18 |
| சித்திரை | 14, 15 | வைகாசி | 12, 13 |
| வைகாசி | 19, 20 | ஆடி | 7, 8 |
| ஆனி | 16, 17 | புரட்டாதி | 8, 9 |
| ஆடி | 14, 15 | கார்த்திகை | 10, 11 |
| ஆவணி | 18, 19 | | |
| புரட்டாதி | 15, 16 | | |
| ஐப்பசி | 20, 21 | | |
| கார்த்திகை | 17, 18 | | |
| மார்கழி | 15, 16 | | |



## கத்தோலிக்க சமாதான நீதவான்கள் பற்றிய விபரம் கோரல்

மன்னார் மறைமாவட்டத்தில் சமாதான நீதவான்களாகப் பணியாற்றுகின்ற கத்தோலிக்கர்கள் பின்வரும் விபரங்களை எங்களுக்கு அனுப்பி வைக்குமாறு தங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்

*முழுப்பெயர், பணிநிலை: (அகில இலங்கை சமாதான நீதவான் சமாதான நீதவான்), நியமனத் திகதி, கிராமம், விலாசம், தொலைபேசி இலக்கம்:*

இத்தரவுகளைப் பூர்த்திசெய்து 2007. 02. 10ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எமக்கு அனுப்பிவைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி
**இயக்குனர்**
**பொதுநிலையினர் - குடும்ப, உளவளத்துணை**
**அருட்பணி மையம், குழந்தை இயேசு புரம்**
**தாழ்வுபாடு வீதி, மன்னார்.**

*தகவல்*
*அருட்பணி. கி. அந்தோனிதாஸ் டலிமா, இயக்குனர்*
*பொதுநிலையினர் - குடும்ப, உளவளத்துணை*
*அருட்பணி மையம், மன்னார்.*

# பங்குத்தள சங்கதிகள்

## அடம்பன் பங்கில் ஒளி விழா

அடம்பன் பங்கில் 2006ம் ஆண்டு ஒளி விழா நிகழ்வு பங்கு அருட்பணிச் சபையின் செயலாளர் தலைமையில் பங்குத் தந்தை அருட்திரு இராசநாயகம் அவர்களின் திருப்பலியுடன் மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகியது.

ஒளிவிழா நிகழ்வுகளின்போது பங்குத்தந்தை அவர்களால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆட்காட்டிவெளிப் பங்குத்தந்தை அருட்பணியாளர் சீமான் மரியதாஸ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றி சிறப்பித்தார்கள். அவரைத் தொடர்ந்து பேசாலைப் பங்கின் உதவி பங்குத்தந்தை சவுல்நாதன் அவர்களும் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்புரை வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்விற்கு கார்மேல் இல்ல அருட்சகோதரிகளும், அருட்சகோதரர்களும் கலந்து சிறப்பித்தார்கள். அதனைத் தொடர்ந்து அடம்பன் பங்கின் துணை ஆலயங்களில் இருந்து மறைக்கல்வி மாணவ, மாணவிகளும் கலந்து கலை நிகழ்ச்சிகளைச் சிறப்பித்ததுடன், மறைஆசிரியர், மறைக்கல்வி மாணவ, மாணவிகளைக் கௌரவிக்கும் முகமாக, பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இவற்றை அருட் - பணியாளர்களும், அருட்சகோதரிகளாலும் வழங்கி கௌரவித்தனர்.

*திரு. சவேரியான்,*
*அருட்பணிப் பேரவையின் உபசெயலர்*

## வவுனியாப் பங்கில் முதியோர் சங்கம்!

வவுனியாப் பங்கில் முதியோர் சங்க ஒன்றுகூடல் கடந்த 27.12.2006 அன்று காலை 11.00 மணியளவில் இடம்பெற்றது. இறம்பைக்குளமும் அதனை அண்டிய பகுதிகளிலும் வாழும் முதியோர் 15 பேர் வரை ஒன்றுகூடிச் சிறப்பாக தங்களின் அன்பை பகிர்தலின் மூலம் வெளிப்படுத்தினர். நிகழ்வில் மதிய போசனம் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

காலை 11.00 மணிக்கு செப வழிபாடும் நடைபெற்றது. இதனை அருட்தந்தை ஏ. செபமாலை நடத்தினார். பங்கு மேய்ப்புப் பணிச்சபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வு அனைத்தும் அன்பை மையப்படுத்துவதாக அமைந்திருந்தது. செபவழிபாடும் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்றது. முதியோர் யாவரும் அன்புச் சமூகமாக வாழ உறுதிபூண்டு இந்நிகழ்வுக்கும் பங்குத் திருச்சபைக்கும் சிறப்புச் சேர்த்தனர். இச்சங்கத்தின் தலைவராக எஸ். கயித்தாம்பிள்ளையும், பொருளாளராக எஸ். என். ஜி. நாதன் அவர்களும் செயற்பட்டு வருகிறார்கள்.

*அ. பேணாட், வவுனியா மன்னா செய்தியாளர்.*



தலைமன்னார் பங்கு பாடகர் குழாமினரின் திருவிழாவின்போது பங்குத் தந்தையும் - பாடகர் குழாமினரும்

## பம்பைமடுப் பங்கில் ஒளிவிழா!

வவுனியா பம்பைமடுப் பங்கின் தலைமை ஆலயமாக விளங்கும் புனித சூசையப்பர் (வேப்பங்குளம்) ஆலய ஒளிவிழா கடந்த 28.12.2006 அன்று கொண்டாடப்பட்டது. சிறுவர், இளைஞர்கள், மறையாசிரியர்கள், மாணவர்கள், குருக்கள், கன்னியர்கள், இறைமக்கள் என பல சமூகத்தவர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக. அருட்திரு லெம்பேட் அடிகளாரும், சிறப்பு அதிதியாக அருட்திரு குகணேஸ்வரன் அடிகளாரும் பங்கேற்றனர். அருட்திரு குகனேஸ்வரன் அடிகளார் தனது உரையில் எமது தேசத்தின் பாடுகள் துன்பங்களில் கலந்து கொண்டு மக்களோடு மக்களாக வாழா்து அவற்றை புறந்தள்ளி புறக்கணித்து உதறிவிட்டு அன்னிய தேசத்திற்கு பலர் செல்கின்றனர். இது நல்லதல்ல என்றும் இயேசுவைப்போல எமது மக்களின் துயரில் நாம் பங்குகொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

விழாவில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. நாட்டியம், பாடல், நாடகம், கரோல் எனக் காட்சிப்படுத்திய நிகழ்வுகள் சபையோரை மகிழ்ச்சியூட்டின. ஒரு விடயத்தை சிலர் சுட்டிக்காட்டினார்கள். அதாவது மேற்கத்தைய இசையைத் தழுவியதாகவும் அதனையே மையப்படுத்துவதாகவும் விழா முழுமையும் காணக்கிடந்தது என்றும் சற்று பாரம்பரியக் கலை வடிவங்களையும் காட்சிப்படுத்தியிருந்தால் விழா சபையை களிப்பில் ஆழ்த்தியிருக்கும் என்றும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினர். பொதுவில் விழா காலத்தின் தேவையறிந்து பாலகன் இயேசுவுக்கு புகழ் சூட்டும் விழாவாகவும், நாளைய வாழ்வின் நம்பிக்கை ஒளிக்கீற்றாகவும் காணத்தெரிந்தது.

*அ. பேணாட், வவுனியா மன்னா செய்தியாளர்.*

முருங்கன் பங்கு வழிபாட்டுக் குழுவினரின்

## 20வது ஆண்டு நிறைவுவிழா

முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலய வழிபாட்டுக் குழுவினரின் 20வது ஆண்டு நிறைவுவிழா தைப்பொங்கல் தினத்தன்று முருங்கனில் நடைபெற்றது. முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயம், யாகப்பர் ஆலயம், பெருச்சார்கட்டு புனித அந்தோனியார் ஆலயம், சுண்டிக்குளி கர்த்தர் ஆலயம், கன்னாட்டி புனித தோமையார் ஆலயங்களைச் சேர்ந்த இளைஞர்கள், யுவதிகள், இவ்வாண்டு ஒன்றிணைந்து, முருங்கன் வழிபாட்டுக் குழுவில் இணைந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

கடந்த 07.01.2007 அன்று ஞாயிறு திருப்பலி முடிந்ததும் முருங்கன் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஸ்ரீபன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு இடம்பெற்றது. கடந்த 10 ஆண்டுகளாக தலைவராகக் கடமையாற்றிய ஏ. டி. தேவதாசன் அல்மேடா அவர்கள் சபையினரால் ஏகமனதாக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். செயலாளராக செல்வி ஆன் மைக்கலும், பொருளாளராக திருமதி மஞ்சு பீரிஸ் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். இக்கூட்டத்திற்கு மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி விக்ரர் சோசை அடிகளார் கலந்துகொண்டது விசேட அம்சமாகும். அர்ப்பணிப்புடனும், தியாக சிந்தையுடனும் செயற்பட ஒவ்வொரு உறுப்பினரும் உறுதி பூண வேண்டுமென பங்குத்தந்தை கேட்டுக்கொண்டதற்கிணங்க அனைவரும் அதனை ஏற்று நடப்பதாக வாக்குறுதி அளித்தனர்.

*வழிபாட்டுக்குழு, முருங்கன்.*

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முன்னாலும் பேக்கரிகளின் முன்னாலும் இராணுவக் கடைகளின் முன்னாலும் மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றார்கள்!

## யாழ் குடாநாட்டு நெருக்கடி தொடர்பாக

### யாழ் ஆயர் இணைத் தலைமை நாடுகளுக்கு அவசரக் கடிதம்



யாழ் குடாநாட்டில் நிலவிவரும் நெருக்கடி நிலை தொடர்பாக யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இணைத்தலைமை நாடுகளுக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

அவ்வேண்டுகோளில், யாழ்ப்பாணத்தில் உணவுத் தட்டுப்பாட்டாலும் போக்குவரத்து இன்மையாலும் நிலவுகின்ற அவல நிலைபற்றி தங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம். ஏ.9 பாதை மூடப்பட்ட பின்னர் அரசு யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற 6 இலட்சம் மக்களிற்கு உணவுப் பொருட்களையும், எரிபொருட்களையும் கப்பல் மூலமாக கொண்டுவர முயற்சிக்கின்றது. இது ஒரு கடினமான, நடைபெற முடியாத வேலையாகும்.

ஆண்டின் இறுதிப்பகுதியில் நிலவுகின்ற மழைகாலத்தில் கொந்தளிக்கும் கடல் வழியாக இவ்விதமாக பொருட்களை அனுப்புவது சாதகமானது அல்ல. அத்துடன் கொண்டுவரப்படும் பொருட்கள் போதுமானதாக இல்லை என்பதோடு கப்பல்களும் உரிய காலத்தில் வந்து சேர்வதில்லை. இதன் காரணமாக பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களின் முன்னாலும் பேக்கரிகளின் முன்னாலும் இராணுவக் கடைகளின் முன்னாலும் மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றார்கள். எரிபொருள் நிலையங்கள் முன்னாலும் இதே காட்சியையே காணக்கூடியதாக இருக்கின்றது.

இதேவேளை அத்தியவசியப் பொருட்கள் கள்ளச் சந்தையில் நினைக்க முடியாத உயர்ந்த விலையில் விற்கப்படுகின்றது. குழந்தைகளிற்கான உணவுப் பொருட்களுக்கும் பால்மா வகைகளுக்கும் பிஸ்கட் வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

ஸ்ரீலங்கா அரசானது மேற்கூறப்பட்ட மக்களின் அன்றாட கடின நிலைகளைப் பாராது குருட்டுத்தனமாக இருப்பதோடு தரைவழிப் பாதையைத் திறந்து பொருட்களை கொண்டுவருவதற்கும் மறுத்து வருகின்றது. தனியார் வர்த்தகம் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒவ்வொரு நாளும் கொலைகளும், ஆட்கடத்தல்களும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது.

மக்கள் இந்த யுத்தத்தினால் சலிப்படைந்த நிலையில் அமைதியாக வாழவே விரும்புகின்றார்கள். எனவே இலங்கை அரசை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகக் கடைப்பிடித்து ஏ. 9 பாதையை உடனடியாகத் திறந்து மக்கள் ஒரு திறந்த சிறைச்சாலையில் இருக்கின்றோம் என்ற மனநிலையில் இருந்து விடுபட இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கும்படி தங்களை வேண்டுகின்றோம்.

*(நன்றி - பாதுகாவலன்)*

## குருக்களின் பெற்றோர்

# இறைபதம்

**ஜெயசீலன் அடிகளாருடைய தாயார்**

தற்போது உரோமாபுரியில் கல்வி பயிலும் செபமாலைத் தாசர் சபையைச் சேர்ந்த ஜோசப் ஏ. ஜெயசீலன் அடிகளாரின் தாயார் (சொந்த இடம் - சில்லாலை) அவர்கள் கடந்த 01.11.2006 அன்று புதுக்குடியிருப்பில் இறைபதமடைந்தார். 02.11.2006 அன்று அடக்க ஆராதனைகள் புதுக்குடியிருப்பில் இடம்பெற்றன.

**ஜெறோம் அடிகளாரின் தந்தையார்**

உரோமாபுரியில் கல்வி பயிலும் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த ஜெறோம் அடிகளாரின் தந்தையார் (சொந்த இடம் சுன்னாகம்) மரியான் வெலிச்சோர் ஆபரணம் அவர்கள் கடந்த 31.10.2006 அன்று காலமானார்.

**பிரான்சிஸ் அடிகளாரின் தாயார்**

கிளரீசியன் சபையைச் சேர்ந்த கே.எஸ். பிரான்சிஸ் அடிகளாரின் தாயார் கெலன் மேபிள் பிரான்சிஸ் 29.07.2006 அன்று கனடாவில் காலமானார்.

**பற்றிக் அடிகளாரின் தாயார்**

தற்போது கனடாவில் பணியாற்றும் திருவுளச் சபையைச் சேர்ந்த பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளாரின் தாயார் திருமதி மேரி மாக்கிறேட் ரஞ்சிதம் ஞானப்பிரகாசம் 13.10.2006 அன்று அவுஸ்ரேலியாவில் காலமாகி அடக்க ஆராதனைகள் 21.10.2006 அன்று சிட்னியில் நடைபெற்றது.

*தமது புதல்வர்களை இறைபணிக்கு அர்ப்பணித்த இந்த அன்பு பெற்றோரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற மன்னா அன்பு நெஞ்சங்களின் செபங்களைக் காணிக்கையாக்குகிறோம்.*

# ஐக்கிய நாடுகள் சபையே எமக்குக் கைகொடு!

## யாழ் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைய ஏற்பாட்டில் ஐ.நா. செயலருக்கு 10 ஆயிரம் அஞ்சல் அனுப்பும் திட்டம்

வடபகுதியில் இன்று நிலவிவரும் மிக நெருக்கடியான சூழ்நிலையை சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்தி உடன் நடவடிக்கை எடுக்க அழுத்தம் கொடுக்கும் வகையில் யாழ் மறைமாவட்டத்தில் ஏறக்குறைய 10 ஆயிரம் அஞ்சல் மடல்களை ஐக்கிய நாடுகள் செயலருக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அனைவரும் அச்சடிக்கப்பட்ட இம்மடல்களை யாழ் மறைமாவட்டப் பங்குத் தந்தையர்களிடமிருந்து பெற்று, தமது குறிப்புகளையும் எழுதி கையொப்பமிட்டு முத்திரை ஒட்டி அனுப்புமாறு அழைக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி அட்டையில் விலாசம் பொறிக்கப்பட்டுள்ளது.

இவ்வட்டையில் பின்வரும் விடயங்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன. உரிய அளவுக்கு உணவு இல்லாமல் படிப்படியாகச் சாகின்றோம். உப உணவுகள் இல்லாமல் வலு அற்ற இனமாகின்றோம். ஏனைய வாழ்க்கைத் தேவைகள், எரிபொருள் கிடைக்காமையால் நலிந்தவர்களாகின்றோம். போக்குவரத்துத் தடையால் சிறைப்படுத்தப்பட்டுள்ளோம். தொடர்பு சாதனங்களற்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம். எந்நேரமும், குறிப்பாக ஊரடங்கு நேரத்தில், கொல்லப்படுகின்றோம். எம் பிள்ளைகள் வீடுகளிலிருந்தும், தெருக்களிலிருந்தும் கடத்திச் செல்லப்படுகின்றனர். எமது வாகனங்கள் படையினரால் பறிக்கப்படுகின்றன. படையினர் எங்குமுள்ளதால் பேரச்சத்துடன் வாழ்கின்றோம். எம்மில் பலரின் வீடுகளும் காணிகளும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. படையினர் எமது பாதுகாப்புக்காக என்ற நிலை மாறி, அவர்களின் பாதுகாப்புக்காக எமது வாழ்வின் பல அம்சங்களை இழந்துள்ளோம்.

*(நன்றி - பாதுகாவலன்)*

## மன்னார் மறைமாவட்ட

# சமூகத் தொடர்பு அருட்பணி மையம்



அன்பின் பங்குத் தந்தையர்களுக்கும், பணியாளர்களுக்கும், பங்கு மக்களுக்கும்,


### "உண்மையை அறிவிக்க ஓர் அழைப்பு!"

எமது மன்னார் மறைமாவட்டத்தின் 25வது ஆண்டின் நிறைவிலே நாம் புதியதொரு பணி மையத்தை ஆரம்பித்திருக்கின்றோம். சமூகத் தொடர்புசாதனங்கள், கலை, பண்பாடு ஊடாக நற்செய்தியை, இயேசு கொண்டுவந்த "மனிதத்தை" எம் மக்களுக்குக் கொடுப்பது எமது பணியின் நோக்கமாகும்.

எனவே இப்பணி மையத்திலே சேர்ந்து உழைக்க ஆர்வமுள்ளவர்களை அன்போடு அழைக்கின்றோம். கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், பாடகர்கள், எழுத்தாளர்கள், பங்குத்தந்தையர்கள் ஊடாகத் தொடர்புகொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றோம். புதிய சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் குடும்பத்தை விரைவில் உருவாக்குவோம்.

### 2007ம் ஆண்டின் சில திட்டங்கள்

**வகுப்புக்கள்**



- நாடகப் பட்டறை
- சங்கீதம்
- மிருதங்கம்
- நாட்டியம்
- ஹார்மோனியம்

இப்பயிற்சிக்கு போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்கும் போது மாணவர்களுக்குரிய திகதிகளை அறிவிப்போம்.

எம் மறைமாவட்டத்தின் எதிர்கால சந்ததியினருக்கு "நற்செய்தியை" கலையூடாக வழங்க தகுந்த ஆசிரியர்களின் உதவியையும் எதிர்பார்க்கின்றோம்.

**போட்டிகள்**

நாடகங்கள், பாடல்கள், கவிதைகள், நாட்டுக்கூத்துகள்

காலம் : உயிர்ப்பின் காலம்

இடம் : மறைக்கோட்டங்கள்

இறுதிப்போட்டி மறைமாவட்ட ரீதியாக

பொருள் : சாட்சிய வாழ்வு/ மனிதம்/ சமாதானம்

நேரம் : நாடகங்கள் 30 நிமிடம்


நாட்டுக்கூத்து 1 மணி

சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் பணிகள் பற்றி பங்குகள், பாடசாலைகளாக அறிவூட்ட நாம் விரும்புகிறோம். பங்குத் தந்தையரின் ஆதரவில் விரைவாகத் தொடர்புகொள்ளுங்கள்.

இயக்குனர் - அருட்பணி. அலெக்சாண்டர் பெனோ
சமூகத் தொடர்பு அருட்பணி மையம், பெற்றா, மன்னார்
தொ. இல. 023 – 22507[illegible] / 077– 5382514

## மறைந்த திருத்தந்தை 2ம் யோவான் பவுல் பற்றிய

# திரைப்படம் வெளியீடு



மறைந்த திருத்தந்தை 2ஆம் யோவான் பவுலின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட திரைப்படம் (DVD) வெளியாகியுள்ளது. போலந்து நாட்டில் அவரது இளமைப்பராயம் தொட்டு வத்திக்கானில் அவரது இறுதிநாட்கள் வரையான நிகழ்வுகளை இத்திரைப்படம் உள்ளடக்கியுள்ளது. இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களைக் கவர்ந்த, திருச்சபைக்கும் உலகிற்கும் புத்துருக் கொடுக்கும் திருத்தந்தையின் பணி இதில் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

கேரி எல்விஸ் என்பவர் இளம்பராயத்து கரோல் வொயிற்றெலாவாகவும், யோண் வொயிற் என்ற பிரபல்யமான நடிகர் திருத்தந்தையாகவும் நடித்துள்ள இத்திரைப்படத்தில் பெண் கசாரா, ஜேம்ஸ் குரோம்வெல், கிறிஸ்தோப்பர் லீ போன்ற நடிகர்களும் பங்கேற்றுள்ளார்கள். வத்திக்கானின் துணையோடு போலந்து, உரோமாபுரி ஆகிய இடங்களில் தயாரிக்கப்பட்டுள்ள இத்திரைப்படம் காலஞ்சென்ற திருத்தந்தையின் வாழ்க்கை வரலாற்றில் பொக்கிஷமாக வர்ணிக்கப்படுகின்றது.

## கொழும்பு மறைமாவட்டம் பற்றிய

# சில தரவுகள்

த மெசஞ்சர் (The Messenger) என்ற கத்தோலிக்க ஆங்கில வாரப் பத்திரிகை அண்மையில் கொழும்பு மறைமாவட்டம் பற்றிய சில தரவுகளை வெளியிட்டிருந்தது. மன்னா வாசகர்களுக்காக அதைத் தருகின்றோம்.

கொழும்பு மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்களின் தொகை 321. இதில் மறைமாவட்டக் குருக்கள் 279. துறவற சபைக் குருக்கள் 42. வெளிநாட்டில் கல்வி பயில்வோர் 18. கண்டி தேசிய குருமடத்தில் கல்வி கற்கும் குருமட மாணவர்கள் 98.

124 பங்குகளைக் கொண்ட கொழும்பு மறைமாவட்டத்தில் 47 துறவற சபையினர் பணியாற்றுகின்றனர். இவர்களில் 27 பெண் துறவற சபையினரும் 20 ஆண் துறவற சபையினரும் அடங்குவர்.

## 50 ஆண்டுப் பணியில்

### அப்போஸ்தலிக்க கார்மேல் சகோதரிகள்

அப்போஸ்தலிக்க கார்மேல் சகோதரிகள் 8 பேர் கடந்த ஆண்டு ஆடி மாதம் 9ம் திகதி தங்கள் பணியின் 50ஆம் ஆண்டை ஆரம்பித்துள்ளார்கள். இந்த ஆண்டு (2007) 50 ஆண்டுகளை நிறைவு செய்யும் இவர்கள் இறைவன் தமக்குப் பொழிந்த அனைத்து வரங்களுக்காகவும் இந்த யூபிலி ஆண்டில் இறைவனுக்கு விசேட விதமாக நன்றி கூறுகிறார்கள்.

இந்நாட்களில் இவர்களுடன் இணைந்து இறைவனுக்கு நன்றி கூறவும் இவர்களுக்காக செபிக்கவும் மன்னா வாசகர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள். துறவற வாழ்வில் பொன்விழாக் காணும் அருட்சகோதரிகள் விபரம் வருமாறு:

1. அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரி அ.கா. (யாழ் மறைமாவட்டம்),
2. அருட்சகோதரி லைசா அ.கா. (யாழ் மறைமாவட்டம்)
3. அருட்சகோதரி ஜெறோம் அ.கா. (யாழ் மறைமாவட்டம்)
4. அருட்சகோதரி ஜேம்ஸ் அ.கா. (யாழ் மறைமாவட்டம்)
5. அருட்சகோதரி மாறி லூயிஸ் அ.கா. (மட்டுநகர் மறைமாவட்டம்)
6. அருட்சகோதரி றொமியூவா அ.கா. (கொழும்பு மறைமாவட்டம)
7. அருட்சகோதரி ஆட்டிமியா (கொழும்பு மறைமாவட்டம்)
8. அருட்சகோதரி வேற்றா அ.கா. (கொழும்பு மறைமாவட்டம்)

# சிறுவர் பொழிவு



## தந்தை சொல்மிக்க மந்திரமில்லை
### – சிறுவர் கதை –

ஓர் ஊரில் ஓர் அழகான சிறிய குடும்பம் மிகவும் அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ்ந்து வந்தது. அந்தக் குடும்பத்திலே ஓர் சுட்டிப் பையன் இருந்தான். அவன் எப்போதும் குறும்பு செய்துகொண்டே இருப்பான். அவன் பெரியவர்கள் மற்றும் வீட்டில் உள்ளவர்கள் அனைவரையும் “டீ” போட்டுக் கூப்பிடுவது வழக்கமாக இருந்தது. இதைக் கண்ட அவனின் தந்தை அவனை அழைத்து, “இனிமேல் நீ யாரையும் டீ போட்டுக் கூப்பிடக்கூடாது” என்று கடுமையாகக் கண்டித்து அனுப்பிவைத்தார். அவனும் பயத்தால் “சரியப்பா இனிமேல் யாரையும் டீ போட்டுக் கூப்பிட மாட்டேன். டீ என்ற வார்த்தையைப் பாவிக்கவே மாட்டேன்” என்று கூறி மன்னிப்புக் கேட்டான்.

நாட்கள் நகர்ந்தன. இச்சிறுவன் அப்போது இரண்டாம் தரத்தில் படித்துக்கொண்டிருந்தான். ஒரு நாள் வகுப்பாசிரியர் அவனை அழைத்து “விமல் முன்னுக்கு வந்து A, B, C, D சொல்லு பார்க்கலாம். அனைவரும் ஆயத்தமாக இருங்கள். அனைவரையும் கூப்பிடப் போகின்றேன்” என்று கட்டளையிட்டார். உடனே விமல் முன்னுக்கு வந்து ஆசிரியரின் பக்கத்தில் நின்று A, B, C, E, F :. என்று சொன்னான். ஆசிரியர் அவனை மீண்டும் சொல்லுமாறு பணித்தார். அவனும் திரும்பத் திரும்ப A, B, C, E, F .. என்றே சொல்லிக்கொண்டு போனான். ஆசிரியருக்குக் கோபம் தலைக்கு ஏறியது. அவ்னைப் பிடித்து இழுத்து, “எங்கேடா Dயைக் காணவில்லை” என்று கேட்டார். அவன் அமைதியாக நின்றான். திரும்பவும் ஆசிரியர் அவனிடம் சொல்லப் போறியா? அல்லது நான் சொல்ல வைக்கவா? என்று கத்தினார். அதற்கு அவன், “எனது அப்பா டீ போட்டுச் சொல்லக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி இருக்கிறார். மீறிச் சொன்னால் எனக்கு அடிப்பார்” என்று அழுத்தமாகவும், ஆணித்தரமாகவும் கூறி முடித்தான்.



நண்பர்களே, பார்த்தீர்களா? தந்தையின் கண்டிப்பு சிறுவர்களை எந்தளவுக்குப் பாதிக்கின்றது என்று.

ஜெ. அமலன், 5ம் தரம், கற்கிடந்தகுளம்

# கவிதைப் பூக்கள்

## மாதா!

அருள் நிறை மரியே என்று அழைக்கப் பெற்ற மாதா
இருளும் வாழ்வில் ஒளியைப் பொழிய இதயம் மீதில் வாராய்!
கர்த்தர் தம்மை உதரம் தாங்கி களிப்படைந்த மாதா
சர்வவல்ல தேவன் தம்மில் சார்ந்து நிற்க வாராய்!
மன்னருக்கு மன்னர் தந்து மகிமை பெற்ற மாதா
உன்னதர்க்கு பூவுலகில் உதவிபுரிய வாராய்!
விண்ணுடுக்கள் தலையில் ஏந்தி விளங்கப் பெற்ற மாதா
மண்ணில் இடுக்கண் மறைய வேண்டி மண்ணில் நீயும் வாராய்!
வியாகுல்மாய் மகனை ஏந்தி வருந்தி அழுத மாதா
தாய்க்குலத்தின் பேரொளியாய்த் தரணி மீதில் வாராய்!
வானகத்தின் இராக்கினியாய் வாழ்த்தப்பெற்ற மாதா
கானகத்தில் ஓடி வந்தோம் கையை நீட்டிக் காராய்!
லூர்து கெபியில் காட்சி கொடுத்து புதுமை புரிந்த மாதா
பாருலகின் நாத்திகத்தை சாகடிக்க வாராய்!
நீக்கமற நிறைந்திருக்கும் நெஞ்சிற்கினிய மாதா
ஏக்கமற நீங்கிடவே எழுந்து இங்கு வாராய்!

## இயேசுவின் வாழ்வில் மூன்றின் மகிமை

இயேசு என்ற பெயர் மூன்றெழுத்து.
பாலன் இயேசுவை வணங்க வந்த அரசர்கள் மூன்று பேர்.
தேவாலயத்தில் இயேசு காணாமல் போய்
கண்டுபிடிக்கப்பட்டது மூன்றாம் நாள்.
இயேசுவை சாத்தான் சோதித்தது மூன்று முறை.
இயேசுவின் சிறப்புச் சீடர்கள் மூன்று பேர்.
இயேசு பாடுகளை முன்னறிவித்தது மூன்று முறை.
இயேசுவைப் பேதுரு மறுதலித்தது மூன்று முறை.
இயேசு கெஸ்தமெனியில் மரண வேதனைப்பட்டு
செபித்தது மூன்று முறை.
இயேசு உருமாறியபோது அவருடன் இருந்த சீடர்கள் மூவர்.
இயேசு சிலுவையுடன் விழுந்தது மூன்று முறை.
இயேசுவை அறைந்த ஆணிகள் மூன்று.
இயேசுவின் பகிரங்கப்பணி மூன்று வருடம்.
இயேசு உயிர் நீத்தது நண்பகல் மூன்றாம் மணிவேளை.
இயேசுவின் சிலுவையடியில் நின்றவர்கள் மூன்று பேர்.
இயேசு உயிர்த்தது மூன்றாம் நாள்.
பாஸ்கா மறைபொருள் மூன்று.

*- எஸ். மெற்றில்டா (சோனியா), அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்*

## பெண்



உலகின் தொடக்கத்தில் அழிவிற்கு காரணமானவளும் - பெண்
உலகின் மீட்புக்குத் தன்னையே அளித்தவளும் - பெண்
படைக்கும் ஆற்றலைப் பெற்றுத் திகழ்பவளும் - பெண்
படைப்பிலே சிறந்த இடத்தைப் பெற்றவளும் - பெண்
குடும்பம் குட்டிச் சுவராகக் காரணமானவளும் - பெண்
குடும்பம் துலங்க குலவிளக்கானவளும் - பெண்
இகழ்ச்சியை ஏற்று இன்சொல் பகர்பவளும் - பெண்
இல்லறம் தழைக்க இன்னல்கள் சுமப்பவளும் - பெண்
தாரமாக வந்து தன்னையே அழிப்பவளும் - பெண்
தாயாக நின்று தாலாட்டுப் பாடுபவளும் - பெண்
தன்னை உருக்கித் தனியிடம் பெற்றவளும் - பெண்
தன்னலம் கருதாத் தனிப்பெரும் தலைவியும் - பெண்

*- செல்வி. மேரி பற்றிக், சின்னக்கடை, மன்னார்*

## சமாதானம்



அன்னமிட்டால் அன்னதானம்.
இரத்தம் கொடுத்தால் இரத்ததானம்.
யுத்த நிலையில் அமைதி வந்தால்
நிலையான சமாதானம்.

*வே. யூலி, மாதிரிக்கிராமம், வங்காலை*

## ஆன்மீகம்



அன்பில் வேண்டும் ஆன்மீகம்
ஆலயத்தில் வேண்டும் ஆன்மீகம்
இல்லத்தில் வேண்டும் ஆன்மீகம்
உள்ளத்தில் வேண்டும் ஆன்மீகம்
எல்லையற்றது ஆன்மீகம்
உயர்வதைத் தருவது ஆன்மீகம்
நமக்கு வேண்டும் ஆன்மீகம்
வாழ்வுக்கு உறுதுணை ஆன்மீகம்
இறைவழிபாடு ஆன்மீகம்.

*ஞா. கிறிஷாந்தா குயின்சி, சாளம்பன்*

## ப ய ண ம்

நற்செய்திப் பணிக்கொரு - பயணம்
பணிசெய்ய முனைந்திட்ட - பயணம்
பணியாளர் மேற்கொண்ட - பயணம்
தனியொரு குழுவின் - பயணம்
தன்னார்வப் பணியாளர் - பயணம்
அன்பினால் ஏற்பட்ட - பயணம்
அருள்வழி காட்டிடும் - பயணம்
ஆவியைப் பெற்றவர் - பயணம்
ஆசையாய்ச் செல்கின்ற - பயணம்
இன்னல்கள் நிறைந்திட்ட - பயணம்
இறைவனை அறிவிக்கப் - பயணம்
சீடர்கள் மேற்கொண்ட - பயணம்
சீடராய் மாற்றிடச் செல்லும்- பயணம்
தன்நலம் துறந்திட்ட - பயணம்

- செல்வி. மேரி பற்றிக், சின்னக்கடை, மன்னார்

## கனவு காணுங்கள்

கனவுகள் ஒருநாள் நனவாகுமென்றால்
கனவு காணுங்கள்.
மதங்கள் யாவும் ஒருநாள் சம்மதம்
கொள்ளும் என்றால் கனவு காணுங்கள்.
ஈழத்தில் போர் ஓயும் தமிழ் சிங்களம்
ஒரு நாள் சமத்துவம் பெறும்
எனும் கனவு காணுங்கள்.

அணு ஆயுதம் ஒழியும்.
உலகில் போர்கள் கழியும்.
யாதும் ஊரே, யாதும் நாடே,
யாதும் இனமே, யாதும் மொழியே,
யாவரும் கேளீர் என யாவரும்
உணரும் நாளொன்று உண்டு
எனும் கனவு காணுங்கள்.
நல்லவை அனைத்தையும் கனவாகவாவது காணுங்கள்!

*ச. அன்ரனீற்றா, நானாட்டான்*

## பொன் மொழிகள்


♣ வாழ்வில் கண்டிப்பாக ஓர் இலட்சியம் இருக்க வேண்டும் அப்படி இருந்தால்தான் வாழ்வில் உயர முடியும். (ஸ்ரீவன்சன்)

♣ அழகே வாய்மை, வாய்மையே அழகு. இவ்வுலகில் நீங்கள் அறிவதும் அறிய வேண்டியதும் அதுவே. (ஜான் கீட்ஸ்)

♣ உடலில் ஏற்படும் கட்டுக்களையும் சீழ்களையும் அகற்றுவதை விட உள்ளத்திலுண்டாகும் தவறான எண்ணங்களை நீக்குவது சிறந்தது. (எபிக்டெடஸ்)

♣ ஓர் ஆண் தன் உணர்வைப் பொறுத்து முதியவன் ஆகின்றான். ஓர் பெண் தன் தோற்றத்தைப் பொறுத்து முதியவளாகின்றாள். (மாட்டிமன் காலின்ஸ்)

## கொஞ்சமாச் சிரிங்க



அம்மா : டேய் ரவி ஏன்டா தம்பி அழுகிறான்?
ரவி : அவன் நான் சாப்பிடுகிற சாப்பாட்டை தரச்சொல்லி அழுகிறான்.
அம்மா : அப்ப அவன்ர சாப்பாடு எங்கடா?
ரவி : அவன்ர சாப்பாட்டத்தான் அம்மா நான் சாப்பிடுறன்.

********

அம்மா : டேய் ஜெகன்,பொய்யெல்லாம் சொல்லக் கூடாதடா
ஜெகன் : ஏனம்மா?
அம்மா : நம்ம வீட்ட இருக்கின்றாரே இயேசு அவர் கையில சிலுவை வைத்திருக்கிறாரடா, அதால உனக்கு அடிச்சிடுவார்.
ஜெகன் : எனக்கு அது தெரியும் அதனாலதான் அவர் கையில இருந்த சிலுவை இப்ப என்ர கையில.

********

ஆசிரியர் : அப்பாவைப்பற்றி கட்டுரை எழுதிற்று வரச்சொன்னா 2 வருடத்திற்கு முன்பு நீர் எழுதின அதே கட்டுரையைத்தானே இப்பவும் எழுதிற்று வந்திருக்கிறீர்?
மாணவி : 2 வருடத்திற்கு முன்பிருந்த அதே அப்பாதானே சேர் இப்பவும் இருக்கிறார்.

*ஆர். ரஜனி, ஈசன் குடியிருப்பு, நெளுக்குளம், வவுனியா.*

நோயாளி : வாய் நாற்றம் தாங்க முடியல்ல டாக்டர்.
டாக்டர் : எப்போதிருந்து?
நோயாளி : நீங்க வாய்திறந்து பேச ஆரம்பிச்சதிலிருந்து.

*- ம. கில்டா, பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில்*

நோயாளி : டாக்டர் என்னை ஏமாத்தின காதலியை மறக்க குடிக்க ஆரம்பிச்சேன். காதலியை மறந்தேன். குடியை மறக்க உங்ககிட்ட ட்ரீட்மென்ட் எடுத்தேன் குடியை மறந்தேன். ஆனா....
டாக்டர் : அப்புறம்...?
நோயாளி : உங்க நர்ஸை மறக்க வேணும் என்றா பழையபடி குடிக்க ஆரம்பிக்கணும்...!

*- ப. மேரி றஜீந்தனா, புதுக்கமம், உயிலங்குளம்*

ரீச்சர் : ரவி, 100ல் ஒன்றைக் கழித்தால் எத்தனை?
மாணவன் : 00 ரீச்சர்.

********

நோயாளி : டாக்டர், இரண்டு நாளா வயிற்றுவலி பொறுக்க முடியவில்லை.
டாக்டர் : நீங்கள் ஏன் வயிறு வலிக்கும்போது பொறுக்கப் போனீங்க.

*- வே. மார்த்தாள், கந்தசேனை, நமுனுகுல.*

அப்பா : ஏண்டா இண்டைக்கு இன்டர்வியு இருக்கு போகலையா?
மகன் : நாலு பேர் நம்மைக் கேள்வி கேட்கிற மாதிரி நடந்துக்கக்கூடாதுன்னு நீங்கதானே சொன்னீங்க.

*- கி. டெலா றோஸ்,5ம் வட்டாரம், விடத்தல்தீவு.*

## துளிப்பா

**கோபம்**
இயலாமையின்
வெளிப்பாடு.

**மன்னிப்பு**
தண்டனைகளில்
பெரியது.

**கண்**
பாவத்தின்
முக்கிய காரணி.

**பெயர்**
நமக்குச் சொந்தமானது.
ஆனால் மற்றவரே
உபயோகிப்பர்.

**பணம்**
உயிரையும் பறித்துவிடும்
ஓர் உயிர் அற்ற காகிதம்.


**மழை**
விவசாயிகளின்
கண்ணீர் கண்டு
வான் செய்யும்
இலவச நீர் சேவை.

**அமாவாசை**
தேய்வின் சோகம்
தாங்காமல்
நிலவு செய்த
வேலை நிறுத்தம்.

**காதல்**
மனதுள் நினைத்து
உயிரைக் குடிக்கும்
ஓர் உயிர் கொல்லி.

**இதயம்**
பல கோடி
எண்ணங்களைத்
தனிமையில் சுமக்கும்
ஓர் சுமை தாங்கி

**கண்ணீர்**
கடவுளால்
பெண்மைக்குக் கிடைத்த
அள்ள அள்ளக் குறையாத
சீதனம்.



*- ஏ. சறோ கூஞ்ஞ, தாழ்வுபாடு, மன்னார்*

தைப்பொங்கல் சிறப்பிதழ்... தைப்பொங்கல் சிறப்பிதழ்... தைப்பொங்கல் சிறப்பிதழ்...

# பொங்கலாம் வாங்க!

**சேற்றிலே கால்வைக்கிறவர்களோடு சோற்றிலே கைவைக்கும் அத்தனை தமிழர்களும் உவந்து சொல்லும் நன்றிவிழா.**

அருட்பணியாளர்
ஜெயந்தன் பச்சேக் (அமதி)

*"நீங்க எந்த இடம்?"*
*"நாங்க எருக்கலம்பிட்டி. – நீங்க எந்த இடம் பாதர்?"*
*"நானும் எருக்கலம்பிட்டிதான்."*
*"இருக்க முடியாதே எருக்கலம்பிட்டியில தமிழ் ஆக்கள் இல்லையே!"*
*"அப்படியா?... நீங்க இப்ப கதைக்கிற பாஷை என்ன?"*
*"தமிழ்தான் ... ஆனா நாங்க முஸ்லீம்"*
*"சரி, ஆனா தாய்மொழி தமிழெண்டா(ல்) நீங்க தமிழ்தான்" ..ம்.."*

இப்படித் தொடர்ந்தது அண்மைய இலகு அரட்டை உரையாடல். யுவதிகளும் பாதரும் தங்கள் தங்கள் வாதங்களில் சரியான கருத்துக்களையே தொண்டிருந்தனர்.

இஸ்லாம், கிறீஸ்தவ மதங்களின் வருகைக்கு முன்பு தமிழர்களின் தனிமதம் சைவமாகவே இருந்தது. (புத்த மதம் அறிமுகமாயிருந்தாலும் அது காலூன்றவில்லை) தமிழும் சைவமும் கைகோர்த்தே வளர்ந்தன. சைவத்தால் தமிழும் தமிழால் சைவமும் வளர்ந்தன, வளர்க்கப்பட்டன. அதனால் இயல்பாகவே தமிழர்கள் 'என்றால் சைவர்களென்றும் சைவர்களென்றால் தமிழர்களென்றும் அறியப்படுகின்ற நிலை சகஜமாகியது.

பிந்திய மதங்களின் வருகையின் பின்னர் வரலாற்று, அரசியல், கலை, கலாச்சார செல்வாக்கிற்குட்பட்டு தமிழர்கள் சிலர் சைவ மதந்தவிர்ந்த பிற மதங்களிலும் இணைந்துகொண்டனர், இணைக்கப்பட்டனர். ஆயினும் சைவர்களோ தொடர்ந்தும் தமிழர்கள் என்றுதான் அறியப்பட்டனர், அடையாளப்படுத்தினர். அடையாளப்படுத்திக்கொண்டனர்.

புதுமதம் தழுவிய தமிழர்களோ தத்தமது மதப்பெயரில் அறியப்பட சைவர்கள் மொழிப் பெயரிலேயே தொடர்ந்தும் அறியப்பட்டனர். எனவே தமிழர்கள் என்றால் சைவ சமயத்தினர் என்றே கருதப்பட்டது.

புதுமதந்தழுவிய இஸ்லாமியரும் கிறிஸ்தவரும் தத்தம் மத, அடையாள, வழிபாட்டு, கலாச்சார கூறுகளைக் கைக்கொண்டதனால் தம் முந்தைய சைவ கலாச்சாரத்திலிருந்து வேறுபடலாயினர், வேறுபடுத்தப்பட்டனர். நாடு பிடிக்கப் புறப்பட்ட மேற்கத்தேயர் மதமாற்றத்தையும் தம் இராணுவ அரசியல் பொருளாதாரக் காரணங்களுக்கு சாதகமாக்கிக்கொண்டு தம் திட்டத்தில் வென்றனர். உள்ஞரிலோ ஐரோப்பியரிடம் தோற்றுப்போகின்ற அரசர்களும் குடிகளும் புதுமதம் தழுவியவர்கள் மட்டில் ஒரு கசப்புணர்வுடன் இருந்தனர். அது இயல்பானதொரு நிலைப்பாடுதான்.

## தைப்பொங்கல் திராவிடர் விழா

அடிப்படையில் தைப்பொங்கல் ஒரு நன்றியின் விழா. சூரியனுக்கும் ஆடு மாடுகளுக்கும் நன்றிகூற எடுக்கப்படும் ஒரு நல்ல விழா. செய்நன்றி நினைந்து தமிழர் கூடிக்குதூகலிக்கும் ஒரு திராவிட விழா. ஆரியர்கள் தென்திராவிடத்தை வளைத்துக்கொள்வதற்கு முன்பாகவே திராவிடர் ஒரு வலுவான, செழிப்பான கலாச்சாரப் பண்பாட்டை துணைக்கண்டத்தின் பல பகுதிகளிலும் கொண்டிலங்கியமை வரலாறு.

*"ஆரியர்களின் வருகைக்கு முன் இந்தியா முழுவதிலும் திராவிடர் பரவியிருந்தனர். திராவிடப் பண்பாடும் பரவியிருந்தது...... இப்பண்பாடு உயர்வானதாகவும் வலிமை வாய்ந்ததாகவும் இருந்தது. எனவே, ஆரியப் படையெடுப்பாளர்களைக் கவர்ந்தது. இது வரலாற்றுக் காலத்திலேற்பட்ட பண்பாட்டு வளர்ச்சிக்கும் சமயத்திற்கும் அடிப்படை மூலங்களை வழங்கியது என்று மொழியியல் பண்பாட்டு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்." (தமிழக வரலாறும் பண்பாடும், வே.தி. செல்லம் எம்.ஏ.பி.டி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை 1995. பக் 54)*

பின்னாளில் ஆரியச செல்வாக்கிற்குட்பட்ட திராவிடக் கலாசாரம் தன் தனித்துவமிழந்தது. தன் முகவரியிழந்து வேறொன்றாக உருமாறியது. கலப்புக்கலாச்சாரமானது. ஆரியக் கலாசாரக் கூறுகளின் பிரவாகம் திராவிடக்கலாச்சாரப் பண்பாட்டுக் கூறுகளை மேவி ஆதிக்கம் செலுத்தியது. அது திராவிட மதத்தையும் உள்வாங்கி வேற்றுருக்கொண்ட புதுமதக் கோட்பாடுகளையும் சமயக்கிரியைகளையும் நடைமுறைகளையும் உற்பத்திசெய்து சந்தைப்படுத்தியது, விற்றும் தீர்த்தது.

திராவிடர்களின் தொன்மை மதம் வேற்றுவடிவிற்கு வலுக்கட்டாயம் செய்யப்பட்டது. திராவிட மதக்கோட்பாடுகளும் பழக்க வழக்கங்களும் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டபோதிலும் அவை தம் காத்திரமிழந்திருந்தன, தனித்துவமிழந்திருந்தன. தப்பிப்பிழைத்தனவற்றில் தனியிடம் பெறுவது எம் பொங்கல் விழா. திராவிட அடையாள தமிழ் விழா, தனிவிழா.

இயற்கையையும் கடவுளாகக் கொண்ட திராவிடர்களின் ஆன்மீகக் கலாச்சாரத்திலே நன்றிவிழா தனியிடம் பெற்றிருந்தது. இயற்கை ஆன்மீகத்தை ஏலவே போற்றிய தமிழர், தம் வாழ்வோடு வழிபாட்டை இணைத்திருந்தனர். பொங்கல் விழா என்னதான் விவசாயத்தோடு நேரடித் தொடர்புபெற்றிருப்பினும் எத்தொழில் புரிவோரும் பூலோகத்தைப் போஷிக்கும் இயற்கை அன்னைக்கு, பயிர் முதலாம் சூரிய ஆதவனுக்கு ஆதரவாய் உழைக்கும் நாலு கால் நண்பர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கும் நல்ல விழா பொங்கல்விழா. **சேற்றிலே கால்வைக்கிறவர்களோடு சோற்றிலே கைவைக்கும் அத்தனை தமிழர்களும் உவந்து சொல்லும் நன்றிவிழா.**

மதங்கள் வேறுபடலாம், கலாச்சாரங்கள் வேறுபடலாம், தொழில்துறைகள் வேறுபடலாம், ஆனால் திராவிடர் தம் நற்பண்பு மாறுபடாது. செஞ்சோற்று நன்றியுணர்வு பொங்கலிலே பொங்க தமிழர் விழா எடுக்கின்றனர். உழைக்கின்றவர்களும் உண்கின்றவர்களும் ஒருமித்துக் கூறும் நன்றிவிழா பொங்கல்விழா. உலகத்தின்கண் வாழும் எல்லா ஜீவராசிகளின் சார்பாக தமிழர் கொண்டாடும் நன்றிப்பெருவிழா. காலங்களைக் கடந்து சிரஞ்சீவியாக திராவிடர்களுடன் கூடவருகின்ற சுய அடையாளப் பெருவிழா பொங்கல்.

நாகரீக மேற்குலகு நேற்றுத்தான் நன்றிநாளைக் கண்டுகொண்டது. ஆனால் தமிழர்கள் நாம் மிலேனியங்களுக்கு முன்பாகவே நன்றிப்பண்பிலே வளர்ந்திருக்கின்றோம். நன்றிக்கென்றே விழா எடுக்கின்றோம். செய்ந்நன்றி போற்றும் மகவாக மிளிர்ந்திருக்கின்றோம்.

பொங்கல் விழா திராவிட விழா, பொங்கல் விழா உழவரின் விழா, உண்போரின் விழா, பொது விழா. இது தொழில் கடந்த விழா, மதம் கடந்த விழா, சீரிய ஆன்மீக விழா.

# அமரர் ஜே. ஜே. டலிமா - கத்தோலிக்க விசுவாச வீரர்!

## ஓர் அஞ்சலிக் குறிப்பு

வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. ஜே. ஜே. டலிமா அவர்கள் காலமானார் என்ற செய்தி எல்லோருக்கும் அதிர்ச்சியினை ஏற்படுத்தியிருக்கின்றது. அன்னாரின் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் மன்னார் ஆயர், குருக்கள், மறைமாவட்டம் முழுவதுமே ஆழமான அனுதாபங்களை தெரிவித்து நிற்கின்றது!

அமரர் திரு. ஜே. ஜே. டலிமா கமநல சேவைத் திணைக்களத்தில் நீண்ட காலமாகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர். அவர் தமது சேவைக்காலத்தில் விவசாய மக்களோடு அன்பாகவும், இனிமையாகவும் பழகிவந்தவர். எல்லோரையும் "கிளி" என அன்பாக அழைத்ததன் காரணமாக அவரை எல்லா மக்களும் 'கிளி' எனச் செல்லமாக அழைத்தார்கள்.

ஏழை விவசாய மக்களின் நலன்களுக்காக முன்னின்று உழைத்தவர். முருங்கன், உயிலங்குளம், தட்சனாமருதமடு, அடம்பன் போன்ற பகுதியில் வாழும் விவசாயிகளுக்கு நாட்டின் மோசமான நிலை இருந்தபோதிலும் வாகனங்கள் மூலமாகவும், கப்பல்கள் மூலமாகவும் உரங்களைப் பெற்றுக்கொடுப்பதில் முன்னின்று செயற்பட்டார். மட்டக்களப்பு, வாகரை போன்ற பிரதேசங்களில் சேவையாற்றிய இவர் நாட்டின் பல பாகங்களிலும் நிறைய நண்பர்களை ஏற்படுத்திக்கொண்டார்.

மன்னார், முருங்கன், நானாட்டான் பிரதேச கிராமப்புற மக்களோடு நெருங்கிப் பழகுபவராக இருந்தார். நகைச்சுவையாகப் பேசும் இவரின் இனிமையான பேச்சுக்கள் எல்லோரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும்.

இளமைப் பருவங்களில் கவிஞர் சவிரியான் லெம்பேட் அவர்களோடு இணைந்து கலை, கலாச்சார மன்றத்தினை ஸ்தாபித்தார். நாடகத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். வங்காலையில் சிறந்த கத்தோலிக்க குடும்பத்தின் மாதிரியாக வாழ்ந்தார். வங்காலைக்கு சேவையாற்ற வரும் பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள், வைத்தியர்கள், வேறு அலுவலர்களை அன்போடு வரவேற்று அவர்களின் நலன்களில் அக்கறையோடு செயற்பட்டார்.

கத்தோலிக்கத் திருச்சபையின் காவலனாகவும் செயற்பட்டார். ஓய்வுபெறும் காலங்களில் ஆலய பரிபாலன சபையிலும், கிராமிய அபிவிருத்தித் திட்டங்களிலும் முன்னின்று உழைத்தார். மன்/ புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் செயலராகவும் கடமையாற்றி பாடசாலையின் அபிவிருத்தி நடவடிக்கையில் பங்கேற்றார். பாடசாலைப் பிள்ளைகளுக்காக கவிதைகள், கட்டுரைகள் எழுதுவார். பலருடைய இறுதிச் சடங்கின் போது அஞ்சலிக் கவிதைகளை எழுதி வாசித்துள்ளார்.

தற்கால பிரச்சினையான சூழ்நிலைகளில் பொலீஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளோடு தொடர்புகொண்டு மீனவர் சம்பந்தமான பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துவைப்பார். சிங்கள மொழித் தேர்ச்சியின் காரணமாகப் பலரின் பிரச்சனைகளைக் கொழும்புவரை சென்று கதைத்துத் தீர்த்துவைத்தார்.

கடந்த 10 வருடங்களாக புனித ஆனாள் ஆலய அருட்பணிச்சபையின் உபசெயலாளராகவும், ஆசிரியர் அதிரியான் சொய்சா அவர்களின் மறைவுக்குப்பின் செயலாளராகவும் கடமையாற்றினார். 2005ம் ஆண்டு புனித ஆனாள் ஆலயத்தின் 125வது நிறைவு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட முன்னின்று உழைத்தார். 125வது ஆண்டு மலர் வெளியீடு செய்வதில் முன்னோடியாகச் செயற்பட்டார். இவர் குடும்பப்பணியக இயக்குனர் அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரராவார்.

அண்மைக்காலமாக மறைமாவட்டத்தின் மூத்த பெரிய பங்குகளில் ஒன்றான வங்காலைக் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக செயற்பட்டு வரும் வேறு சில சபைகளின் செயற்பாடுகளையிட்டுக் கவலையடைந்தார். பெந்தகோஸ்து சபையினர், முன்னாள் பங்குத்தந்தையான வண. அவிதப்பர் அவர்களையும் அன்னாரையும் வேறு 17 பேரையும் நீதிமன்றத்தில் நிறுத்தினர். கத்தோலிக்க விசுவாசத்தினைக் காத்துக் கொள்வதற்காகவே தாம் நீதிமன்றம் செல்வதாகக் கூறினார். கடந்த சில மாதங்களாக வங்காலை மக்களின் சில செயற்பாடுகளுக்காக சபைக்காரர் சிலர், பொலீஸில் புகார் செய்தபோது கத்தோலிக்க மக்களின் பிரதிநிதியாக ஆலய அருட்பணிச் சபையின் செயலாளர் என்ற வகையில் சுமூகமான முறையில் பிரச்சினைகளைத் தீர்க்க முயன்றார். எனினும் அது தொடர்பாக மிகுந்த வேதனையுற்றார். வயதான காலத்தில் ஊருக்காக பொலீஸிலும், நீதிமன்றத்திலும் செல்லவேண்டிய நிலையை எண்ணி மிகுந்த வேதனைப்பட்டார்.



சிறந்த தமிழ்ப் பற்றாளரான டலிமா அவர்கள் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் தமிழறிஞர்களின் உரையாடல்களையும், பேச்சுக்களையும் விரும்பிக் கேட்பதுடன் அவற்றை சேகரித்தும் வைத்திருந்தார்.

அமரர் டலிமா அவர்கள் மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கையும், தமிழ்ப்பற்றையும், அறிந்த தமிழரசுக் கட்சியினர் அவரைத் தமது கட்சி வேட்பாளராகப் போட்டியிட வலியுறுத்தியபோதிலும் அவர் அதனை விரும்பவில்லை. எனினும் சென்ற வருடம் நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்ட நானாட்டான் பிரதேச உள்ஞராட்சி சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

ஏழைகளின்பால் மிகுந்த இரக்கமுடையவராகிய இவரிடம் உதவி கேட்டுவரும் எவரும் வெறுமையாக சென்றது கிடையாது. அதிக விருந்தோம்பல் பண்பு கொண்ட இவர், தெருவில் போகின்றவர்களைக் கூப்பிட்டுக்கூட தேனீர் கொடுக்கத் தவறுவதில்லை.

சிறந்த கல்விமானாக, சமூக சேவையாளராக, தமிழ்ப்பற்றாளராக, கத்தோலிக்க விசுவாசத்தின் தூணாக, வீரராக வாழ்ந்து இறையடி சேர்ந்த அமரர் டலிமா அவர்களின் ஆன்மா அமைதியில் இளைப்பாறுவதாக.

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### சமாதானம்

"சமாதானத் தென்றல் வீசிடுமா?
நமக்கு சாந்தி சமாதானம் கிடைத்திடுமா?"
என்று எதற்காக ஏங்குகின்றாய்?
உன்னில் நீ தொலைத்துவிட்ட சமாதானத்தை
உன்னுள்ளே தேடிக்கொள்.
மானிடா ..... ஓ மானிடா ......
எதைச் சமாதானம் என்று தேடுகின்றாய்?
ஓ .... சமாதானத்தை
நீ உலகத்தில் தேடுகிறாயா?
இதுதான் உன் அறியாமை!
மனிதனே, சற்றுத் திரும்பிப்பார்!
சமுதாயத்தைத் திரும்பிப் பார்!
அங்கே என்ன நடக்கிறது? சிந்தித்துப்பார்.
சண்டை என்று கூறுகிறாயா?
மனிதக் கொலை என்று கூறுகிறாயா?
ஆம் இதுதான் மனிதகுலம்
தொலைத்திட்ட சமாதானம்.

சமாதானத்தை நாட்டில் தேடாதே.
நட்புக்குள் தேடு!
உன்னில் தேடு சமாதானத்தை.
உறவில் ஏற்படுத்து சமாதானத்தை.
அயலவருடன் ஏற்படுத்து சமாதானத்தை.
மனதிற்குள் ஏற்படுத்து சமாதானத்தை.
மனித இனத்திற்குள் ஏற்படுத்து சமாதானத்தை
இதுவே நீ தொலைத்துவிட்டு
அலைகின்ற சமாதானம்!
மலரட்டும் மனித மனதில் சமாதானம்.
நாட்டில் வீசட்டும் சமாதானத் தென்றல்!
என் உறவுகளின் குரல் கேட்டு
வடிக்கின்றேன் கவிதையை!
இறை மைந்தா இயேசு பாலா
நாம் வாழும் இம்மண்ணில்
மலரச் செய்வாயா சமாதானத்தை?

*ஆ. அனுஷா, வவுனியா*

### சித்திரமல்ல சரித்திரம்

சூரிய ஒளிச்சிறகுகள் மேகச்சுவர்களுக்குள்
மௌனமாக மரணிக்கும்.
கிழக்கு இருளாடை அழைத்தெடுத்து அணியும்.
மின்னல் கொடி கண்ணடித்து பிறந்து இறக்கும்.
பசுமை மைந்தர்களைக் காற்று கைப்பிடிக்கும்!

மேகம் நீர் நரம்புகளை மீட்ட
ஊரே ஈர ரசனைக்குள் நீந்தும்.
குளிர் வாசம் உயிர்களை நேசிக்க
கால்நடைகள் பரிதாப வலைக்குள் நுழையும்.
ஒளி நிர்வாணம் இல்லாமலே நாட்கள் பூக்கும்!

வீதிகளை வெள்ளம் தழுவ
வீடு வாசல்கள் நீருக்குள் நிற்கும்
படகாகக் கழுவப்படும்.
வயல்வெளிகள் சமுத்திரத்துடன் சம்பந்தம் பேசும்.
பயிர்கள் நீருக்குள் அமிழ்ந்து மூச்சுத் திணறும்.

ஏழை விவசாயிகளை
வேதனை வேடன் சூறையாடுவான்.
பசிபோக்கும் பொருட்கள்
பண முதலைகள் வாய்க்குள் பதுங்கிக்கொள்ளும்.
தட்டுப்பாடு ஆட்டம் போடும்.
பணம் உள்ளவர்களுக்கு வெள்ளம்
வியாபாரமாகிவிடும். இல்லாதவர்களுக்கு?

பசி வயிறுகள் சோக வெப்பத்தினால் சுருங்கும்.
வாரம் ஓரிரண்டு ஈரத்தோடு கரைந்து
ஓரமாக விலகும். சுதந்திரக் கொடி பறக்கும்!
சூரிய தேசத்தில் வெள்ளம் அழுதே பிரியும்.
ஊரைக் கழுவிக் கடலைக் காதலிக்கும்.
மீண்டும் பயிர்கள் மூச்சுவிடும்! பசுமை பூப்பூக்கும்!

*ஜெயமலர் (ஜெர்மா), சாளம்பன்*
ஆண்டாங்குளம்.

---

தொடர் கட்டுரை – அங்கம் 44

# கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருட்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

## பகுதி II தவக்கால பன்முக மரபுகள்

### 18. "பாசோ" Passo: தோற்றமும் - வளர்ச்சியும்

இவ்வாறான அமைப்பு முறையை ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தும்போது ஏனைய துறவற சபைகளிலிருந்து எழுந்த பல எதிர்ப்புக்களை அருட்தந்தை பார்சியோ அடிகள் எதிர்நோக்கவேண்டி இருந்தது. இம்முறைமையை கடைப்பிடித்ததனால் ஏற்பட்ட பல பயனுள்ள விளைவுகளை விரைவில் அனுபவ வழியாகக் கண்டுகொண்டனர். இதனால் இம்மரபு இந்தியாவின் ஏனைய பகுதிகளுக்கும், ஆசியாவின் வேறு சில நாடுகளுக்கும் வேகமாகப் பரவியது. பல இடங்களில் இவ்வாறான காட்சியமைப்புகள் பயனுள்ள பல தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளன. எனினும் காலக்கிரமத்தில் பல சீர்கேடுகள் இவற்றுள் நுழைந்தன. சீர்கேடுகள் ஆங்காங்கே ஆயர்களினாலும், ஆயர் மன்றத்தினாலும் நெறிப்படுத்தப்பட்டு இரண்டு நூற்றாண்டுகளுக்கு மக்கள் வாழ்வில் பல பயனுள்ள விளைவுகளை அளித்தன.

1775ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக பல காட்சி அமைப்புக்களுக்குத் தடைகள் விதிக்கப்பட்டன. தடைவிதிக்கப்பட்ட காட்சியமைப்புகளாக கீழ்வருவன குறிப்பிடப்பட்டுள்ளன. குருத்து ஞாயிறு தினத்தில் கிறிஸ்துவின் உருவத்தைச் சிலுவையினின்று இறக்குவது, சிலுவையில் தொங்கும் கிறிஸ்துவின் உருவத்தில் ஏற்படுத்தும் உபாதைகள், மரியாளின் உருவத்தை திருப்பவனியாக எடுத்துச்செல்வது, வெரோணிக்கா என்னும் பெண் கிறிஸ்துவின் இராவுணவை பிரதிபலிக்கும் உருவங்கள், திவ்விய நற்கருணையை பெரிய வெள்ளி தினத்தில் கல்லறை போன்ற இருட்டறையில் வைப்பது, கிறிஸ்துவின் உருவத்தைச் சிலுவையினின்று இறக்குவது, பிலாத்துவினதும், கைப்பாஸினதும் இல்லங்களைப் பிரதிபலிக்க கிறிஸ்துவின் உடலின் உருவத்தைப் படிகளில் எடுத்துச் செல்வது, கிறிஸ்துவின் உடலின் உருவத்தில் சிவப்பு நிறக்கலவையை தெளிப்பது, மண்வெட்டியுடன் காணப்படும் ஆதாமின் உருவம், நூற்கழியுடன் ஏவாள் உருவம், ஆபிரகாம், ஈசாக்கு உருவங்கள் ஆலயத்திற்கு வெளியே அமைக்கப்படுவது என்பதாகும்.

மேற்குறிப்பிட்ட காட்சியமைப்புக்கள் தவிர்ந்தவையாக கிறிஸ்துவின் உருவக்காட்சி அமைப்பு மட்டும் பொதுவாக கோவாவிலுள்ள எல்லா ஆலயங்களிலும், ஆசியாவின் சில நாடுகளிலுள்ள இவ்வமைப்புக்கள் பாசோ என்னும் பெயரில் நீண்டகாலமாக இடம்பெற்று வந்துள்ளது. தவக்காலத்தின் குறிப்பிட்ட ஒரு நாளில் பொதுவாக ஞாயிறு அல்லது வெள்ளிக்கிழமைகளில் வாரத்தில் ஒரு நாள் கிறிஸ்துவின் பாடுகள் பற்றிய மறையுரை இடம்பெறும். கிறிஸ்துவின் உருவத்தின் பிரதிபலிப்பு மட்டும் அசையக்கூடிய ஒரு மேடையில் கீழ்வரும் ஒழுங்கில் உறைநிலையில் அமைக்கப்பட்டு ஒரு திரையினால் மறைக்கப்பட்டிருக்கும். பூங்காவனத்தில் கிறிஸ்து, சிறையில் கிறிஸ்து, கிறிஸ்துவிற்குக் கசையடி, முள்முடி தரிப்பு, இதோ மனிதன், சிலுவை சுமப்பது (இது பெரிய வெள்ளியில்), சிலுவையில் அறைவது, ஒவ்வொரு அமைப்புப் பற்றியும் மறையுரை இடம்பெறும். அதன்பின் குறிப்பிட்ட காட்சி அமைப்பின் முன்னுள்ள திரை அகற்றப்படும். ஒவ்வொரு காட்சி அமைப்பின் பின்பும் திருப்பவனி இடம்பெறும்.

குருத்து ஞாயிறு தினத்தில் கிறிஸ்து சிலுவை சுமக்கும் காட்சியுடனான அமைப்பு திருப்பவனியாக எடுத்துவரப்படும். பெரிய வெள்ளி தினத்தில் கிறிஸ்துவின் உருவத்தின் அமைப்பு சிலுவையிலிருந்து பக்தியுடன் திரை மறைவில் இறக்கப்பட்டு திருப்பவனியாக எடுத்துச் செல்லப்படும். இவ்விரண்டுநாட் பவனிகளின்போது மரியாவின் திருஉருவமும் எடுத்துச் செல்லப்படும். இப்பவனிகளின்போது இரண்டு நாளும் நீண்ட மறையுரைகள் இடம்பெறும். இதுவே பாசோ என்பதன் ஆரம்பம் ஆகும். பாசோ பக்திச் சடங்கு இலங்கையில் 1609ஆம் ஆண்டு முதல் 1850 வரையும் இடம்பெற்றமைக்கான வரலாற்றுச் சான்றுகள் உண்டு. (தொடரும்)

---

மன்னா சிறுகதை

# மீண்டும் வாழ்க்கை!

- தமிழ் நேசன் -



குளிர்ந்த இளந்தென்றல் மயூறனின் உடலை மெல்லத் தழுவி அவனிடமிருந்து விடைபெற்றுச் சென்றது. அவனுள்ளத்தில் உறைந்துகிடந்த இன்ப உணர்வு அவனை மெல்லத் தட்டி எழுப்பியது. அந்தத் தென்றல்தான் அவனுக்கு இந்த உணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இளமைப் பருவத்தின் இனிமையில் நீந்திக்கொண்டிருக்கும் இவனைப் போன்றவர்கள் இந்த இளமையின் இயல்புகளிலிருந்து தம்மை அன்னியப் படுத்திக்கொண்டு வாழ்வது இயலாத காரியம்தான். மனித வாழ்வுக் காலத்தில் இளமைப் பருவம் ஒருமுறை மட்டும்தான் வருகின்றது. அதன் அருமையை முதுமையில்தான் முழுமையாக விளங்கிக்கொள்ள முடியும்.

அவசர அவசரமாக சைக்கிளை மிதித்துக்கொண்டு நேரத்தைப் பார்க்கிறான். அப்போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. தான் புறப்பட்ட அவசரத்தில் மணிக்கூட்டைக்கூட கட்ட மறந்துவிட்டதை. ஆயினும், மொழியரசியின் ரியூசன் கிளாஸ் முடிந்திருக்கக்கூடாது என அவன் மனம் உள்ளூர நினைத்துக்கொண்டது. அவளுடைய உருவத்தை ஒரு கணம் தன் மனக்கண்ணில் கொண்டுவந்து நிலைநிறுத்திப் பார்க்கிறான். அவளுடைய அழகின் இரகசியம் அவனுக்கு ஒரே மர்மமாகத்தான் இருந்தது. அந்தப் புன்னகை தவழும் அவள் முகத்தின் நினைவு அவனை இன்னும் விரைவாக சைக்கிளை மிதிக்கச் செய்தது.

என்றுமில்லாத வேகத்தில் அவன் பறந்துகொண்டிருக்கும்போதுதான் குறுக்கே இடைமறித்தான் நண்பன் கீரன்.

"என்ன மச்சான் .... இவ்வளவு அவசரமா எங்க போறாய்.......?" என்றவாறு சைக்கிளின் கன்ரிலைப் பிடித்து நிறுத்தினான். "ஓ நீ எங்க போறாய் என்று நீ சொல்லாட்டிலும் எனக்கு விளங்காதா என்ன? நீ இப்ப போறது அந்த மொழியரசியைப் பார்க்கத்தானே! நீயும் எத்தன நாளா அவளுக்குப் பின்னால சுத்தித் திரியுறா என்று எனக்குத் தெரியும் ...!" கீரன் தொடர்ந்துகொண்டே போனான்.

இவனுக்கு இதெல்லாம் தெரிந்துவிட்டதே என்று மயூறன் அதிகம் ஆச்சரியப்படவில்லை. அவன்தான் இவன் நண்பனாச்சே.! ஆனாலும் கீரனுக்கு இந்த விசயம் தெரியாமல் இருந்தால் நல்லது என்றுதான் இதைச் சொல்லாமல் விட்டிருந்தான். ஆனால், இப்போது அவனே எல்லாவற்றையும் உளறிக்கொட்டியபோது அவனுக்கு உள்ளூர மகிழ்ச்சிதான்.

"என்ன மயூரன் கனக்க யோசிக்கிறா போலக் கிடக்கு! கெதியா உழக்கு, நானும் உன்னோடு வாறன். ரியூசன் முடியப்போகுது..." மயூரனும் வேறு வழியின்றி அவனையும் ஏற்றிக்கொண்டு சைக்கிளை மிதிக்கின்றான்.

"டேய் கீரன், நான் அவளைப் பலமுறை பார்த்தாலும், இதுவரைக்கும் அவளோட எதுவும் கதைக்கல்லடா... அவளின்ர அழகை மட்டும் ரசிச்சிக்கொண்டு வாறன். அவளும் என்ன விரும்புறா என்றுதான் நானும் நினைக்கிறன். அதுதான் இண்டைக்கு கதைச்சே தீரணும் என்று உறுதியோட வந்தன்."

மயூரன் கூறி முடிப்பதற்குள் அந்த ரியூசன் சென்ரருக்கு முன்னால் உள்ள பிரதான வீதியில் அவர்கள் அண்மித்துவிட்டார்கள். ரியூசன் முடிந்துவிட்டது. மாணவர்கள் எல்லோரும் மிகுந்த ஆரவாரத்தோடு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். மயூரனின் கண்கள் மொழியர்சியைத் தேடிக்கொண்டிருந்தது. தூரத்தில் மொழியரசி தன் நண்பியோடு வந்து கொண்டிருந்தாள்.

மயூரனைக் கண்டதும் தன் நண்பி பக்கம் திரும்பி, அவனைச் சுட்டிக்காட்டி, "பாரடி... ஒவ்வொரு நாளும் அந்த ஒரே உடுப்புத்தான். பாவம் வேற இல்லப்போல...." அவள் சொல்லி முடிக்க அவள் நண்பியோ சத்தமாகச் சிரித்தாள். தூரத்தில் அவர்கள் கதைத்துக்கொண்டாலும், அந்த உரையாடல் தெளிவாக மயூரனுக்குக் கேட்டது. அவன் மனதில் 'பட்' என்றது.

உடனே அவன் சைக்கிளை மிகுந்த வேகத்துடன் திருப்பிக்கொண்டு வீட்டை நோக்கி கனத்த இதயத்துடன் செல்கிறான். "இண்டைக்கு அப்பாவைக் கண்டு, புது உடுப்புத் தைக்கிறதுக்குக் காசு கேக்கணும். அவ என்ர ஒரே உடுப்பக் கண்டு என்னை நிராகரித்துவிட்டா... ஆனால் எப்படியும் அவளை அடைந்தே தீருவன்" மனதிற்குள் எழுந்த உணர்வலைகளுடன் வீட்டுப்படியில் கால் வைக்கிறான்.

அங்கே அவனுடைய தங்கை கிழிந்துபோன அவளுடைய சட்டையைத் தைத்துக் கொண்டிருந்தாள். அந்தச் சட்டையில் ஏற்கனவே தையல்கள் போடப்பட்டிருந்தன. குசினிப் பக்கம் பார்வையைத் திருப்புகின்றான். அம்மா கடைக்கு விற்கக் கொடுப்பதற்காக அவசர அவசரமாக - வேர்க்க விறுவிறுக்க இடியப்பம் அவித்துக் கொண்டிருந்தாள். நெருப்போடு தினமும் நெருங்கிப் பழகுவதால் அவள் காய்ந்து, கறுத்து, மெலிந்து காணப்பட்டாள்.

மயூரனைக் கண்ட தங்கை, "என்ன அண்ணா வேர்த்துக் களைச்சு வாறா? என்ன இண்டைக்கு முகத்தில சிரிப்பைக் காணல்ல..." தன் அன்புத் தங்கையின் கரிசனையான அந்தக் கேள்வியைவிட, தன் குடும்பத்தின் நிலையை நினைத்தபோது அவனுக்கு பேச்சே வரவில்லை. தான் கேட்க வந்ததை எப்படி எந்த முகத்தோடு அப்பாவிடம் கேட்க முடியும் என்று நினைத்தவனாய், எதுவுமே பேசாது மூலையில் கிடந்த ஈச்சாரில் சாய்ந்துகொண்டான். அவன் எண்ண அலை – பேரலையாக எழுந்து வீசிக்கொண்டிருந்தது.

அடுத்த மாதமே, மயூரன் சவூதிக்குச் செல்ல ஏற்பாடாயிற்று. யாருடைய காலைப் பிடித்தோ, எப்படியோ அவன் அப்பா காசு கடன் வாங்கிக் கொடுத்தார்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்...)

---

## துளிப்பா

**கனவு**
விழிகளில்
நடைபெறும் திரைப்படம்.

**மாலை**
ஒற்றுமையினைக்
கற்றுக்கொடுக்கும் ஆசான்.

**சந்தோசம்**
அடுத்த நிமிடம்
அகன்றுபோகும் சந்தர்ப்பவாதி.

**சூரியன்**
கட்டணம் அறவிடாது
அனைவருக்கும்
ஒளி கொடுக்கும் பாக்கியவான்

**பூ**
தென்றலுக்கு
வாசனை நிறம் வரைபவள்!

**சாதி**
காதலைப் பிரிக்கும்
கருவிகளில் ஒன்று.

**பெண்**
நேசிக்கத் தெரிந்தவர்களுக்கு
பூவானவள்.
நேசிக்கத் தெரியாதவர்களுக்கு
புயலானவள்.

*எஸ். சோபா,*
*வண்ணாகுளம்,*
*ஆட்காட்டிவெளி*

**திருமுழுக்கு**
திருச்சபை எனும் ஊடகத்தில்
எம்மை இணைக்கும்
இலவச இணைப்பிதழ்.

**வேதாகமம்**
எம் வாழ்வில் வருகின்ற
தடைகளைத் தகர்க்கும்
கூரிய ஆயுதம்.

**திருஅப்பம்**
ஆன்மாவைச் சுத்திகரிக்கும்
அரும் மருந்து.

*வெ. சங்கீதா,*
*உயிர்த்தராசன்குளம்.*

# மன்னார் மறைமாவட்ட அருட்பணித் திட்டம் – 2007. இறுதித் தீர்மான அறிக்கை

## மறைமாவட்டத்தின் பொது இலட்சிய நோக்கு :

## அன்பிய வாழ்வின் ஊடாக, "கிறீஸ்தவ வாழ்வின் முதர்ச்சியை நோக்கிய பயணம்"

(Towards Forming Christian Mature Personalities)



## இவ்வாண்டுக்கான சிறப்பு இலட்சிய நோக்கு :

## செப வாழ்வு (Prayer Life)



### 1. தனிநபர் செப வாழ்வு
### Personal Prayer

**தீர்மானம் -01**

**1.1. தனிநபர் செப வாழ்வு பற்றிய பங்குத் திட்டம்:**

பங்குத் தந்தையர்கள், தங்களது பங்கில் பணியாற்றும் துறவற சபைகளையும் ஆலய, பங்கு அருட்பணிப் பேரவைகளையும், மற்றும் அமைப்புக்களையும் உள்ளடக்கி தனிநபர் செபத்தை முன்னெடுக்க பங்குத் திட்டங்களை பின்வரும் ஆலோசனைகளுக்கு அமைய உடனடியாக வகுத்தல்.

அ. பங்கு அருட்பணியாளர்கள் தமது மறையுரைகளில் செப வாழ்வை ஆழப்படுத்தக்கூடிய செயலாக்கச் சிந்தனைகளை இவ்வாண்டு முழுவதும் மக்களுக்கு வழங்கல்.

ஆ. திருவிழாக்கால மறையுரையின் முக்கிய கருப்பொருளாக செபவாழ்வைக் கொண்டு அதனைச் செயற்படுத்தக்கூடிய சிந்தனைகளையும், செயல்முறைகளையும் மக்களுக்கு வழங்குதல்.

இ. பங்குகள் தமது பங்கில் இச்செயற்றிட்டத்தினை துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும், கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தும், ஏனைய வழிகளிலும் முன்னெடுத்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

ஈ. ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் பங்குகளில் நடைபெறும் உபவாச நற்கருணைத் தியானத்தில் தனிநபர் செப ஈடுபாட்டை அதிகரிக்க ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை வகுத்துச் செயற்படுத்துதல் , குழுவாகச் செபிக்க வழிகாட்டுதல்.

**1.2. மறைமாவட்ட ஆணைக் குழுக்களின் பங்கு மட்டத்திலான உதவிகள்:**

மறைமாவட்டத்தின் இலக்கையும், எதிர்பார்ப்பையும் கருத்திற் கொண்டு மறைமாவட்ட அருட்பணிக் குழுக்கள் (ஆணைக் குழுக்கள்) பங்குத் தந்தையோடு தொடர்புகொண்டோ அல்லது அவர்களின் வேண்டுகையின் அடிப்படையிலோ தங்களது பங்களிப்பை வழங்குவர். இதன் அடிப்படையில

அ. திருவழிபாட்டு ஆணைக்குழு தனிநபர், குழுவோடு இணைந்து செயற்படுத்துவதற்கு, செபப் பங்கேற்றலை அர்த்தமுள்ளதாக்க செயற்றிட்டங்களை வகுத்து வழங்கும்.

ஆ. சிறுவர்களுக்கான பயிற்சிக்கு மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை ஆணைக்குழுவும்,

இ. மாணவர்களுக்கான பயிற்சிக்கு மறைமாவட்ட கல்வி, மறைக்கல்வி, விவிலிய ஆணைக்குழுவும்,

ஈ. இளைஞர், இளம் பெண்களுக்கான பயிற்சிக்கு மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவும்

உ. குடும்பங்களுக்கான பயிற்சிக்கு மறைமாவட்ட பொதுநிலையினர் குடும்ப ஆணைக்குழுவும் பங்களிப்புச் செய்வதோடு ஏனைய மறைமாவட்ட அருட்பணி மையங்களும் தங்களுடைய பங்களிப்பை வழங்க முன்வருவர்.

ஊ. மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு இதற்கென பல்வேறு கலை நிகழ்வுகளைத் தயாரித்து பங்குகளுக்குச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

எ. மன்னா பத்திரிகை இதனை மையப்படுத்திய அறிவூட்டல்களைத் தொடர்ந்து வழங்கும்.

ஏ. பொதுநிலையினர், குடும்ப ஆணைக்குழு செபப் புத்தகங்களை வெளியிட்டு உதவும்.

ஐ. அன்பிய ஆணைக்குழு, அன்பியங்களில் தனிச் செபத்தை ஆழப்படுத்தக் கூடிய வழிபாட்டுப் படிமுறைகளை (Modules) தயாரித்து உதவும்.

**தீர்மானம் - 02**

**தோழமைச செபக் குழுக்கள்.**
**(Fellowship Prayer Groups)**

**2.1. பங்கில் செய்யப்பட வேண்டியவை**

அ. வைகாசி மாதம் முடிவதற்குள் பங்குகளில் 20-30 நபர்களைக் கொண்ட தோழமைக் குழுக்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். இப்படி உருவாக்கப்படும் குழுக்கள் வயதெல்லையை அல்லது குழு அடிப்படையைக் கொண்டதாக அமைதல் சிறப்பானது. (ஆண்கள், பெண்கள், இளைஞர், இளம் பெண்கள், மாணவர்கள், சிறுவர்)

ஆ. ஏற்கனவே சில பங்குகளில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்ற தோழமைக் குழு உறுப்பினரின் அனுபவத்தை பகிரச்செய்து அதன் மூலம் குழுக்களின் இலக்கையும், நல் விளைவுகளையும், அவர்கள் மத்தியில் ஏற்பட்ட உறவு வளர்ச்சிகளையும் முன்னுதாரணமாக எடுத்துக்கூறி, இக் குழுக்களை வளர்த்தெடுத்தல்.

இ. அன்பிய ஊக்குவிப்பாளர்களுள் தோழமைக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஒன்றுபட்டுச் செபித்தல்.

ஈ. இதற்குப் பங்குத் தந்தையர்கள், தொடர்புடைய மறைமாவட்ட ஆண்ணக் குழுக்களின் உதவியைப் பெறலாம்.

### 2. குடும்ப செப வாழ்வு
### Family Prayer

**தீர்மானம் -01**

**குடும்பச் செபத்தை ஊக்குவித்து வளர்க்க எடுக்கவேண்டிய முயற்சிகள் :**

அ. பங்குத் தந்தையர்கள், குடும்பச் செபத்தை ஊக்கப்படுத்த திருப்பலி, மறையுரை. பொது ஒன்றுகூடல்கள். ஏனைய வழிபாடுகள், இன்னும் சாத்தியப்படக்கூடிய எல்லா வழிகளிலும், விழிப்புணர்வை ஊட்டுதல்.

ஆ. இல்லங்களில் நடைபெறும் பொது நிகழ்வுகளுக்கு (உ-ம்). (திருமுழுக்கு, முதல் நன்மை, உறுதிப்பூசுதல், திருமணம், பூப்புனித நீராட்டு விழா, புதிய இல்லக் குடிபுகுதல் போன்ற கொண்டாட்டங்களுக்கு) ஆயத்தமாக இறைவார்த்தை வழிபாட்டை முன்னுரிமைப்படுத்திச் செயற்படுத்தல்.

இ. இதற்காக, வழிபாட்டுப் படிமுறைகளை வெளியிட்டு உதவுதல்.

ஈ. கல்வி, மறைக்கல்வி, விவிலிய ஆணைக்குழு மாதிரிக் குடும்பச் செபப் படிமுறையைத் தயாரித்து வழங்கும். பொது நிலையினர் - குடும்ப ஆணைக்குழுவும் மேற்படி பணிக்கு உறுதுணையாகச் செயற்படுவதோடு, குடும்பங்களில் இடம்பெறும் பொது நிகழ்ச்சிக்கான வழிபாட்டுப் படிமுறைகளைத் தயாரித்து வழங்கும்.

உ. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை வேளைகளில் சிறப்பாகப் பங்குகளில் நடைபெறும் உபவாச நற்கருணைத் தியானத்தில் குடும்பச் செப ஈடுபாட்டை அதிகரிக்க ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை வகுத்துச் செயற்படுத்துதல். (உ+ம்) குடும்பமாக நற்கருணையைச் சந்தித்து செபிக்கத் திடமான திட்டங்களை செயற்படுத்துதல்.

**தீர்மானம் – 02**

**குடும்பச் செபத்தை ஊக்குவிக்கும் முகமாக இல்லச் சந்திப்பை மேற்கொள்ளுதல்.**

அ. பங்குப் பணியாளர்களும், பங்கில் பணியாற்றும் துறவற சபையினரும் இவ்வருடத்தில் (2007) ஆகக் குறைந்தது இரண்டு முறையாகிலும் குடும்பங்களைச் சந்தித்து அவர்களோடு செபித்து குடும்பச் செபத்தை ஊக்கப்படுத்துதல்.

ஆ. 2007ம் ஆண்டு சித்திரை மாதத்திற்கு முன்னர் முதலாவது குடும்பச் சந்திப்பு நடைபெற்று முடிவுற்று, 2007ம் ஆண்டு ஆடி மாதம் தொடக்கம் ஐப்பசி மாதம் முடிவதற்குள் இரண்டாவது குடும்பச் சந்திப்பு இடம்பெறும். முதற் சந்திப்பைத் தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையிலேயே இரண்டாவது சந்திப்பு இடம்பெறல் வேண்டும்.

இ. சிறிய மக்கள் தொகையைக் கொண்ட பங்குகளில் உள்ள குருக்கள், துறவிகள் மக்கள் தொகை அதிகமாக உள்ள பங்குகளுக்குச் சென்று, குடும்பச் சந்திப்புக்கு உதவி செய்வதை பெருதும் வரவேற்கின்றோம்.

ஈ. அதேவேளையில் இதனுடைய வெற்றிகள், தளர்வுகள் என்பன துல்லியமாக பங்குக் குழுவால் ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல் குழுவும் பங்கைச் சந்தித்து தேவைக்கேற்ப, இல்லச் சந்திப்பிற்கு ஊக்குவிப்பு வழங்கும்.

உ. பங்கில் இயங்கும் குடும்பப் பணிக்குழு, தன்னார்வப் பணியாளர்கள், அன்பிய ஊக்குவிப்பாளர்களின் உதவியோடு குடும்பச் சந்திப்பை சேர்ந்து முன்னெடுத்துக் குடும்பச் செப வாழ்வை ஆழப்படுத்தப், பங்குக் குருக்கள் வழிகாட்டுவர்.

ஊ. பங்குத் தந்தையர்களும், துறவிகளும், ஏனைய பணியாளர்களும் தம்மைச் சந்திக்க வரும் பங்கு மக்களோடு குடும்பச் செபவாழ்வை மையப்படுத்திய நட்போடு கூடிய கலந்துரையாடலில் ஈடுபடுவதை வழக்கமாக்கிக்கொள்ளல் அவசியம்.

**தீர்மானம் -03**

**குடும்பச் செபத்தை நோக்கிய முன்னெடுப்புகள்**

அ. பங்குகள் தமது பங்கில் இச்செயற்றிட்டத்தினை துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும், கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தும், ஏனைய வழிகளிலும் முன்னெடுத்துச் செல்லல்.

ஆ. விவிலியத்தில் செபம், ஆதித் திருச்சபையில் செபம், திருச்சபையில் செபம், இறைமக்களின் வாழ்வில் செபம் போன்ற கருப்பொருட்களில் விவரணப் படங்களைச் சமூகத்தொடர்புகள் கலை, பண்பாட்டு அருட்பணி மையம் தயாரித்து வழங்கும்.

### 3. குழுச் செப வாழ்வு
### (Community Prayer)

**தீர்மானம் -01**

**அன்பியச் செபம், திருப்பலிகளில் அர்த்தமுடன் ஈடுபடல் :**

அ. அன்பியக் குழுக்கள் இல்லாத இடங்கள் அனைத்திலும் விதி விலக்கின்றி 2007ம் ஆண்டு பங்குனி மாத இறுதிக்குள் அவை ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

ஆ. இயங்கிக்கொண்டிருக்கும் அன்பியங்களுக்குள் தோழமை உணர்வையும், செயற்பாட்டையும் வலுப்படுத்தி கிறீஸ்தவ முதிர்ச்சியை நோக்கி வழிநடாத்துதல்.

இ. அன்பிய இணைப்பாளர்கள் செப வாழ்வில் முதிர்ச்சி பெற்று தாமாகச் செபிக்கவும், செபிக்கக் கற்றுக்கொடுக்கவும் தேவையான பயிற்சியை வழங்குதல்.

ஈ. அன்பிய இணைப்பாளர்கள் அன்பியங்களில் செபத்தை கிரமமாக முன்னெடுத்துச் செல்ல உறுதுணைபுரிதல். பங்குத் தந்தையர்கள், துறவறத்தார் பங்கிலுள்ள ஒரு குறிக்கப்பட்ட அன்பியத்தைப் பொறுப்பெடுத்து அந்த அன்பியச் செயற்பாடுகளில் பங்குபற்றிப் பங்களிப்புச் செய்தல் இன்றியமையாததாகும்.

உ. பக்திச்சபைகளின் ஒன்றுகூடல்களில் ஒன்றாகச் செபித்து தோழமை உணர்வை வலுப்படுத்த நற்செய்திப் பகிர்தல் செபவழிபாட்டைக் ( ஏழு படிமுறை) கட்டாயமாக்கிச் செயற்பட வைத்தல்.

ஊ. பங்கு அருட்பணிப் பேரவை / ஆலய அருட்பணிப் பேரவை உறுப்பினர்களின் ஒன்றுகூடல்களில் ஒன்றாகச் செபித்து தோழமை உணர்வை வலுப்படுத்த குழு வழிபாடுகளை கட்டாயமாக்கி நேரம் ஒதுக்கிச் செயற்படல்.

எ. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பங்குகளில் நடைபெறும் உபவாச நற்கருணைத் தியானத்தில் குழுவாகச் செபிக்கும் செயற்பாட்டை அதிகரிக்க ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை வகுத்துச் செயற்படுத்துதல். (உ+ம்) குழுக்களாக நற்கருணையைச் சந்தித்து செபிக்க திடமான திட்டங்களை செயற்படுத்துதல்.

ஏ. உப மறைக்கோட்ட மட்டத்தில் இரு வாரங்களுக்கு ஒரு முறையென்றாலும் குருக்கள் துறவிகள் ஒன்றுகூடி திருவிவிலிய நற்செய்திப் பகிர்விலும், பணி மீளாய்விலும் ஈடுபடல்.
கோட்ட மட்டத்திலும் மாதம் ஒரு தடைவை இதைச் செய்தல்.

ஐ. பங்கு மட்டத்திலும் பணியாற்றும் குருக்கள் சேர்ந்தும், மேற்சொல்லப்பட்ட செப முறையை முன்னெடுத்துச் செல்லலாம்.

ஒ. ஒவ்வொரு திருப்பலிக் கொண்டாட்டமும் வெறும் சடங்காக அமையாமல் ஆழ்ந்த செப அனுபவம் மிக்கதாய் அமைய வழிசெய்தல்.

ஓ. மக்கள் எல்லோரும் சேர்ந்து பாடக்கூடியவிதத்தில் பாடல்களைத் தெரிவுசெய்தல். வழிபாட்டிற்கு முன்னர் பாடல்களைப் பயிற்றுவித்தல்.

ஔ. அன்பிய அருட்பணி மையம் மாதிரிச் செப முறைகளைத் (Modules) தயாரித்து வழங்கும். மறைமாவட்ட ஆணைக்குழு ஒவ்வொன்றும் தங்களோடு பணிபுரியும் பணியாளர்கள் மத்தியில் குழுச் செபப் பயிற்சியை வழங்கி அவர்கள் தனியாகவும் குழுவாகவும் செபிக்க உதவுதல்.

∴ **திருப்பலியில் :** முதல் இறைவார்த்தை வாசகத்திற்குப் பின்வரும் தியானத்திற்குரிய திருப்பாடல்களை மாத்திரமே பயன்படுத்தல். மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழு தியானத் திருப்பாடல்களுக்கு இலகுவான இசை அமைத்து வழங்கும்.

*நன்றி : அருட்பணி. அந்தோனிதாஸ் டலிமா,*
*மன்னார் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல்*
*மாநாட்டுச் செயலாளர்*

# குருத்துவப் பொன்விழா சிறப்பிதழ்

## பணிக்குருத்துவ வாழ்வின் 50 ஆண்டுகளை நிறைவுசெய்து

## பொன்விழாக் காணும் ஜே. பி. தேவறாஜா அடிகளார்

### அருட்தந்தை ஜே. பி. தேவறாஜா அடிகளாருடன்

### சிறப்பு நேர்காணல்

*நேர்கண்டவர்: அருட்சகோதரி கனிஷியஸ் (தி.கு)*

**"ஒரு அன்புச் செயல் உலக வரலாற்றை மாற்றாமல் போகலாம். ஆனால் ஒரு மனித வாழ்வை மாற்றக்கூடியதே"**

அருட்தந்தை அவர்களே, நீங்கள் உங்களுடைய குருத்துவ வாழ்வில் 50 வருடங்களை நிறைவுசெய்து தடம் பதிக்கின்றீர்கள். இதனையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். உங்களுடைய வாழ்வுக்காகவும், பணிக்காகவும் உங்களுடன் இணைந்து இறைவனுக்கு நன்றிப்பண் பாடுகின்றோம். இவ்வேளையில் மன்னா வாசகர்களுக்காக உங்களை நேர்காண விரும்புகின்றோம்.

*கேள்வி:* **உங்களுடைய இளமைக்காலம், பெற்றோர், சகோதரர், குடும்பப் பின்புலம் பற்றி கூறுவீர்களா?**

**பதில்:** எனது சொந்த ஊர் வவுனியா. எனது பெற்றோர் இறைபக்தி மிக்கவர்கள். இறை உதவியை வேண்டாது எக்காரியத்தையும் ஆரம்பிக்க மாட்டார்கள். அவ்வாறே தமது பிள்ளைகளாகிய எம்மையும் இறைபக்தியிலும், கல்வியறிவிலும் வளர்த்து வந்தார்கள். தங்களது இந்த இறை பக்தியையும், மரியன்னைப் பக்தியையும் எமக்கு முதுசமாக விட்டுச் சென்றுள்ளார்கள். நான்தான் அவர்களது மூத்த மகன். எனக்குக் கீழே இரண்டு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் இருந்தனர். சகோதரர்கள் இருவரும் எமது பெற்றோரைப் பின்தொடர்ந்து ஒருவர்பின் ஒருவராக இறைவனடி சேர்ந்துவிட்டனர்.

நான் எஸ். எஸ். சி. வகுப்பில் கல்விபயிலும் காலத்தில்தான் குருமடத்தில் சேரவேண்டும் என்னும் ஆசை ஏற்பட்டது. இதனை எனது பெற்றோரிடம் தெரிவித்தபோது நான் மூத்த மகன் என்பதால் என்னை விடுவதற்கு அவர்கள் சிறிது தயக்கம் காட்டினார்கள். எனினும் எனது விருப்பத்திற்குத் தடைபோடாது என்னைக் குருமடத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

*கேள்வி:* **நீங்கள் குருத்துவ வாழ்வில் அடியெடுத்து வைப்பதற்குப் பின்புலமாய் அமைந்தவர்கள் யார்?**

**பதில்:** நான் சிறுவயதில் எமது ஊரிலுள்ள புனித அந்தோனியார் றோ.க. பாடசாலையில் கல்வி பயின்றேன். எனது 9ம் வயதில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியில் தொடர்ந்து பயில அனுப்பி வைக்கப்பட்டேன். அடுத்து எனது இடைநிலைக்கல்வி, உயர்கல்வியை அனுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரியிலும், யாழ்/ புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றேன்.

அந்தக் காலத்தில் எமது பங்குத்தந்தையாயிருந்த வண. சற். என். குரூஸ் (அமதி) அடிகளார் நான் குருத்துவ வாழ்வைத் தெரிவதற்கு மிகவும் உந்துசக்தியாயிருந்தார். மற்றுமொருவர் நான் அனுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரியில் பயின்றபோது எமது கல்லூரி அதிபராயிருந்த முன்னைய யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை. இவர்கள் இருவரும் எனது குருத்துவ வாழ்வில் முக்கிய பங்குவகித்தவர்கள்.

மற்றும் மறக்க முடியாத ஒருவர் நான் சிறுவனாயிருந்த காலத்தில் எமது பங்கில் பணிபுரிந்த அருட்சகோதரி சாள்ஸ் (தி.கு.) அவர்கள். இவர் என்னைக் காணும்போதெல்லாம் என்னுடன் இறை அழைப்பின் மேன்மையைப்பற்றி உரையாடி சிறுவயதிலேயே எனது மனதில் குருத்துவ அழைத்தல் என்னும் விதையை ஊன்றிவிட்டார்.

*கேள்வி:* **உங்களது குருத்துவ உருவாக்கல் காலத்தின் போது உங்களிடத்தில் செல்வாக்குச் செலுத்தியவர்கள்.....?**


**பதில்:** நான் குருமடத்தில் சேர்ந்தபோது என்னை ஆய்வுசெய்து அனுமதித்தவர் ஆயர் கியோமர் ஆண்டகை. கொழும்பு புனித பேணாட் குருமடத்திலும், கண்டி அம்பிட்டியா குருமடத்திலும் எனக்கு வழிகாட்டிகளாய் அமைந்தவர்கள் அவற்றின் அதிபர்களான வண. மாட்டின், வண. சற். என் போன்றோர்.

*கேள்வி:* **உங்களது பணித்தளங்கள் பற்றி...........?**

**பதில் :** நான் 1957ம் ஆண்டு மாசி மாதம் 4ம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டேன். படிப்பு முடிந்து முதன் முதலாக யாழ் மரியன்னை பேராலயத்தில் 3வது உதவிப் பங்குத்தந்தையாகவும் தொடர்ந்து 2வது, 1வது உதவிப் பங்குத் தந்தையாகவும், சிறிது காலம் பதில் பங்குத்தந்தையாகவும் (Acting Parish Priest) பணிபுரிந்தேன். பின்னர் ஒரு வருடம் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும், விடுதிச்சாலை மாணவருக்குப் பொறுப்பாகவும் இருந்தேன். தொடர்ந்து முருங்கன், மாதகல், பருத்தித்துறை, இளவாலை, அச்சுவேலி, வழிமீசாம் (நல்லூர், தின்னவேலிப் பகுதிகள்) ஆகிய இடங்களில் பங்குத்தந்தையாகப் பணிபுரிந்தேன்..

*கேள்வி:* **நீங்கள் வெளிநாட்டிற்கும் கல்வி பயிலச் சென்றிர்களல்லவா........அதுபற்றி?**

**பதில்:** ஆம் 1974ம் ஆண்டு கனடாவிலுள்ள புனித பிரான்சிஸ் சேவியர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயில என்னை அனுப்பி



வைத்தார்கள். அங்குதான் "சமூக அபிவிருத்தியியல்" ( Social Development) உயர்கல்வி பயின்றேன். பின்னர் இங்கு வந்து வழிமீசாம் (பூநகரி தொடங்கி தேவன்பிட்டி வரை) உள்ள பங்குகளில் பணிபுரிந்தேன். 1981ல் மறைமாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பின்னர் மடுத்திருப்பதியின் பரிபாலகராகப் பொறுப்பேற்ற அதேவேளை யாழ் மனித முன்னேற்ற நடுநிலையம், மன்னார் வாழ்வுதயம் ஆகியவற்றைத் தொடங்கி அதன் இயக்குனராயிருந்து சமூகப் பணிகளிலும் ஈடுபட்டேன்.

**கேள்வி: 1985ம் ஆண்டு நீங்கள் எதற்காக வெளிநாடு சென்றீர்கள்? அங்கு நீங்கள் ஆற்றிய பணிகள் யாவை?**

**பதில்:** 1985 ம் ஆண்டுதான் வங்காலைப் பங்குத்தந்தையாயிருந்த அருட்தந்தை மேரி பஸ்ரியன் கொலைசெய்யப்பட்டார். அவர் என்னுடன் இணைந்து மிக நெருக்கமாகப் பணிபுரிந்தவர். அவரது இழப்பு எனக்கு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனால் அப்பொழுது முருங்கனில் பணிபுரிந்து கொண்டிருந்த நான் மிகவும் நோயுற்றேன். இதனையறிந்த கொழும்பு மாகாண திருக்குடும்ப சகோதரிகள் வந்து என்னை அழைத்துச் சென்று தமது மடத்தில் வைத்துப் பராமரித்தார்கள். அப்பொழுது எமது ஆயர் என்னைச் சிறிது காலம் வெளிநாடு செல்லும்படி பணித்தமையால் அங்கு சென்றேன். அங்கு எமது நாட்டுப்பிரச்சனையால் புலம்பெயர்ந்து பிரான்ஸ், ஹொலன்ட், ஒஸ்ரியா ஆகிய நாடுகளில் அகதிகளாய் வாழ்ந்து வந்த எமது இளைஞர்கள் அகதி அந்தஸ்து பெறுவதற்கு (Card எடுப்பதற்கு) உதவி புரிந்தேன். அத்துடன் அவர்களுடன் ஒருவராக வாழ்ந்து அவர்களுக்கான ஆன்மீகப் பணிகளிலும் ஈடுபட்டேன்.

*கேள்வி:* **மிகவும் முக்கியமான ஒரு கேள்வி. அதாவது நீங்கள் 6 ஆண்டுகள் கொழும்பு செடெக் (SEDEC) நிறுவன இயக்குனராக இருந்து இலங்கையிலுள்ள மறைமாவட்டங்கள் முழுவதற்கும் தன்னலமற்ற சேவையாற்றி, அனைவரது அன்பையும், மதிப்பையும், பாராட்டையும் பெற்றுள்ளீர்கள். உங்களது இந்தப்பணி பற்றி விரிவாகக் கூறமுடியுமா?**

**பதில்:** நான் 1988ல் வெளிநாட்டிலிருந்து திரும்பியதும் பேசாலை, மன்னார் புனித செபஸ்தியார் பேராலயம் ஆகியவற்றில் பங்குத் தந்தையாகப் பணியாற்றினேன்.

அவ்வேளையில் இலங்கை ஆயர் மன்றத்தினர் நீதி சமாதான ஆணைக் குழுவுக்குப் பொறுப்பாளராக மேதகு ஆயர் மல்கம் றஞ்சித் அவர்களை நியமித்திருந்தனர். அவரே என்னை செடெக் (SEDEC) நிறுவனத்திற்கு இயற்கு வரும்படி அழைத்தார்.

நான் அங்கு பணியாற்றிய காலத்தில்தான் பெண்களுக்கான செயல்திட்டம், ஊக்குவிப்புத்திட்டம், சமாதானத்திட்டம், ( Womens' Programme, Animation Programme, Peace Programme) ஆகியவற்றை முதன்முதலாக ஆரம்பித்தேன். அது இன்றுவரை இயங்கி வருகின்றது. அத்துடன் தேவையான கட்டிடங்களையும் கட்டி முடித்தேன். சாதாரணமாகப் பெரும்பான்மை இனத்தவர்களே இயக்குனர்களாக இருந்தவேளையில் நான், அப்பொறுப்பை ஏற்கச் சிறிது தயங்கினாலும் அங்கு சென்றதும் எவருக்கும் கிடைக்காத அளவுக்கு அங்கு பணிபுரிந்தவர்களின் நிறைவான ஒத்துழைப்பையும், அன்பையும், நம்பிக்கையையும் பெற்றுக்கொண்டேன் என்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

*கேள்வி:* **2001ல் உங்களது செடெக் நிறுவனப் பணிகளை முடித்து மறைமாவட்டத்திற்குத் திரும்பினீர்கள். இங்கு வந்த பின்னர் எத்தகைய பணிகளில் ஈடுபட்டீர்கள்? தற்பொழுது உங்களது பணி யாது?**

**பதில்:** நான் மறைமாவட்டத்திற்குத் திரும்பி வந்ததும் ஆயரின் சிறப்புப் பணி முதல்வர் (Episcopal Vicar) ஆக ஆயர் என்னை நியமித்தார். இதனை நான் 2006ம் ஆண்டுவரை செய்தேன். தற்போது நான் அனைத்துப் பணிகளிலிருந்தும் ஓய்வு பெற்றுள்ளேன்.

தற்பொழுது எனது பணி குருக்கள், துறவிகளுக்கு அவர்களுடைய தேவைகளைச் சிறப்பாக அவர்களது ஆன்மீகத் தேவைகளில் உதவிபுரிந்து கொண்டிருக்கிறேன். அத்துடன் பம்பைமடுவில் உள்ள அன்னை தெரேசா சபை அருட்சகோதரிகளின் ஆன்மீகக் குருவாகவும் இருக்கிறேன்.

*கேள்வி:* **உங்களது பங்குத்தளப் பணிகள் தவிர பல விசேட பணிகளில் ஈடுபட்டீர்களல்லவா?**

**பதில்:** ஆம். 77ம், 83ம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது தென்பகுதி, மலைநாடு ஆகிய இடங்களிலிருந்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வடபகுதி நோக்கி வந்தனர். அவர்களைச் சிறிது காலம் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைத்துப் பராமரித்த பின்னர் ஒரு தொகையினர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச்செல்ல ஏனையோர் இங்கு தங்கிவிட்டனர். எனவே யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இரு மறைமாவட்டங்களிலும் கீரிசுட்டான் ( தற்பொழுது தேவாபுரம்) பூமலர்ந்தான், கணேசபுரம், டொலர்பாம், கென்ற் பாம் இவ்வாறாக 22 கிராமங்களை உருவாக்கி அவர்களை அங்கு குடியமர்த்தினோம். இந்தப் பாரிய பொறுப்பை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுச் செயல்படுத்தினேன்.

இப்பணிகளில் குருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலைப் பணியாளர்கள் தோளோடு தோள் நின்று தேவையான உதவிகளை நல்கினர். எனது இந்தப் பணிகளுக்கு அரசாங்கமும் விசேடவிதத்தில் உதவி புரிந்தது. அரசாங்க அதிபர்களான திருவாளர்கள் மரியதாசன் குரூஸ், கணேஸ், விஸ்வலிங்கம் ஆகியோர் தேவையான உதவி ஒத்தாசைகள்ளை வழங்கி எனக்குப் பக்கபலமாயிருந்தனர்.

முன்னைநாள் ஜனாதிபதியான அமரர் உயர்திரு. ஆர். பிரேமதாசா அவர்கள் என்னை நன்கு அறிந்திருந்தார். அவர் நாடெங்கும் மேற்கொண்ட கிராமோதய வீட்டுத்திட்டத்தில் வடபகுதியில் மாதா கிராமத்தில் மட்டுமே வீடுகள் கட்டி மக்களுக்குக் கையளிக்கப்பட்டன. அத்துடன் நான் மடுத்திருப்பதியில் இருந்த காலத்திலேயே அங்குள்ள பெரிய தண்ணீர்த் தாங்கி கட்டியெழுப்பப்பட்டு, தண்ணீர்க் குழாய்களும் அமைக்கப்பட்டன. இவற்றிற்கும் திரு. பிரேமதாசாவே உதவி வழங்கினார்.

ஏழைகளின் வாழ்வாதாரத்திற்காக நான் முன்னெடுத்துச் சென்ற பணிகள் பற்பல. அவற்றுள் விசேடமாகக் குறிப்பிட்டுக் கூறக்கூடியவை இரண்டு. அதாவது 73 - 76ம் ஆண்டு காலப்பகுதிகளில் நாடு வரட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்டது. அவ்வேளை நான் இளைஞர்களை ஒன்றுகூட்டி, சிறுசிறு குழுக்களாகப் பிரித்து, ஆற்றங்கரையில் காய்கறித்தோட்டம் செய்து, அதன் மூலம் தமது வருவாயைப் பெருக்கிக்கொள்ள ஆவன செய்தேன். இதற்கும் அரசாங்கம் எனக்குப் போதியளவு காணிகளைத் தந்து எனது முன்னெடுப்புக்களை ஊக்குவித்தது. முன்பு நெற்செய்கையில் மட்டுமே ஈடுபட்டிருந்தவர்கள் பின்னர் தோட்டம் செய்யவும் பழகிக்கொண்டனர்.

அடுத்து கடற்றொழிலாளருக்கான கூட்டுறவுச் சமாசம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து நான் அதன் தலைவராகச் செயற்பட்டேன். இதனைத் தொடர்ந்து கொழும்பு மீன்பிடிக்கூட்டுத்தாபனத் தலைவர், மீன்பிடி ஆலோசனைக்கூட்ட அங்கத்தவர் ஆகிய பதவிகளையும் வகித்தேன்.

1991ம் ஆண்டு காலக்கட்டத்தில் மன்னார்த்தீவை நாட்டின் ஏனைய பாகங்களுடன் இணைக்கும் பாலம் உடைக்கப் பட்டதால் நான் அரசாங்கத்துடன் பரிந்து பேசி கற்பிட்டிக்கும் - மன்னாருக்கும் இடையே மக்களின் போக்குவரத்துக்காக இரண்டு கப்பல்களை ஒழுங்கு செய்தேன். இதனால் "கப்பலோட்டிய தமிழன் " என்ற பட்டப் பெயரையும் பெற்றுக்கொண்டேன்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# Asian Mission Congrass

# ஆசிய மறைத்தூதுப் பணி மாநாட்டு அனுபவங்கள்

**நவம்பர் மாதத் தொடர்ச்சி...**

மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து இம்மாநாட்டில் பங்கேற்ற பிரதிநிதிகளில் ஒருவரான திரு. மாட்டின் டயஸ் அவர்கள் தனது மாநாட்டு அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிறார்.

4.00 மணிக்கு வழங்கப்பட்ட தேனீர் இடைவேளையைத் தொடர்ந்து 4.30 மணிக்கு சகல பிரதிநிதிகள் மற்றும் பார்வையாளர்களுக்கான குழுநிலைப் பகிர்வு இடம்பெற்றது. கீழ்வரும் பிரதிநிதிகள் ஆசியக்கண்டத்தின் பல்வேறு நாடுகளிலிருந்தும் மாநாட்டில் பங்குகொண்டனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. பங்களாதேஸ் | 10 | 2. புறுனோய் | 05 |
| 3. கம்போடியா | 26 | 4. கிழக்குத் திமோர் | 01 |
| 5. கொங்கொங் | 17 | 6. இந்தியா | 48 |
| 7. இந்தோனேசியா | 45 | 8. யப்பான் | 21 |
| 9. கசக்ஷ்தான் | 06 | 10. லாவோஸ் | 24 |
| 11. மக்காயு | 04 | 12. மலேசியா | 38 |
| 13. மங்கோலியா | 14 | 14. மைன்மார் | 14 |
| 15. நேபாளம் | 04 | 16. பாகிஸ்தான் | 14 |
| 17. பிலிப்பைன்ஸ் | 48 | 18. சிங்கப்பூர் | 20 |
| 19. தென்கொரியா | 14 | 20. சிறிலங்கா | 25 |
| 21. தாய்வான் | 19 | 22. தாய்லாந்து | 30 |
| 23. தாய்லாந்து | 354 | 24. தேக்மேனிஸ்தன் | 06 |
| 25. உஸ்பெக்கிஸ்தான் | 01 | 26. வியட்நாம் | 15 |

| | |
|---|---|
| வெளிநாட்டுப் பார்வையாளர் | 47 |
| தாய்லாந்துப் பார்வையாளர் | 65 |
| **இவர்களோடு** | |
| ஆசிய மறைபரப்பு மாநாட்டு மேனிலையாளர்கள் | 14 |
| ஆசிய ஆயர் பேரவை உறுப்பினர் | 24 |
| ஊடகத்துறையாளர்கள் | 09 |
| சிறப்பு அழைப்பினர் | 20 |
| அறிவிப்பாளர்கள் | 03 |
| வள ஆளணியினர் | 06 |
| விசுவாசப் பகிர்வாளர்கள் | 18 |
| மறைபரப்பாளர்கள் (Missiologist) | 10 |
| மொத்தம் | 1039 |

**மொத்தமாக 26 நாடுகள!** எல்லாப் பிரதிநிதிகளும் ஏலவே குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொருவரும் என்ன குழுவைச் சார்ந்தவர் என்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. ஓரிரண்டு நிமிடங்களுக்குள்ளேயே குறிக்கப்பட்டுள்ள இடங்களிலே அணிதிரண்டு விட்டனர். குழுக்கள் ஒவ்வொன்றும் 15 ஆங்கில எழுத்துக்களின் பெயரால் அடையாளம் காணப்பட்டன. நிறைவான பகிர்வுக்காகவும் ஒவ்வொரு குழு அங்கத்தினருக்கும் போதிய நேரம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும் இக்குழுக்கள் 10 பேர் கொண்ட சிறிய குழுக்களாகப் பிரிந்தனர். இம்மாநாட்டின் முதலாவது குழு அமர்வு இது.

இன்றைய நாளின் தொனிப் பொருளான *"ஆசியக் கண்டத்தின் மக்களிடையே இயேசுவின் கதை"* என்பதற்கு அமைய ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் "யேசுவின் அனுபவத்துக்கு – கிறிஸ்துவ விசுவாசத்துக்கு நான் எவ்விதம் அழைக்கப்பட்டேன்? யேசு என் வாழ்வில் எவ்விதம் துணை நின்றார்? என் விசுவாசத்தில் நான் உறுதியாய் இருப்பதற்கு துணையாய்த் - தூண்டுகோலாய் இருந்தவர்கள் யார்? எப்படி?" என்பவை இந்நாள் பகிர்வில் இடம்பெற்றன.

என்னைக் கற்பித்து ஆளாக்கிய நாரந்தனையைச் சேர்ந்த அதிபர் அமரர் சிங்கராயர் அவர்களையும் எனது ஆசிரிய கலாசாலை (கொழும்புத்துறை) அதிபராக இருந்து யாழ் மறைமாவட்டத்தின் ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட்ட மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களையும் நினைவுகூர்ந்தேன். பல்வேறுவிதமான அனுபவங்கள் பகிரப்பட்டன. குழுவிலிருந்து 10 பேரும் 10 நாட்டவர்கள். வெவ்வேறு கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்கள். மாறுபட்ட மொழிகளில் வித்தியாசமான உருவத் தோற்றங்கள். ஆனாலும் ஒரு ஒற்றுமை! நாம் எல்லோரும் கிறிஸ்தவர் - கத்தோலிக்கர்! கிறிஸ்து என்ற கல்வாரிக் கதாநாயகனைப் பின்செல்பவர்கள்.

அதன் பின்பு மாநாட்டு மண்டபத்தில் 6.00 மணிக்கு அருட்பணி ஜூலியன் சல்டானா (Julian Saldana SJ)அவர்களின் உரை இடம்பெற்றது. இரவு 7.15 மணிக்கு இரவுணவு.

இரவு 8.30 மணிக்கு முன்பு குறிப்பிட்ட கலை அரங்கில் மாநாட்டுப் பங்காளர் அனைவரும் ஒன்றுகூடினோம். பாங்கொக் நகரிலிருந்து வந்திருந்த (தாய்லாந்தின் தலைநகரம் பாங்கொக் என்பது நாம் அனைவரும் அறிந்த விடயம்) உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் குழு இதமாக இசை வழங்கிக்கொண்டிருந்தது. இரு மணித்தியாலங்களுக்கு பல்வேறுவிதமான கலை நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. இதில் முக்கிய இடத்தைப் பிடித்ததும் இங்கு குறிப்பிட்டு சொல்லப்பட வேண்டியதும் ***தாய்லாந்து என்ற நாட்டிற்கு கிறிஸ்தவம் எப்படி வந்தது*** என்பதுதான்.

தாய்லாந்துக்கு கிறிஸ்தவம் வந்தபோது அது மன்னராட்சி நாடு. இன்றும் ஒரு மன்னராட்சி நாடுதான். சமீபத்திலே நடந்த புரட்சியில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இதில் வினோதம் என்னவென்றால் ஒரு துளி இரத்தம்கூட இப்புரட்சியில் சிந்தப்படவில்லை என்பதுதான். அத்தோடு புரட்சியின் பின்பும் - மன்னர் அவருக்கிருந்த எல்லாப் பெருமைகளோடும் இன்றும் பேணப்படுகின்றார் ***மன்னர் நீடூழி வாழ்க (Long live the king)*** என்ற வாழ்த்துப் பலகைகளை இன்றும் விமான நிலையத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. அன்றும் இன்றும் மன்னரைச் சந்திக்கும் மக்கள் தரையில் சிரம் பதித்து வணங்கியே மரியாதை செலுத்துகின்றனர்.

மன்னரோடு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்ட பிறகுதான் கிறிஸ்துவின் கதையை தாய்லாந்து மக்களுக்குச் சொல்ல ஆரம்பித்திருக்கின்றார்கள்.





தாய்லாந்து என்று இன்று அழைக்கப்படும் நாடு முன்பு சீயம் என அழைக்கப்பட்டது. சீயம் என்றால் என்ன பொருள் தெரியுமா? ***வெள்ளை யானைகளின் பூமி.*** அப்படியானால் தாய்லாந்து என்பதற்கும் பொருள் உண்டா? உண்டு... ***புன்னகையின் பூமி.***

தாய்லாந்து ஒரு பௌத்த நாடு. 95% மான மக்கள் தொகையினர் பௌத்தர்கள். 66 மில்லியன் மக்கள் வாழுகின்ற நாட்டிலே வெறும் 3 இலட்சம் மட்டுமே கத்தோலிக்கர். நம் நாட்டைப் போலவே போர்த்துக்கேயர்தான் கிறிஸ்துவின் கதையை தாய்லாந்து மக்களுக்குச் சொன்னவர்கள். 16ம் நூற்றாண்டில் இப்பணி ஆரம்பித்தது. 1518இல் தாய்லாந்துக்கு வந்த (சியாம்) போர்த்துக்கேயர் மறைபரப்புச் செய்ய மன்னரிடம் அனுமதி பெற்றனர். 1567இல் சியாம் நாட்டில் அயுத்தயா என்னுமிடத்தில் இரு டோமினிக்கன் சபையைச் சேர்ந்த குருக்கள் ஜெரோணிமோ டி குரூஸ் (Friar Jeronimo De Cruz) செபஸ்ரியோ டி கன்ரோ (Sebiesteo De Canto) மறைபரப்பாளர்களாக சியாமுக்கு வந்தனர்.

அவர்களைத் தொடர்ந்து 1582 முதல் 1767 வரை பிரான்சிஸ்கன் குருக்களும், அகஸ்ரீனியன் குருக்களும், யேசு சபைக் குருக்களும் மறை போதகம் செய்தனர். இவ்விதமாகத் தொடர்கிறது சீயம் நாட்டின் கிறிஸ்தவ விசுவாச விதைப்பு.

சில மன்னர்களின் கீழ் கிறிஸ்தவர்கள் துயரங்களைச் சந்தித்தும் சித்திரவதைகளுக்கு முகம்கொடுத்தும் வேதசாட்சிகளாய் விசுவாசத்துக்கு உரமிட்டதும் தாய்லாந்தின் வரலாற்றுப் பதிவுகள். இவையாவும் அந்தந்தக்காலப் பின்னணியிலேயே தத்ரூபமாக மேடையேற்றப்பட்டன. தற்போது இங்கு 10 மறைமாவட்டங்கள் இருக்கின்றன. 695 குருக்கள், 121 அருட்சகோதரர்கள், 1428 அருட்சகோதரிகள். 470 ஆலயங்கள் உண்டு.

தாய்லாந்தில் மறைத்தூதுப் பணிக்கான நல்ல களம் சிறப்பாக சியாங்மாய் மறைமாவட்டத்தில் இருப்பதாகவும் அடுத்த ஒரு தசாப்பதத்தில் பல்லாயிரக்கணக்கான தாய்லாந்து மக்களுக்கு மறைத்தூது (கிறிஸ்துவின் கதை) சொல்லப்படும் என்ற நம்பிக்கையும் தெரிவிக்கப்பட்டது. தாய்லாந்தின் பழங்குடியினருக்கும் கிறிஸ்து எடுத்துச் செல்லப்பட்டது ஒரு சிறப்பம்சமாகும்.

இக்கலை நிகழ்வுகளுக்குப் பல நூறு மாணவர்கள் அழைத்துவரப்பட்டிருந்தனர். இவர்களில் பலர் தாய்லாந்தின் தலைநகரமான பாங்கொக் நகரிலிருந்தும் அழைத்துவரப்பட்டிருந்தனர். ஒரு பாண்ட் (Band) வாத்தியக்குழுவும் வந்திருந்து இசைவழங்கியது. மேடை அமைப்பும் ஒப்பனையும் அந்தக்காலப் பின்னணியைக் கொண்டிருந்தது. கைக்கடிகாரம் தான் நள்ளிரவை அண்மித்துவிட்டது என்பதைக் கோடிட்டுக்காட்டியதே தவிர உறங்காத அந்த லோட்டஸ் ஹொட்டல் 24 மணிநேரமும் இயங்கிக்கொண்டே இருந்தது.

## 20ம் திகதி - 2ம் நாள் நிகழ்வு

இரண்டாம் நாளான 20ம் திகதி காலை நிகழ்வுகள் 6.00 மணிக்குத் திருத்தந்தையின் சிறப்புப் பிரதிநிதி கர்தினால் அவர்கள் தலைமை தாங்கி நடாத்திய கூட்டுத் திருப்பலியுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து காலை உணவு 8.30 மணிக்கு. மாநாட்டின் நிகழ்வுக்கான இசைவாக்கம். இந்த இசைவாகக நிகழ்வுகளிலே ஒருநாட்டிய நாடகமும் இடம்பெற்றது. இது பொதுவாக பங்குபற்றுனர்களை பிற சிந்தனைகளிலிருந்து நிகழ்வுகளின் வழிச்செல்ல ஒருமுகப்படுத்துகின்ற நிகழ்வு ஆகும்.

இந்நாட்டிய நாடகத்தை நம் அயல் நாடாம் இந்திய தேசத்திலிருந்து வந்திருந்த கலைஞர்கள் அரங்கேற்றினர். இவர்களில் இருவர் மட்டும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். ஒருவர் பெண். மற்றையவர் ஆண். இந்தப் பெண் இலங்கையில் மலைநாட்டில் பிறந்தவர். சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தில் குடும்பத்தோடு (அம்மா, அப்பா) இந்தியா சென்று குடியேறியவர். இந்த இருவரோடு இந்தியாவின் ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த வேறு நால்வரும் வந்திருந்தனர். ஒவ்வொருவரும் நாட்டியத்தில் பாண்டித்தியம் பெற்றவர்கள். உலகின் பல அரங்குகளில் தமது நிகழ்வுகளை அரங்கேற்றியவர்கள். பல பட்டங்களுக்கும் டிப்ளோமாக்களுக்கும் சொந்தக்காரர்கள்.

அன்றைய நாளில் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை யேசு மன்னிக்கும் காட்சி அரங்கேறியது. பரத நாட்டியக் கலையில் இக்காட்சி அரங்கேறினால் எப்படியிருக்கும். அமோக பாராட்டுக்கள் - கரகோஷங்கள். மண்டபத்தின் எல்லா மூலைகளிலிருந்தும் ஒலித்தன. மொழி வழி இல்லாமலே கலை மனித இதயங்களை எப்படி ஆட்கொள்கின்றது என்பதற்குச் சான்றாக இந்நிகழ்வு அமைந்தது. இந்நாளின் முக்கியமான நிகழ்வு ஆசிய நாடுகளில் காணப்படும ஏனைய விசுவாசத்தைச் சேர்ந்தவர்களின் பகிர்வு ஆகும்.

இதில் இஸ்லாத்திலிருந்து கிறிஸ்தவ விசுவாசத்துக்கு அழைக்கப்பட்ட எம். ஆட்டஸ் சபூர் அவர்களும் பௌத்தத்திலிருந்து அழைக்கப்பட்டு தன்னை குருத்துவ நிலைக்கு உயர்த்திக்கொண்ட அருட்தந்தை ஜீன் தனகா அவர்களும் இந்து சமயத்திலிருந்து திரு. அரவிந்தக்ஷா மேனோப் அவர்களும் தங்கள் பகிர்வைச் செய்தனர். ஒவ்வொன்றும் விசுவாசத்துக்குச் சாட்சியான கிறிஸ்துவின் விசேட அழைப்பை உறுதிப்படுத்தும் ஒவ்வொரு உண்மை வரலாற்றுப் பதிவுகள். ஏனெனில் அவர்கள் அனைவரும் சாதாரண பின்னணியில் இருந்து வந்தவர்கள் அல்ல. அறிவிலும் சமூக அந்தஸ்து, பொருள்வளம் ஆகியன நிறையப்பெற்ற சமூக குடும்பப் பின்னணியிலிருந்து வந்தவர்கள்.

மதிய உணவின் பின் 2.00 மணிக்கு குழு அமர்வு இடம் பெற்றது. தனிப்பட்ட ஒவ்வொருவருடைய பங்களிப்பும் சிறப்பாக இருக்க வேண்டுமென்பதற்காக இந்த அமர்வுக்கு 2.30 மணித்தியாலங்கள் வழங்கப்பட்டன. கருப்பொருள்: *எனது நாட்டிலே பிற சமய சகோதரரில் நான் கண்டு வியந்த சிறந்த தன்மை, பண்பு என்ன?* என்பதாகும்.

எனது குழுவில் நான் பங்களிப்புச் செய்தபோது, நமது மண்ணிலே நான் சந்தித்த இஸ்லாமிய சகோதரர் பற்றியும் இந்து சகோதரர் பற்றியும் பகிர்ந்துகொண்டேன். உரைகளையும் உணவையும் தொடர்ந்து இரவு 8.15 மணிக்கு மாநாட்டு மண்டபத்தில் மறைத்தூது செபமாலை ஓதி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் சிறிய மறைத்தூது செபமாலை ஒன்று வழங்கப்பட்டது. ஐந்து காரணிக்க மணிகளும் ஐந்து நிறங்களில் இருந்தன. ஒவ்வொரு நிறமணிகளும் ஒவ்வொரு கண்டங்களைப் பிரதிபலிப்பதாக விளக்கம் தரப்பட்டது. அங்கு கூடியிருந்த ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் ஐந்து கண்டங்களைச் சார்ந்த சகல மக்களுக்காகவும் அவர்களின் அமைதிக்காகவும் உலகின் சமாதானத்திற்காகவும் கிறிஸ்து அரசரின் அரசுக்காகவும் வேண்டிக்கொண்டனர்.

## 21ம் திகதி 3ம் நாள் நிகழ்வு

இந்நாளுக்கான தொனிப்பொருள் **"ஆசியாவின் பண்பாடுகளின் யேசுவின் கதை"** என்பதாகும்.

ஆசியா ஒரு பரந்த கண்டம். பெரும் நிலப்பரப்பைக் கொண்டது. பல்வேறு நாடுகள் - மொழிகள் ஒன்றுக்கொன்று தொடர்பே இல்லாத கலை கலாச்சாரங்கள், பண்பாடுகள்! ஆயினும் அவை அனைத்தும் பெறுமதி மிக்கவை. பெருமையோடு போற்றப்படுபவை. இக்கலாச்சாரப் பின்னணிகளுக்கூடாக எப்படி யேசுவின் கதை மக்களுக்குச் சொல்லப்படலாம் எனக் கண்டறிவதே இந்நாளின் குறிக்கோளாக இருந்தது.

ஏனைய இருநாட்களையும் போலவே இன்றும் காலை 6.00 மணிக்குத் திருப்பலி. கர்தினால் ரிக்காடோ விடல் (Ricardo Cardinal Vidal) தலைமையில் கூட்டுப்பலி. பலியின் ஆரம்ப வருகையின்போது தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் தத்தம் கலாச்சார உடைகளில் (தேசிய உடைகளில்) ஆயர்களின் முன்னால் வரிசையாக வந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. சில ஆடை அணிகளைப் படங்களில்தான் கண்டிருந்தோம். இப்போது நேரிற் கண்டோம்.

இன்றும் மாநாட்டு இசைவாக்கம் பல பண்பாட்டுக் கோலங்களில் மேடையேற்றப்பட்டன. 9.15 முதல் 12.15 வரை பல்வேறு நிலையினரின் விசுவாசப் பகிர்வு இடம்பெற்றது. இந்த விசுவாசப் பகிர்வுகளையும் உரைகளையும் இதில் தொட்டு சேர்த்து எழுத வேண்டுமாயின் இத்தொடர் பல மாதங்கள் வரை நீளும்.

இரண்டு மணிக்கு மீண்டும் ஒரு குழு அமர்வு. இக்குழு அமர்வின் தொனிப்பொருள் ***எனது கலாச்சாரத்தில் எந்த நடை முறை அல்லது பாரம்பரியம் கிறிஸ்துவின் நற்செய்தியைச் சிறப்பாகக் கூறுகின்றது?***

தேனீர் இடைவேளைக்குப் பின் பி.ப 5.00 மணிக்கு குழு அமர்வின் ஒருமுகப்படுத்தப்பட்ட தொகுப்பும் பிரதிபலிப்புக்களும் வழங்கப்பட்டன. இன்றைய இரவுணவு வித்தியாசமான முறையில் எல்லோரும் ஒன்றாக இருந்து உண்ணும் வகையில் அமைந்திருந்தது. இவ்வுணவு மாநாட்டு மண்டபத்திலேயே வழங்கப்பட்டது. கிறிஸ்து தம்சீடர்களோடு ஒன்றாக இருந்து இரவுணவு ஒன்றை உண்டார். யேசுவின் ஆசிய சீடர்களான நாம் அனைவரும் ஒன்றாக இருந்து இரவுணவு ஒன்றை அருந்தினோம். இந்த இரவுணவுக்கு முன் Grand Socialization என்றழைக்கப்பட்ட உறவுகளைக் கட்டியெழுப்பும் நிகழ்வு ஒன்று இரண்டு மணித்தியாலங்களுக்கு மாநாட்டு மண்டபத்திற்கு அருகிலிருந்த மற்றொரு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (தொடர்ச்சி 16ம் பக்கம்)

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2232140, Fax : 023-2232893, E-mail : valvum@sltnet.lk


## வாழ்வுதயம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு

# வெள்ளி விழா யூபிலி சிறப்பிதழ்

## வாழ்வுதயத்தின் செயற்பாடுகள்

## (1981 - 2006) ஓர் கண்ணோட்டம்

### வாழ்வுதயத்தின் தூர நோக்கு

**இன, மத, குல, பேதமற்ற அன்பு, மன்னிப்பு, சமாதானம், ஒற்றுமை, சமத்துவம் ஆகிய நற்செய்தி விழுமியங்களின் அடிப்படையில் வாழ்ந்து, நீதியானதும் மற்றும் சமாதானமானதுமான இலங்கைச் சமூகம் ஒன்றை உருவாக்குதல்.**



### வாழ்வுதயத்தின் வரலாறு

மன்னார் மறைமாவட்டம் 1981ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இம்மறைமாவட்டமானது மன்னார், வவுனியா ஆகிய இரண்டு நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய 3952 ச. கி. மீ. பரப்பளவை கொண்டதாகும். 1980களின் ஆரம்பப் பகுதியில், வறிய மக்களுக்கு அவர்களின் தேவையின்போது உதவுவதற்கும், கத்தோலிக்க விழுமியங்களை வாழ்வாக்குவதற்கும், மறைமாவட்ட நிறுவனம் ஒன்று தேவை என்ற கருத்து குருக்கள் மற்றும் பொதுநிலையினரால் முன்வைக்கப்பட்டது. இக்கனவானது இலங்கையின் மறைமாவட்டங்களுக்கான சேவைகளை ஒருங்கிணைக்கும் "சமூகப் பொருளாதார அபிவிருத்தி மற்றும் கல்விக்கான நிலையம்" எனப்பொருள்படும் கொழும்பில் அமைந்துள்ள செடக் (SEDEC) என்னும் அமைப்பின் மூலமாக கத்தோலிக்க ஆயர் பேரவையினால் நனவாக்கப்பட்டது.

வாழ்வுதயம் 1981ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதாவது மன்னார் மறைமாவட்டம் உருவாகிய அதே ஆண்டே வாழ்வுதய நிறுவனமும் நிறுவப்பட்டது. மன்னார் ஆயரினால் நிர்வகிக்கப்படும் இந்நிறுவனமானது மறைமாவட்டத்தின் சமூக, பொருளாதார, கல்வி, மற்றும் சமயத் தேவைகளை பூர்த்திசெய்து வருகின்றது.

மன்னார் மறைமாவட்டத்தின் முதலாவது ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் 1981ம் ஆண்டு யூலை 30ம் திகதி மடுத்திருப்பதியில் ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டார். ஆயர் அவர்கள் 1992ல் யாழ் மறைமாவட்டத்திற்கு மாற்றலாகிச் செல்லும்வரை ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக இயேசுவின் பணியை மன்னார் மறைமாவட்டத்தில் முன்னெடுத்தது மட்டுமல்லாமல், வாழ்வுதயத்தின் வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றியுள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் 1992ம் ஒக்ரோபர் 20ம் திகதி மடுத்திருப்பதியில் ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டார். அத்தினத்திலிருந்து இன்றுவரை தனது மந்தையை ஆன்மீகத்தில் வழிநடத்தி வருவதுடன் தனது மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சியிலும் அக்கறைகொண்டு சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார்.

மன்னார் மறைமாவட்டத்தினுடைய தோற்றத்தின் பின்னர் வாழ்வுதயமானது மடுத்திருப்பதியில் அன்றைய ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் தலைமையில் இயங்கி வந்தது. பின்னர் 1985ம் ஆண்டு வாழ்வுதய அலுவலகமானது மடுத்திருப்பதியிலிருந்து மன்னார் நகரத்திற்கு மாற்றப்பட்டது. அலுவலகத்திற்கென தனியான ஒரு கட்டடம் இல்லாத காரணத்தினால் புனித செபஸ்தியார் பேராலயத்துடன் இணைந்திருந்த பழைய பங்குப் பணிமனையில் இயங்கி வந்தது. விரிவடைந்து வந்த வாழ்வுதயத்தில் பணிகளும், சேவைகளும் தனியான ஒரு அலுவலகக் கட்டடத்திற்கான தேவையை அதிகப்படுத்தியதினால் வாழ்வுதய செயலகத்திற்கென தனியான ஒரு கட்டடம் மன்னார் நகரத்தின் இதயப்பகுதியான பிரதான வீதியில் நிர்மாணிக்கப்பட்டது. நிர்வாகப்பகுதி, களஞ்சியம், நூலகம், அச்சகம், மற்றும் இயக்குனர் தந்தையின் வாசஸ்தலம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய வாழ்வுதயத்தின் புதிய இரண்டு மாடிச் செயலகமானது 1989ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து செயற்பட ஆரம்பித்தது.

இவ்வேளையில் வாழ்வுதயம் உருவான நாளிலிருந்து இன்றுவரை வாழ்வுதயத்தின் இயக்குனர்களாக இருந்து தங்களது நிர்வாகத் திறமை மற்றும் வழிநடத்தலின் மூலம் வாழ்வுதயத்தின் பணிகளை முன்னெடுத்துச் சென்ற இயக்குனர்களையும் நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம்.

வாழ்வுதயத்தின் முதலாவது இயக்குனராகத் தனது பொறுப்பினை ஏற்றுக்கொண்ட அருட்தந்தை J. B. தேவராஜா அவர்கள் தனது பணியினை மே 1981 தொடக்கம் டிசம்பர் 1984 வரை முன்னெடுத்துச் சென்றார். யூன் 1985ல் இருந்து யூன் 1995 வரை அருட்தந்தை அல்பன் ராஜசிங்கம் OMI அடிகளாரும், யூன் 1995ல் இருந்து ஆகஸ்ட் 2001 வரை அருட்தந்தை S. எமிலியானுஸ்பிள்ளை அவர்களும், ஆகஸ்ட் 2001ல் இருந்து ஆகஸ்ட் 2006 வரை அருட்தந்தை P. யேசுராஜா அவர்களும் வாழ்வுதயத்தின் இயக்குனர்களாக பணியாற்றி இந்நிறுவனத்தின் ஒவ்வொரு வளர்ச்சிப்படியிலும் தோள்கொடுத்தவர்கள் ஆவர்.

வாழ்வுதயத்தின் இயக்குனர் வரிசையில் ஐந்தாவது இயக்குனராக தனது பணிப்பொறுப்பினை 2006 ஓகஸ்ட் 20 அன்று ஏற்றுக்கொண்ட அருட்தந்தை S. J. பெப்பி சோசை அடிகளார் நிர்வாகம் மற்றும் திட்டப் பொறுப்புக்களை திறம்பட முன்னெடுத்து வருகின்றார்.

வாழ்வுதயத்தின் பணிகள் பங்கு மட்டத்தில் மறைமாவட்டத்தின் 27 பங்குகளினுடைய பங்குத்தந்தையர்களின் வலைப் பின்னலூடாக ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன.

1981ம் ஆண்டு வாழ்வுதயம் ஆரம்பிக்கப்பட்டபோது எமது மறைமாவட்டத்தின் மொத்தப் பங்குகளின் எண்ணிக்கை 15 ஆக மட்டுமே இருந்தது. ஒவ்வொரு பங்குக் குருவும் தமது பங்குமட்டத்தில் வாழ்வுதயத்தின் பங்குமட்ட இயக்குனராகவே செயல்பட்டு வருகின்றனர். இதன் காரணத்தினால் வாழ்வுதயத்தின் பணிகள் இலகுபடுத்தப்படுவதுடன் தடையின்றி இயங்கக்கூடியதாகவும் இருக்கின்றன. வாழ்வுதயம் என்கின்ற பெரு விருட்சமானது அதன் ஆரம்பக் காலத்திலிருந்து இன்று வரை தனது குறிக்கோள் மாறாமல் 25 வருடமாக சேவையாற்றிக்கொண்டு வருவதற்கு எல்லாம் வல்ல இறைவனின் துணையே காரணமாக அமைகின்றது.

### வாழ்வுதயத்தினால் வழங்கப்படும் சேவைகள் :

1. *அவசரகால நிவாரண உதவி*
   - உணவு மற்றும் உணவு அல்லாத நிவாரணப் பொருட்கள்
   - மருத்துவ உதவி
   - மரணச் சடங்கிற்கான உதவி
2. *வீட்டுத்திட்டம்*
   - கிடுகு வழங்கல்
   - தற்காலிக கொட்டகை வழங்கல்
   - நிரந்தர வீடுகளை அமைத்தல்
3. *குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள்*
   - மலசல கூடங்களை நிர்மாணித்தல்
   - விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவைக்காக கிணறுகளை அமைத்தல்.
4. *கல்விக்கான ஊக்குவிப்பு*
   - ஆரம்பப் பாடசாலைகளை நடாத்துதல்.
   - ஆரம்பப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமித்தல்
   - ஆரம்பப் பாடசாலை சிறுவர்களுக்கான சத்துணவு வழங்கல்.
   - அரசாங்கப் பாடசாலைகளுக்கு தொண்டர் ஆசிரியர்களை நியமித்தல.
   - போர் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதி உதவி.
   - பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவி.
5. *மனித உரிமைகள் விழிப்பூட்டல் திட்டம்*
6. *தொழில் பயிற்சி வழங்கல்*
   - தையல்
   - வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சி.
   - வீட்டுப்பாவனைப் பொருட்கள் திருத்தும் பயிற்சி.
   - வீட்டு மின்னிணைப்புப் பயிற்சி
   - தச்சுவேலை
   - மேசன்வேலை
   - உழவு இயந்திரம் திருத்தும் பயிற்சி
   - சீமெந்துக் கல் உற்பத்திப் பயிற்சி
   - கணினிப் பயிற்சி
7. *அச்சகம் மற்றும் புத்தகம் கட்டுதல்*
8. *கிராமிய விழிப்பூட்டல் திட்டம்*
   - கிராமிய ஊக்குவிப்புக் குழுக்களை உருவாக்குதல்
   - குழு அங்கத்தவர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குதல.
   - குழுக்களுக்கான சுழற்சி முறை கடன் வழங்குதல்
   - உறவுப்பால நிகழ்வுகள்
   - குழுப்பரிமாற்ற நிகழ்வுகள்
9. *உதவிக்கரம்*
   - செயற்கைக்கால் பொருத்துதல்
   - நடமாடுவதற்கான உபகரணங்கள் வழங்கல்
   - இயன் மருத்துவம்
   - விசேட தேவைக்கான பொருட்களைத் தயாரித்தல்
   - கண் பரிசோதனையும், மூக்குக்கண்ணாடி வழங்கலும்.
10. *உளவள ஆற்றுப்படுத்தல்*
    - உளவளத்துணை
    - HIV எயிட்ஸ் விழிப்புணர்வு

# கதையும் கருத்தும் களமும்

அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி



விருந்தொன்றுக்கு சென்று வந்த விஞ்ஞானி ஐயன்ஸ்ரைனிடம், "விருந்து எப்படி இருந்தது?" என மனைவி வினவினாள். "நன்றாக ஏற்பாடு செய்திருந்தார்கள். நீங்களும் வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!" எனக் கூறிவிட்டு தாம் சந்தித்த அறிஞர்கள் பகிர்ந்துகொண்ட பலவகைப்பட்ட அறிவியல் கண்டுபிடிப்புக்கள், விடயங்கள் பற்றி விளக்கிச் சொல்லிக்கொண்டிருந்தார். "நான் இந்த அறுவையை எல்லாம் கேட்கவில்லை!... விருந்துக்கு வந்திருந்த பெண்கள் என்ன வகையான சாறிகள், 'கவுண்'கள் அணிந்திருந்தார்கள்? என்று கூறுங்களேன்!..." என்றாள்.

ஐயன்ஸ்ரைன் மனைவியை அன்பொழுக உற்றுநோக்கி, "இங்க பார்... விருந்துண்ண அமர்ந்திருக்கும்போது மேசைக்கு மேல் பெண்களின் முகம் மட்டும்தான் தெரிந்தது. உன் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் நான் மேசைக்கு கீழே குனிந்து பார்த்திருக்க வேண்டும். அது அவ்வளவு நாகரிகமாக இருக்காது. அத்தோடு பல அசிங்கமான காட்சிகளையும் பார்க்கவேண்டி வந்திருக்கும் என்பதால் அப்படிச் செய்யவில்லை?" என்று பதிலுரைத்தார்.

பல பெண்கள் தங்களுக்குள்ளே கிடக்கும் ஆற்றல்களை, திறமைகளை இனம்கண்டு பயன்படுத்தி முன்னேறாமல் அற்ப சொற்ப விடயங்களில் சக்தியையும், காலத்தையும், பணத்தையும் வீணே விரையம் செய்துவிடுகின்றனர். அழகுபடுத்துதல், கவர்ச்சியான ஆடை, அணிகலன்களை அணிதல் போன்றவற்றைப் பொதுவாக எல்லாரும் செய்கிறார்கள். ஆனால், இவற்றில் ஆண்களைவிடப் பெண்களே ஒப்பீட்டளவில் அதிகமாக ஈடுபடுகிறார்கள் என்பது கண்கூடு.

கண்ணால் கண்ட ஒரு சில உதாரணங்கள்: கண்ணிமைக்கு ஒருவகை மை, உதட்டிற்கு இன்னுமொரு மை, முகத்துக்கு ஒரு வகை 'கிறீம்', தலைமுடிக்கு இன்னுமொரு வகை 'கிறீம்', கைவிரல் நகங்களுக்குமேல் செயற்கை நகங்கள் வைத்து ஒட்டி அதற்கு மற்றொரு வகை மை, கால் விரல்களுக்கு வேறொரு வகை மை, இத்தனையும் காணக்கூடியதாகப் பூசப்படுகின்ற மைகளும், கிறீம்களும்! காணமுடியாதவாறு இன்னும் எத்தனையோ?... காது ஓட்டைகள் தாங்க முடியாத வளையங்கள், மூக்கில் குத்தாமல் குத்தியிருக்கும் மூக்குத்தி, கழுத்துச் சுமக்க இயலாத ஒரு தொகுதி சங்கிலிகள், கைநிறைய வளையல்கள்... வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனத்தில் ஒருசில மணித்தியாலங்கள் உல்லாசமாக வருவதுபோல கொஞ்ச நேரத்திற்கான தடல்புடலான அலங்கரிப்புக்கள்! இவ்வளவிற்கும் இவர்கள் எவ்வளவு நேரத்தை, சக்தியை, பணத்தை செலவழிக்கிறார்கள்?....

"நாங்கள் அழகுபடுத்துவதால் உங்களுக்குப் பொறாமையா?" என நீங்கள் எங்களைப் பார்த்துக் கேட்கலாம். அம்மணிகளே! அழகாக இருங்கள். அப்போதுதான் நாங்கள் உங்களைப் பார்ப்போம். ஆனால், அழகு என்ற பேரில் உங்களை அலங்கோலப்படுத்தாதீர்கள் என்றுதான் வேண்டுகின்றோம். இயற்கையாகவே அழகாக இருக்கிறபோது, பிறகேன் அளவுக்கு மீறிய அலங்காரங்கள்? அழகுபடுத்துதலுக்கும் ஓர் அளவு இருக்கிறதுதானே! அணிகலன்களை அணிகிறீர்கள் நல்லது. அணியுங்கள். யார் தடுத்தது? அதற்கும் ஓர் அளவு உண்டுதானே! இதனைத்தானே, "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்றார்கள் நம் முன்னோர்.

"மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா. பங்கையக் கைந்நலம் பார்த்தல்லவோ - இந்தப் பாரினில் அறங்கள் வளருதம்மா" என்று பெண்ணின் பிறப்பையும், இருப்பையும், வளர்ப்பையும் பாடிப் புகழ்கின்றார் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை.

நாம் கூறவிளைவது என்னவென்றால், பெண்களே! இவ்வுண்மையை உணருங்கள். மற்றவர்களுக்கும் உணர்த்துங்கள். சமயங்களில்கூட பெண்களின் சிறப்பு பெருமையாகப் பேசப் படுவதைப் பார்க்கின்றோம். "இந்து சமயத்தில் சக்தியாக பார்வதி, பிரம்மனின் சக்தியாக சரஸ்வதி, வைணவத்தில் சக்தியாக லச்சுமி, கிறிஸ்தவத்தில் பெண்மையின் மகிமையாக மரியாள், குரானில் பெண்களுக்கு சமத்துவ உரிமை" என்று சமயங்களில் கூறப்படுகின்ற பெண்களின் மேன்மையை ஜெரி (சே. ச.) அடிகளார் கோடிட்டுக் காட்டுகிறார்.



"ஓடி விளையாடு பாப்பா. நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா. கூடி விளையாடு பாப்பா ஒரு குழந்தையை வையாதே பாப்பா. காலைஎழுந்தவுடன் படிப்பு. பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு. மாலை முழுதும் விளையாட்டு என்று பழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா" என்ற பாரதி பையனை விழித்துப் பாடாமல் பாப்பாவை விழித்துப் பாடுகிறார். ஆணுக்குச் சொன்னால் அது அவனோடு போய்விடும். பெண்ணுக்குச் சொன்னால் அது அடுத்த தலைமுறைக்கும் போய்ச் சேரும் என்பதை பாரதி உணர்ந்திருந்ததால்தான் பையனை விழிக்காமல் பாப்பாவை விழித்துப் பாடினார் என்கிறார்கள்.

விவிலிய மரபில் பெண்கள் பெறவேண்டிய இடத்தையும் அடையவேண்டிய நிலைமையையும் முழுமையாகப் பெறவில்லை ஆயினும், பெண்ணின் பெருமையை விவிலியம் அநேக இடங்களில் விளம்பாமல் இல்லை. நற்பண்புள்ள பெண்களை விவிலியம் பெருமையாகப் பாராட்டுகிறது (பழமொழி நூல்).

இன்று, சமுதாயத்தில் பெண்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்றால் கவலைக்கிடமான நிலையில் தான் இருக்கிறார்கள் என்று கருதவேண்டி இருக்கின்றது. "பெண் சமுதாயம் சந்திக்கின்ற பின்விளைவுகளாவன" என்ற தலைப்பில் எங்கோ படித்த வரிகள் நினைவுக்கு வருகின்றன. "ஓடாய்ப் போன உடல் நிலை, தன்னம்பிக்கை இழந்த தாழ்நிலை; கொடுமை வாழ்வின் புலம்பல் நிலை, வாழ வழியற்ற வறுமை நிலை, முடங்கிக் கிடக்கும் சமூகநிலை, ஆதரவற்ற முதுமைநிலை, மனமுடைந்து முடிவுதேடும் சோகநிலை" என்றார் அவ்வாசிரியர். "பெண் தன்னை விற்றுக்கொண்டால் விபச்சாரம். ஆண் தன்னை விற்றுக்கொண்டால் திருமணமாம்" என்று சமுதாயத்தில் பெண்களின் இன்றைய அவலநிலையை கவிக்கோ அப்துல் ரகுமான் அம்மணமாக அப்படியே காட்டுகிறார்.

கவிஞர் மு. மேத்தா, "தங்கமே! என் தங்கமே என்று தாயும் தந்தையும் கொஞ்சியதால்தானோ அந்த உயிருள்ள தங்கங்கள் தங்க நகை கேட்டும் தண்டிக்கப்படுகிறார்கள்" என்று தங்கம் கேட்டுத் தண்டிக்கப்படும் தங்கையர்களின் கண்ணீர் காட்சிகளை கண்ணுக்குள் கொண்டுவருகிறார்.

எனவேதான், பெண்கள் இனிமேலும் விழிப்படையவில்லை என்றால் காலாவதியான (Expired) சரக்குகளாகத்தான் போய்விடுவர்கள்! ஏனென்றால் பெண் அடிமைத்தனத்திற்கு அகவை (Age) ஏறிக்கொண்டே போகிறது!..."பெண்ணே! கொடிகளாம் நீங்கள். கொடிகள்தாம். கொம்பினைத் தேடிக் காற்றில் அலையும் காட்டுக் கொடியல்ல. இந்நாட்டின் தேசியக் கொடியென்று தெரியப்படுத்துங்கள். அன்னங்களாம் நீங்கள்! அன்னங்கள்தாம், ஆனால்... பாலிலிருந்து தண்ணீரை அல்ல விஷத்தையே பிரித்தெடுக்கும் வித்தியாச அன்னங்கள்." என்ற கவிஞர் வைரமுத்துவின் வைர வரிகளின் விழிப்புணர்வு பெற்றுப் பெண்கள் வீறுநடை போடவேண்டும். →

இரு பெண்கள் அருகருகே இருந்து தொடர்வண்டியில் பயணம் செய்துகொண்டிருந்தார்கள். "ஜன்னலைத் திறந்தால் குளிர் காற்றுப்பட்டு, காய்ச்சல் வந்து, சளி பிடித்து, சன்னியாக்கி இறந்து போவேன்.!" என்றாள் ஒருத்தி. மற்றவள், "ஜன்னலைத் திறக்காவிட்டா மூச்சடைத்து செத்துப்போவேன்!" என்றாள். தொடர்வண்டிக் காவலர் (Guard) செய்வதறியாது முளித்துக்கொண்டு நின்றார். இருக்கைகளை மாற்றி இருக்கவோ அல்லது வேறு எந்த ஆலோசனைக்கோ அசைந்து கொடுக்காதபடி இருவரும் பிடிவாதமாய் இருந்தார்கள். இவர்களின் முரண்பாட்டால் அத்தொடர்வண்டியில் பெரிய குழப்பமே ஏற்பட்டுவிட்டது! இச்சிக்கலைத் தீர்க்க முன்வந்த ஒரு சாதாரண பயணி, "முதலில் சற்று நேரம் ஜன்னலைத் திறந்து வையுங்கள். ஒருவர் சன்னிபிடித்து முடிந்துவிடுவார்! பின்னர் சற்று நேரம் ஜன்னலை மூடிவிடுங்கள். மற்றவர் மூச்சடைத்துப் போய்விடுவார்! அதன்பின்னர் நாங்கள் நிம்மதியாகப் போகலாம்..." என்றார்.

கருத்து என்ன சொன்னாலும் உங்கள் களநிலை எப்படி இருக்கிறது தாய்க்குலமே!...

## மன்னா விளம்பரப் பலகை

"எள்ளைக் கொட்டினால் பொறுக்கலாம். ஆனால் சொல்லைக் கொட்டினால் பொறுக்க முடியாது"
*தே. ஜெர்மா, சாளம்பன்.*

உன் விருப்பத்திற்கு தடையாய் வருபவை அனைத்தும் உன் அழைப்பிற்கு இறைவன் தரும் வாய்ப்புக்கள்.
*அ. றெஜிற்றா, பிடாரிகுளம், முருங்கன்.*

நல்லதை மட்டுமே காணும் குணம் இருக்கும்போது பொறுமை அங்கே பூத்துக் குலுங்கும். புகழ்ச்சிப் பூக்கள் அர்ச்சனை நடத்தும் - ஆ. சுபோதினி, செட்டிகுளம்

பணத்தை இழந்தால் சொற்ப நஷ்டம்,
நேரத்தை இழந்தால் எல்லாம் நஷ்டம்.
*ஆ. சுபோர்தினி, செட்டிகுளம்.*

கனவு காண். ஆனால் அதுதான் வாழ்க்கை என்றிராதே.
அதை நனவாக்கப் போராடு. அதுதான் வாழ்க்கை.
பீ. ஒகஸரீனா, இல. 25/1, ராணி மில் வீதி,
இறம்பைக்குளம் வவுனியா.

உண்மை சொல்லிக் கெட்டாரும் இல்லை,
பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லை.
*செ. நிதர்சனா கோமஸ், கற்கிடந்த குளம், முருங்கன்.*

"உண்மைகள் யாவற்றையும் நீ சொல்ல வேண்டியதில்லை.
ஆனால் நீ சொல்வது யாவும் உண்மையாக இருக்கட்டும்"
*செ. வித்தியா, மடுக்கோவில், மடு.*

"கவலை உனக்குள் இருக்கலாம்.
ஆனால் கவலைக்குள் நீ இருக்கக்கூடாது"
*ச. கிறிஸ்ரின், இலுப்பைக்கடவை, படகுதுறை.*

"எத்தொழிலும் செய்வது இழிவல்ல.
சோம்பலே இழிவானது." *தமிழன்பன், வங்காலை.*

## மன்னார் வலய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 'ஆங்கிலக் கரோல் பாடல் போட்டிகள்' - இறுதிப் பெறுபேறுகள் 09.12.2006

| தரம் | பா.வகை | குழுப்பிரிவு | பாடசாலை பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| 3-5 | கலவன் | தரம் III | மன்/ வாழ்க்கைப்பட்டான் கண்டல் றோ.க.த.க.பா. | 1ம் இடம் |
| | | | மன்/ சிறுக்கண்டல் றோ.க.த.க.பாடசாலை | 2ம் இடம் |
| | | | மன்/ சாந்திபுரம் அ.த.க. பாடசாலை | 3ம் இடம் |
| 3-5 | பெண்கள் | தரம் III | மன்/ சிறுத்தோப்பு றோ.க.த.க. பாடசாலை | 1ம் இடம் |
| 3-5 | ஆண்கள் | தரம் II | மன்/ வஞ்சியன்குளம் றோ.க.த.க பாடசாலை | 1ம் இடம் |
| 3-5 | கலவன் | தரம் IC | மன்/ புனித வளனார் றோ.க.த.பாடசாலை | 1ம் இடம் |
| | | | மன்/ நானாட்டான் ம.வி | 2ம் இடம் |
| | | | மன்/ அரிப்பு றோ.க.த.க. பாடசாலை | 3ம் இடம் |
| 3-5 | பெண்கள் | தரம் IC | மன்/ சென் மேரீஸ் பெண்கள் வித்தியாலயம் | 1ம் இடம் |
| 3-5 | பெண்கள் | தரம்IAB | மன்/ முருங்கன் ம.வி. | 1ம் இடம் |
| | | | மன்/ புனித சவேரியார் பெண்கள் ம.ம.வி. | 1ம் இடம் |
| 3-5 | ஆண்கள் | தரம்IAB | மன்/ புனித சவேரியார் ஆண்கள் ம.ம.வி. | 3ம் இடம் |
| | | | மன்/ பத்திமா ம.ம.வி. | 2ம் இடம் |
| 3-5 | கலவன் | தரம்IAB | மன்/ புனித ஆனாள் ம.ம.வி. | 1ம் இடம் |
| | | | மன்/ சித்திவிநாயகர் இந்து தேசிய கல்லூரி | 2ம் இடம் |
| 6-9 | ஆண்கள் | தரம் II | மன்/ வஞ்சியன்குளம் றோ.க.த.க.பாடசாலை | 1ம் இடம் |
| 6-9 | கலவன் | தரம் II | மன்/ துள்ளுகுடியிருப்பு றோ.க.த.க. பாடசாலை | 1ம் இடம் |
| 6-9 | பெண்கள் | தரம் IC | மன்/ சென் மேரீஸ் பெண்கள் வித்தியாலயம் | 1ம் இடம் |
| | | | மன்/ பரிகாரிகண்டல் அ.த.க. பாடசாலை | 2ம் இடம் |
| | | | மன்/ புனித வளனார் றோ.க.த.பாடசாலை | 3ம் இடம் |
| 6-9 | கலவன் | தரம்IC | மன்/ உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை | 1ம் இடம் |
| 6-9 | பெண்கள் | தரம்IAB | மன்/ புனித சவேரியார் பெண்கள் ம.ம.வி. | 1ம் இடம் |
| 6-9 | கலவன் | தரம்IAB | மன்/ புனித ஆனாள் ம.ம.வி | 1ம் இடம் |
| | | | மன்/ முருங்கன் ம.வி. | 2ம் இடம் |
| | | | மன்/ சித்திவிநாயகர் இ.தே.கல்லூரி | 3ம் இடம் |
| 6-9 | ஆண்கள் | தரம் IAB | மன்/ பத்திமா ம.ம.வி | 1ம் இடம் |
| | | | மன்/ புனித சவேரியார் ஆ.ம.ம.வி. | 2ம் இடம் |
| 10-13 | பெண்கள் | தரம் IC | மன்/ சென் மேரீஸ் பெண்கள் வித்தியாலயம் | 1ம் இடம் |
| | | | மன்/ அரிப்பு றோ.க.த.க. பாடசாலை | 2ம் இடம் |
| 10-13 | கலவன் | தரம் IC | மன்/ பரிகாரிகண்டல் அ.த.க. பாடசாலை | 1ம் இடம் |
| | | | மன்/ உயிலங்குளம் றோ.க.த.க. பாடசாலை | 2ம் இடம் |
| 10-13 | கலவன் | தரம் IAB | மன்/ பத்திமா ம.ம.வி | 1ம் இடம் |
| | | | மன்/ சித்திவிநாயகர் இந்து தேசியப் பாடசாலை | 2ம் இடம் |
| 10-13 | ஆண்கள் | தரம் IAB | மன்/ புனித சவேரியார் ஆண்கள் ம.ம.வி | 1ம் இடம் |
| 10-13 | பெண்கள் | தரம் IAB | மன்/ முருங்கன் ம.வி | 1ம் இடம் |
| | | | மன்/ புனித சவேரியார் பெண்கள் ம.ம.வி. | 2ம் இடம் |

## 2006ல் வலயக்கல்விப் பணிமனையில் நடைபெற்ற கரோல் போட்டி

ஆங்கிலக்கல்வி வளர்ச்சிக்காக மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளரால் நடாத்தப்பட்ட இக்கரோல் போட்டியை முன்னின்று நடாத்தியவர் ஆங்கிலப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி. தில்லைநாதன் ஆவார். இவருக்கு உதவியாக உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு பி. எஸ். எமில் குலாஸ் ஆகியோர் பூரண ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

J. R. S நிறுவனம், மறைக்கல்வி நிலையம், ஹற்றன் நஷனல் வங்கி, மக்கள் வங்கி, ம.து.ம.ச., பொதுநிலையினர் பணியகம் ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் பரிசில்கள் வழங்கப்பட்டன. இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தவர்கள், அருட்பணி. நேசன், அருட்சகோ. பப்ரிஸ் குரூஸ்,
அருட்சகோ. பிரவீன்,அருட்பணி. அன்புராசா
அருட்சகோ. நெவின்ஸ் அருட்பணி. டெனி மெதடிஸ்த போதகர். அன்பழகன், திருமதி. சம்பந்தர், திரு. பத்திநாதன் குரூஸ், அருட்சகோதரி. காமலிற்றா (தி.கு.), அருட்சகோதரி நிதர்சனா (கார்மல் சபை) ஆகியோராவர்

மன்னார் வலயத்தின் கிராமங்கள், பட்டி தொட்டிகள் எல்லாம் பாடல்கள் தொனிப்பது இப்போட்டியின் மாபெரும் வெற்றியைக் குறிக்கின்றது.

# இளைஞர் பொழிவு



## என் கேள்விக்கு என்ன பதில்?

### இளைஞர்களின் இதயத் தேடல்களுக்கு வின்னி யோசப் அடிகளாரின் விறுவிறுப்பான பதில்!

கேள்வி : தந்தை அவர்களே, நான் 10ம் ஆண்டு படித்துவருகின்றேன். பரீட்சை நெருங்க நெருங்க எனக்கு உண்ணவே பிடிக்கவில்லை. நான் எவ்வளவுதான் படித்தாலும் எனக்குள் ஒரு பயம் - பதற்றம் இருந்துகொண்டேயிருக்கின்றது. இதைப்போக்க வழியே தெரியவில்லை. எனக்கு ஒருசில கருத்துக்கள் கூறுங்கள். இதனால் என் போன்ற மாணவர்கள் பயனடைவார்கள் அல்லவா?

- காந்தரூபன், செட்டிகுளம்.

பதில் : அன்புள்ள ரூபன், பயம் மனித வாழ்வில் ஏற்படுவது இயற்கை. பயத்தின் காரணத்தை வெளிமனதில் நம்மால் காண இயலாது. ஆழ்மனதிலே மனிதனை ஆட்டிப்படைக்கும் நோய்தான் பயம். மனதில் தோன்றும் பயத்திற்கு எளிதாக விளக்கமளிக்க முடியாது. இப்பயத்திலிருந்து நாம் விடுபட நினைத்தாலும் அவ்வளவு சுலபமாகத் தப்பிவிட முடியாது.

பயம் பற்பல விளைவுகளை நம் உடலிலும், உள்ளத்திலும் ஏற்படுத்துகிறது. பயத்தின் காரணமாக இதயத்துடிப்பு அதிகரிக்கிறது. அஜீரணம், வாந்தி, வயிற்றுப்போக்கு, நெஞ்சுவலி, உடல்நடுக்கம், நீங்கள் கூறுவதுபோல சாப்பிடமுடியாமை போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. அதேபோல் இப்பயம் தவறான முடிவுக்கும் நம்மை இட்டுச்செல்கிறது.

15 வகையான பயங்கள் நமக்கு உண்டு என்று உளவியல் அறிஞர்கள் வகைப்படுத்திக் கூறுகின்றார்கள். திடீர் விபத்துக்களையோ, நோயையோ, இறப்பையோ கண்டு பயப்படுவது இயற்கையாகிவிட்டது. தேர்வில் அல்லது விளையாட்டில் தோல்வியடைந்து விடுவோமோ என்று நினைத்துப் பயங்கொள்கின்றோம்.

கடந்த காலத்தில் ஒரு சிலருக்குக் கிடைத்த கசப்பான அனுபவம் வாழ்வில் பெரிய வடுவை ஏற்படுத்திவிடுகிறது. சிறு வயதில் நாம் பேசும்போதோ, ஏதாவது செயற்படும்போதோ யாராவது பரிகசித்துக் கேலி செய்திருந்தால் இன்று பலர் முன்னிலையில் நாம் பேச, செயற்பட பயப்படுவோம்.

நம்மை அன்பு செய்கிறவர்கள் நிபந்தனைகளோடு அன்பு செய்தாலும் பயம் ஏற்பட வாய்ப்புண்டு. உதாரணமாக, பள்ளியில் முதல் நிலை - முதல் தரம் எடுத்தால்தான் பெற்றோர்கள் அன்பு செய்வார்கள் என்ற நிபந்தனையும், அழகிற்காகவோ, பணத்திற்காகவோ, அறிவிற்காகவோதான் பிறர் நம்மை அன்பு செய்கிறார்கள் என்ற நிபந்தனையும் நமக்குப் பயத்தை ஏற்படுத்திவிடுகிறது.

மற்றவர்கள் நம்மைக் குறைகூறி ஏற்றுக்கொள்ளாமல் விட்டுவிடுவார்களோ என்ற எண்ணம்தான் நமக்குப் பெரிய பயத்தை உருவாக்குகிறது. ஆகவே படிப்பதைக்கூட அறிவு வளர்ச்சிக்காக நாம் படிக்கிறோம் என்பதை விட்டு விட்டு, பிறரிடம் நல்ல பெயர் எடுத்து, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக படிக்க ஆரம்பிக்கிறோம்.

உலகிலேயே சிறந்த வில்வித்தைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் குறி என்றுமே தப்பியதில்லை. ஒரு நாள் அரசன் அவனைக் கூப்பிட்டு, "உனக்கு நான் ஆயிரம் தங்க நாணயங்கள் தருகிறேன் நான் சொல்லுகிற இடத்துக்கு நீ அம்பு எய்ய வேண்டும்" என்று கூறினான். வில்வித்தைக்காரன் போட்டிக்கு ஒத்துக்கொண்டான். போட்டி நெருங்க நெருங்க பயம் அவனை வாட்டி வதைத்தது. குறி தவறிவிட்டால் தங்க நாணயங்கள் நமக்குக் கிடைக்காமல் போய்விடுமே என்ற எண்ணம் பயத்தை அவனிடம் உருவாக்கியது. நடந்தது என்ன? போட்டியில் அவன் தோற்றுப்போனான். காரணம் அவன் கவனமெல்லாம் தங்க நாணயங்கள்மேல் சென்றதுதான்!

இதைப்போலதான் நாம் அறிவு வளர்ச்சிக்காகப் படிக்கிறோமா? அல்லது நல்ல மதிப்பெண் எடுத்து நான் யார் தெரியுமா என்று சாதித்துக் காட்டுவதற்காகப் படிக்கிறோமா? என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

பயத்தைப் போக்குவதற்கு முதற்படி பயம் உனக்கு இருப்பதை ஏற்றுக்கொள். "நான் ஏன் பயப்படுகிறேன்?" என்று உன்னிடமே கேட்டுப்பார். அப்போது உனக்குப் பயப்படுவதன் நோக்கம் அல்லது காரணம் புரியும். இது உன் பயத்தைப் போக்க உதவியாக இருக்கும். ஏனெனில் நாம் பல நேரங்களில் பயப்படுவது தேவையற்ற ஒன்றிற்காகவே.

பயத்தை உன்னுள்ளே அடக்கி வைத்துக்கொண்டிருந்தால் அது உனக்கு மேலும் பயத்தையே உருவாக்குமேயொழிய எவ்வித நன்மையும் கொடுக்காது. ஆகவே உன்னுடைய பயத்தைப்பற்றி பிறரிடம் மனம் திறந்து பகிர்ந்துகொள். துன்பத்தைப் பகிர்ந்துகொண்டால் அதில் பாதி குறைந்துவிடும் என்பதை நீ கேள்விப்பட்டதில்லையா?

மாணவர்களுடைய கடமை படிப்பது. அதை நன்றாகச் செய்யுங்கள். மதிப்பெண்களைப் பற்றியே நினைத்துப் பயப்படாதீர்கள். அப்போது மனதில் சமநிலையும் சாந்தமும் ஏற்படும்.



# தலைமைத்துவம்



அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.



ஒரு தனி மனிதனின் வெற்றியானது அவனது ஒருங்கிணைந்த ஆளுமை விருத்தியிலேயே தங்கியுள்ளது. தலைமைத்துவம் இரு அம்சங்களில் நோக்கப்பட வேண்டியதாகும். முதலாவது, "தனிமனிதன் தனக்குத்தானே தலைவனாக இருப்பது" இரண்டாவது, "இன்னுமொரு மனிதன் தனது தலைவனாக பொறுப்பேற்கிறான் என்பதை ஏற்றுக்கொள்வது."

எப்போதும் விழிப்பாய் இருந்து செயற்படுவது தலைமைத்துவப் பண்புகளில் முக்கியமான ஒன்றாகும். ஒரு மனிதனின் தலைமைத்துவமும், ஆளுமை வளர்ச்சியும் அவனின் சுய கணிப்பின் பின்னணியில் உருவாகின்றது. தன்னைப்பற்றி இழிவான கணிப்பினைக் கொண்டுள்ள தலைமையினது ஆளுமை வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட பற்பல வாய்ப்புக்கள் உண்டு.

எம் கடவுளாகிய ஆண்டவர் மோசேயைத் தலைமைத்துவப் பணிக்கு அழைத்தபோது மோசே உடனே மறுப்புத் தெரிவித்து, "நான் 'திக்குவாயன்' எனக்குப் பேசத் தெரியாது" என்று தன்னைத் தாழ்த்திக் கூறுகின்றார். இவ்வாறு தன்னைத் தாழ்த்தும்போது அல்லது தன்னால் எதுவும் முடியாது எனும்போது அங்கு தலைமைத்துவத்தில் தேக்கநிலை ஏற்படுகின்றது. பின்னர் மோசே ஆண்டவரின் கட்டளைக்குப் பணிந்து அப்பணியை திறம்பட ஆற்றி முடிக்கும் ஆற்றல் வாய்ந்த இறைவாக்கினராகத் திகழ்வதை நாம் காண்கின்றோம். தன்னம்பிக்கையுடன் செயற்படுகிறார், அவருக்கு வெற்றி கிட்டுகின்றது. எந்தத் தலைமைப் பதவியை வகிக்கும்போதும் 'தன்னம்பிக்கை' என்ற பண்பு மிக, மிக முக்கியமானதாகவும் அவசியமானதாகவும் இருக்கின்றது.

ஆனால் ஆண்டவர் ஆபிரகாமிற்கு அழைப்பு விடுக்கும்போது அவர் எந்தச் சலனமும் இன்றி உடனேயே தனது பணியைத் தொடங்கினார். ஆண்டவரின் அழைத்தலை உடனேயே ஏற்றுக் கொள்கிறார். இப்பண்பானது தலைமைத்துவத்திற்கு முக்கியமானது. தலைமைப் பதவியை ஒருவர் கொடுக்கும்போது அதனை மனப்பூர்வமாகவும், முழுச் சம்மதத்துடனும் ஏற்றுகொள்ள வேண்டும். அப்போதுதான் அப்பணியை சிறப்பான முறையில் ஆற்றி முடிக்க முடியும்.

குலமுதுவர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோப்பு, யோசேப்பு ஆகியோர் நல்ல தலைமைத்துவத்திற்கு உதாரணமாகத் திகழ்கின்றனர். அவர்களிடம் தலைமைத்துவத்திற்குரிய பண்புகள் அனைத்துமே காணப்பட்டன. குறிப்பாக, ஆண்டவரின் அழைப்பினைத் தாழ்மையுடனும், முழுச் சம்மதத்துடனும் ஏற்றுக்கொள்ளல், இறைவனிடம் நம்பிக்கையும், விசுவாசமும் வைத்தல், தம்முடைய கலாச்சார பண்பாடுகளை எதிர்கால சந்ததியினருக்கு உரிமையாக்கிக் கொடுத்தல், பொருளாதார பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல், பாதுகாப்பு வழங்குதல், ஆபத்து நேரிடும் வேளையில் உதவி செய்தல், சகலருக்கும் ஒரே விதமாக நீதி வழங்குதல், மன்னிப்புக் கொடுத்து அன்புடன் ஏற்றுக்கொள்ளல், ஒரே இறை வழிபாட்டில் மக்களை வழிப்படுத்துதல் போன்ற முக்கியமான தலைமைத்துவப் பண்புகள் அனைத்தும் எமது குலமுதுவர்களின் உள்ளத்திலும், உதட்டிலும் நிறைந்து வழிந்தன என்பதை மறுக்க முடியாது.

நம் கடவுளாகிய ஆண்டவர் மக்களை வழி நடத்துவதற்குரிய தலைமைத்துவப் பணியை ஆற்ற தகுதியானவர்களையே தெரிந்தெடுத்தார் என்பது அல்ல. அவருடைய அழைத்தலின் பொதுப்பண்புகளை எடுத்து நோக்கின், முதலில் "கடவுளின் காட்சி வழியாகவே" இறைவாக்கினருக்கு அழைப்பு வருகின்றது. மனிதருடைய தகுதியை வைத்து இறைவன் அவர்களை அழைப்பதில்லை, மாறாக, "இறைவன் அவர்களை அழைப்பதிலையே மனிதர் தகுதி பெறுகின்றனர்". இறைவன் தாம் விரும்பும் மனிதரை விரும்பும் இடத்தில், விரும்பும் நேரத்தில், விரும்பும் முறையில் அழைக்கின்றார். "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருக்கின்றேன்" கடவுள் மனிதரை அழைக்கும்போது அதை யாராலும் எதிர்த்து வெல்ல முடியாது.

ஏனைய இறைவாக்கினரைப் போன்று எரேமியாவும், தலைமைத்துவப் பணிக்கு அழைக்கப்படுகின்றார். இதில் சிறப்பம்சம் யாதெனில் ஏனையோருக்கு கண்ணால் காணும் நிகழ்வு மூலம் அழைப்பு விடப்படுகின்றது. ஆனால் எரேமியாவிற்கோ காதால் கேட்கும் கடவுளின் 'வார்த்தை' முக்கிய இடம் பெறுகின்றது. கடவுள் எரேமியாவிடம் "இதோ பார், என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன்" என்கிறார். எரேமியா மோசேயைப்போல் ஒரு பெரும் இறைவாக்கினராக தலைமைத்துவப் பணியை ஆற்றி வந்தவராவார். மோசேயும், எரேமியாவும் ஆண்டவரின் அழைப்பை ஏற்க பின்வாங்குகின்றனர். ஆனால் எசாயா மறுப்பு ஏதும் இன்றி அழைப்பை ஏற்றுக்கொள்கிறார்.

எனவே, நாமும் எசாயாவைப்போன்று ஆண்டவரின் அழைப்பிற்கு சம்மதிப்போம். தலைமைத்துவப் பணிக்கு மறுப்பு ஏதும் இன்றி முழு மனதுடன் நம்மை அர்ப்பணிப்போம்.

**மனிதம் மலர - மனித மாண்புகள் பேணி பாதுகாக்கப்பட தலைமைத்துவப் பணி மூலம் நல்ல சந்ததியினரை, தலைவர்களை உருவாக்குவோம்.**

# இயேசுவின் பணிக்காக இளைஞர்கள்!

*"தத்துவ ஞானம் புத்துயிர் பெற்றது யூத நிலத்தினிலே சத்திய வேதம் நின்று நிலைத்தது தரணி மீதினிலே எத்தனை உண்மைகள் வந்து பிறந்தது யேசு பிறந்ததிலே இத்தனை நாளும் மானிடம் வாழ்வது யேசுவின் வார்த்தையிலே"*

என்று இயேசு காவியத்திலே எழுதி வைத்தார் கவிஞர் கண்ணதாசன். 33 வயதினிலே படுகொலை செய்யப்பட்ட இயேசு ஒரு இளைஞன்! 30 ஆண்டுகள் வாழ்க்கைக் கல்வி பயின்று 3 ஆண்டுகளில் அதை வாழ்ந்து காட்டிய உத்தமர்! தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்கும் சந்திக்க முடியாத சவால்களுக்கும் தீர்ப்புக் கூறி வழிதெரியாத விழிகளுக்கு வழிகாட்டி வாழ்க்கைப் பாதையில் வரலாறு படைத்த மாமனிதன் இளைஞன் இயேசு!

இளைஞன் யேசுவின் பணிக்காக அழைக்கப்பட்ட இளைஞர் யார்? அவர்களின் நிலை எத்தகையது? அவர்களின் பணியின் தன்மை யாது? அவர்கள் எதை மையமாகக் கொண்டு வாழ்கின்றார்கள்?

பொருளுக்கு அடிமையாகி, ஆசைகளினால் வாழ்கையை அலைக்கழித்து வாழ்வை அர்த்தமற்றதாக வாழ்ந்து கொண்டிருக்கும் பல இளைஞர்கள் இன்று உள்ளனர்.

இயேசுக் கிறிஸ்து எவ்வாறு வாழ்ந்து காட்டினாரோ அவ்வாழ்வைக் கடைப்பிடித்து வாழ்வதே கிறிஸ்தவ இளைஞான் அழைப்பும் பணியும் ஆகும். கிறிஸ்துவையும் அவரின் பண்புகளையும், அவரின் வாழ்க்கை முறைகளையும் பின்பற்றி வாழ்பவன் கிறிஸ்தவ இளைஞன். ஆனால் இன்றைய இளைஞன் சமயம் காட்டும் வழியை மறந்து அற வழியை அழித்து, மது போதைக்கும் ஆபாசக் காட்சிக்கும் ஆட்பட்டு சினிமா மோகத்திற்கும், போதைவஸ்துக்கும், சூதாட்டத்திற்கும் தம்மை அடிமையாக்கி வாழ்கின்றனர்.

மத்தேயு 9 : 37ல் ஆண்டவர் இயேசு கூறுகின்றார், "அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு. அறுவடைக்காக அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள்" என்று. அன்று ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டியை அனுப்புவது போன்று சீடர்களை அனுப்பினார் இயேசு. இன்று ஏன் அறுவடையின் பணியாளர்கள் குறைவாகக் காணப்படுகிறார்கள்? இது சற்று சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

அன்று வாழ்ந்த இளைஞர்கள் பொதுநோக்குடன் வாழ்ந்தார்கள். அதற்கு உதாரணமாகத் திருத்தூதர் பணி 2: 41 – 47 வசனத்தில் முதல் கிறிஸ்தவ வாழ்வின் மகிமை தெரிகின்றது. ஆனால் அவ்வாழ்வுமுறை இன்று மிக அருகிப்போய் - ஏன் காணாமலே போய்விட்டது எனலாம்.

தற்கால இளைஞர்கள் பொதுநோக்கில்லாது தனி நோக்குடன் வாழ்கின்றனர். விஞ்ஞான தொழில் நுட்பம் வளர்ந்த நிலையில், மனித மாண்பையும் அன்பையும் பகிர்தலையும், சகோதரத்துவத்தையும், நீதியையும், சமாதானத்தையும் தொலைத்து வாழும் இளைஞரே இன்று அதிகம்! இந்நிலையில் இளைஞர்கள் மத்தியில் இருந்து எவ்வாறு அறுவடையின் புணியாளர்கள் பெருக முடியும்? யேசுவின் பணிக்காக இளைஞர்களைத் திருச்சபைத் தாய் அழைத்துக் - கொண்டிருக்கின்றாள். யேசு கூறுகின்றார், "உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்" என்று. யேசுவின் பணிக்காக விரைந்திட வேண்டும். உள்ளத்தில் இருளை அழித்து ஒளி ஏற்ற வேண்டும்.

"இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்", "இன்றைய இளைஞர்கள் நாட்டின் தூண்கள்" என்றெல்லாம் இளைஞர்களை முன்னிலைப்படுத்தும்போது ஏன் இன்றைய இளைஞர்களாகிய நாம் துக்கமாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்?



எமக்கு ஏற்படும் சிலுவைகள் துன்பங்களைக் கசையடிகளாகக் கண்டு வாழ்க்கைப் பாதையில் துவண்டுவிடாது யேசுபிரான் போன்று முகம் கொடுப்போம். இளைஞர்களாகிய நமக்கு ஏற்படும் சவால்களை ஏற்றுக்கொண்டு சிலுவையே மீட்பு, சிலுவையே வெற்றியின் தூண் என உணர்வோம்.

இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி யேசுவின் பணிக்காக அர்ப்பணித்து வாழ ஒவ்வொரு கிறிஸ்தவ இளைஞர்களையும் திருச்சபைத் தாயானவள் இன்முகத்தோடு அழைத்து நிற்கின்றாள். யேசுவின் பணிக்காக விரைந்திட்ட - விரைகின்ற அனைவருக்கும் ஜெயம் கூறி, இளைஞனே விழித்தெழு! யேசுவின் பணிக்காக விரைந்திடு! என வாழ்த்தி வழி அனுப்புவோம்.

**வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை இலகுதமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!**

*தருவது வலண்டின் ஜோசப்.*



# வாழ்வும் வழிபாடும்

தொடர் – 1

## வழிபாடு எதற்காக!

கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து பிரிந்து ‘அசெம்பிளி ஒவ் கோட்’ என்ற அமைப்புக்குச் சென்ற எனது நண்பர் ஒருவரைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன். “உங்கள் ஆலய வழிபாடுகளில் வல்லமை இருப்பதாகத் தெரியவில்லை” என்ற பெரிய குற்றச்சாட்டை முன்வைத்தார்.

“‘வல்லமை’ என்பதற்கு என்ன அர்த்தம்?” என்று நான் திருப்பிக் கேட்டேன். “மனம் திறந்து செபிக்க எங்களுக்கு வாய்ப்பில்லை. எங்கள் கவலைகளையெல்லாம் கொட்டித்தீர்க்க வழியில்லை. தூய ஆவியின் வல்லமையோடு பங்கேற்க எங்களால் முடியவில்லை ....” என்று அடுக்கிக்கொண்டே சென்றார்.

நமது வழிபாடுகளில் வல்லமை இல்லையா? என்பதைப் பற்றி விவாதிப்பதைவிட நமது வழிபாடுகளை எப்படி இன்னும் வல்லமையுள்ளதாக மாற்ற முடியும்? என்று கேட்பதே பொருத்தமான கேள்வி. வழிபாட்டில் பங்கேற்பவர்கள் இறை அனுபவம் பெற்றுச்செல்ல என்ன வழிமுறைகளைக் கையாள வேண்டும்?

இந்தக் கேள்வி ஏதோ இன்று நாம் கேட்கின்ற கேள்வி மட்டுமல்ல, இரண்டாம் வத்திக்கான் சங்கமும் இதே கேள்வியைக் கேட்டது. ஆனால், கிடைத்த பதில்கள் நடைமுறைச் செயல்களாகவில்லை என்பதே வருத்தம் தருகின்ற நிலை.

### வழிபாடு என்பது ....!

தமிழ் மொழியில் நமக்குக் கிடைத்த ‘வழிபாடு’ என்ற சொல் மிகப்பெரிய ‘கொடை’ என்றே நான் கருதுகிறேன். வேறு எந்த மொழியிலும் இவ்வளவு ஆழமான பொருள்படும் வார்த்தையில்லை.

வழிபாடு என்பது ஒருவரின் வழிப்பாதையில் செல்லுதல் அல்லது ஒருவரின் வழியை நம் வழியாக மாற்றிக்கொள்ளுதல் என்று பொருள்படும். கடற்கரை மணலில் தந்தையின் பாதத்தடத்தைப் பார்த்து அதன்மேல் கால்வைத்துச் செல்லும் குழந்தை உணர்வையும், காடுகளில் வழிப்பாதை அமைத்து நடந்து செல்லும் மக்களின் மனநிலையையும் இங்கு நோக்க வேண்டும்.

கிறிஸ்தவ வழிபாடு என்பதற்கு இறைமகன் இயேசுவின் வழியில் செல்லுதல் என்ற பொதுப்பொருளைக் குறித்தாலும் ‘இயேசுவின் மனநிலையில் இறைத்தந்தைக்குச் செலுத்தும் உணர்வுகளின் காணிக்கை அல்லது புகழ்ச்சிப் பண்’ என்று நடைமுறை விளக்கம் தரலாம்.

லித்தூர்ஜியா (Liturgia) என்ற கிரேக்க மூலச் சொல் ‘மக்களின் பொதுவான செயற்பாடு’ என்ற பொருளில் வருகிறது. ‘மக்கள் இணைந்து நிகழ்த்தும் உன்னதமான செபம்’ என்று இதன் பொருளை விரித்துக் கூறலாம். “வோர்ஷிப்” (worship) என்ற ஆங்கில வார்த்தைகூட மரியாதைக்குரிய செயல்’ என்ற பொருளையே குறிக்கிறது.

ஜெர்மானியர்கள் ஹாட்டஸ்ட்தீன் (Gottestidienst) என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றனர். ‘இறைபணி’ என்ற இனிய பொருளை இந்த வார்த்தை தருகின்றது.

மக்கள் தங்கள் வாழ்வில் எவை உயர்ந்தவை, உன்னதமானவை என்று கருதுகிறார்களோ, அந்த மெய்மைகளைக் கொண்டாடி மகிழ்கின்றனர். எல்லா மேன்மைகளுக்கும் சிகரமான இறையுறவைக் கொண்டாடி மகிழும் நேரங்களே வழிபாட்டு நேரங்கள். கொண்டாடுதல் என்பது கூத்தாடுதல் அல்ல. தனக்குக் கிடைத்த வெற்றியைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளுதல் கொண்டாட்டம். தனக்குக் கிடைத்த அனுபவத்தைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளுதல் கொண்டாட்டம். ஏன் தனக்கு ஏற்படும் சோகத்தையும் மிகவும் நெருங்கியவர்களோடு பகிர்ந்துகொள்ளும் நேரத்தைக்கூட கொண்டாட்டம் எனலாம்.

மனித வாழ்வில் இறைபராமரிப்பும் வழிகாட்டுதலும் ஏதாவது ஒரு வகையில் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இந்த உன்னதமான உறவின் அனுபவத்தை மக்கள் சமுதாயத்தோடு இணைந்து கொண்டாடுகின்ற நிகழ்ச்சி வழிபாடு.

வாழ்க்கையைக் கொண்டாடுகின்ற நேரத்தில்தான் வழிபாடு வல்லமை உடையதாக மாறுகிறது. தேர்வில் கிடைத்த வெற்றியை, தேடிக்கிடைத்த வாழ்க்கையைத் தெய்வத்தின் அருளாக, பரிசாக, எண்ணி எண்ணி மகிழ்கின்ற எழிலான நேரங்கள் வழிபாட்டு நேரங்கள்.

### வழிபாட்டில் வல்லமை

தான் உண்ட நீர்தனைப் பன்மடங்கு பெருக்கிப் பார் மகிழத் தருவதற்காக சூல்கொண்டு உலவுகின்ற மேகத்தைக் *கார் மேகக்கோலம்* என்று வர்ணிப்பார் அறிஞர் அண்ணா. தான் கண்ட இறையாற்றலைப் பன்மடங்கு பெருக்க, பார் மகிழப் பகிர்ந்து கொள்ள, பாங்குடனே பதில்கூற உருவான அடையாளச் செயல்தான் வழிபாடு.

தன்னுடைய வாழ்க்கையோடு தொடர்பு இல்லாத ஒன்றில் மனிதன் எவ்வாறு பங்கேற்க முடியும்? தன்னைப் பாதிக்காத ஒன்றை எவ்வாறு ஒருவன் அனுபவமாகப் பறைசாற்ற முடியும்? வாழ்வைக் கொண்டாடும்போது வழிபாட்டில் வலிமை பிறக்கிறது. ‘சக்தி பிறக்குது மூச்சினிலே’ என்று பாரதி பாடினான். வாழ்க்கையை வழிபாடாக மாற்றும் நேரத்தில்தான் மனிதனுக்குப் புதிய சக்தி பிறக்கிறது. புதிய வழிகள் தோன்றுகின்றன. புதிய பாதை தெரிகிறது.

### எவ்வாறு சாத்தியமாகும்?

இவையெல்லாம் கேட்பதற்கும் வாசிப்பதற்கும் நன்றாகத்தான் இருக்கின்றது. நடைமுறையில் சாத்தியமாகுமா? சரியான கேள்விதான். இதற்கான முயற்சிகள் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப்பின் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. சில அருட்பணியாளர்கள் சிறப்பாக வழிபாட்டை வாழ்க்கையோடு தொடர்புபடுத்துகிறார்கள். ஞாயிறு திருப்பலிகள் எல்லாம் மக்கள் கொண்டாட்டங்கள் என்ற முறையில்தான் வடிவமைக்கப்படுகின்றன. வருகைப் பவனியில் அந்த வழிபாட்டில் முக்கிய பணிகள் செய்பவர்கள் மட்டும் இடம்பெறுவதில்லை. அந்த வாரத்தில் பிறந்த நாள் கொண்டாடியவர்கள், சாதனை படைத்தவர்கள், புதிதாக மனம் மாறியவர்கள் போன்றோர் இடம்பெறுகின்றனர். ஏதோ பெருமைக்காக அவர்கள் பவனி வருவதில்லை. தங்கள் வாழ்வில் இறைவன் செய்த அரும்பெரும் செயல்களை அறிவிப்பவர்களாகப் பங்கேற்கின்றனர்.

தொடக்க வழிபாட்டில் குரு மக்களைப் படைப்பாற்றலோடு வாழ்த்தி வரவேற்கின்றார். அந்த வாரத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டுகிறார். வாழ்த்தும், வரவேற்பும் வந்திருக்கும் கிறிஸ்தவ சமுதாயம் முழுவதையும் அறிமுகப்படுத்தும் பகுதியாகவும், பங்கேற்க அழைக்கும் பகுதியாகவும் அமைகிறது. இறைவார்த்தைக்கு விளக்கம் தரும் பணிகூட, மக்களோடு சேர்ந்தே திட்டமிடப்படுகிறது. மறையுரைக் குழு என்று ஒன்றே பங்குகளில் செயல்படுகின்றது. இறைவார்த்தையை வாழ்வோடு தொடர்புபடுத்த வாழ்க்கையில் வெளிப்படும் இறைவனின் செயல்ப்பாட்டைக் கண்டுணர்ந்து மறையுரையாக வடிவமைக்க அந்தக்குழு உதவி செய்கிறது.

விசுவாசிகள் மன்றாட்டுகள் வாழ்க்கையின் தேவைகளை, அந்தத் தேவைகளின்போது வெளியாகும் இறை பராமரிப்பை அடிப்படையாகக்கொண்டு அமைகிறது. காணிக்கைப் பவனிகூட துன்புறும் நபருக்கும் தேவையில் இருப்போருக்கும் உதவி செய்யும் காணிக்கையாக அமைகிறது.

இவ்வாறு வாழ்க்கையோடு வழிபாட்டைத் தொடர்புபடுத்துவதை மட்டுமல்ல, வாழ்க்கையையே எவ்வாறு வழிபாடாகக் கொண்டாடுவது என்பதையும் கவனத்தில்கொண்டு பங்குப்பணியாளர்கள் மட்டுமல்ல வழிபாட்டுக் குழுவும், மக்களும் செயல்படுகின்றனர். இத்தகைய கொண்டாட்டங்களில் வல்லமை எப்படி உருவாகிறது என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

பெந்தகோஸ்து சபைகளோ, அல்லது பிற சிறு சபைகளோ சொல்வதுபோன்று வல்லமை என்பது கத்திப் பேசுவதாலோ, கூச்சலிடுவதாலோ வருவதில்லை. அப்படிப்பட்ட வல்லமைகள் வழிபாட்டோடு முடிந்துவிடும். விரக்தியும், வேதனையுமே வாழ்வில் மிஞ்சும்.

### மறைபொருள் கொண்டாட்டம்

நமது வழிபாட்டில் வல்லமை என்பது இயேசு கிறிஸ்துவின் இறப்பு – உயிர்ப்பு என்ற மறைபொருளைக் கொண்டாடுவதில் அடங்கியிருக்கின்றது. என்றோ நிகழ்ந்துவிட்ட இயேசுவின் இறப்பையும், உயிர்ப்பையும் மட்டும் கொண்டாடுவதல்ல வழிபாடு. இன்று நமது வாழ்வில் நிகழும் இயேசுவின் மறைபொருளைக் கொண்டாடுவதே வழிபாடு.

மறைபொருள் என்றாலே இன்று நமது வாழ்வில் மறைந்து கிடக்கும் பேருண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டுவருதல் என்பதுதான் பொருள். நமது வாழ்க்கையில் நமது உயிரை உரசும் ஆழ்ந்த அனுபவங்கள் அத்தனையும் இயேசுவின் மறைபொருட்கள்.

நம்மை அடிமைப்படுத்தும் பாவத்தளைகளிலிருந்து நாம் வெளியேற முயன்ற நேரங்களில் நமக்கு ஏற்பட்ட துயரங்கள், நம்மை ஆதிக்கம் செய்யும் சமுதாய அமைப்புகளின் ஆணவப்பிடியிலிருந்து நம்மை விடுவிக்க நாம் செய்த தியாகங்கள், நம் வாழ்வுக்கு அர்த்தம் தருகின்ற பிறர் அன்புப் பணியில் நம்மை இணைத்துக்கொண்டபோது நமக்கு நேர்ந்த துன்பங்கள் போன்றவை இயேசுவின் இறப்பு மறைபொருட்கள்.

இவற்றில் எல்லாம் நம்மைத் தாங்கிய இறைவனின் கரம், நமக்கு இறைவன் தந்த மனவலிமை, நம் வாழ்வில் கண்ட இறை அதிசயங்கள், நம்பிக்கையின்மைகளிலும் தெரிந்த ஏதோ ஒரு நம்பிக்கைத்துளி போன்றவை இயேசுவின் உயிர்ப்புகள். இத்தகைய வாழ்வின் அதிசயங்களை, இறை உறவைக்கண்டு, உணர்ந்து, வெளிப்படுத்திக் கொண்டாடும் தருணங்கள்தான் வழிபாட்டு நேரங்கள்.

இத்தகைய நேரங்களில் எல்லையில்லா இறையாற்றலின் வல்லமை நம் இதயங்களை ஆட்கொள்கிறது. இறை ஆவியால் நாம் அழைக்கப்படுகிறோம். ஆவியின் சக்தியால் இதயத்திலிருந்து ‘இயேசு ஆண்டவர்’ என்ற உண்மை வெளிப்படுத்தப்படுகிறது.

### ஒவ்வொரு அசைவிலும் இராகம் உண்டு

வழிபாட்டில் நம்முடைய ஒவ்வொரு அசைவிலும் இத்தகைய அனுபவம் வெளிப்படுகின்ற நேரத்தில் வழிபாடு வல்லமையுடையதாக மாறுகிறது. இந்த அனுபவம் ஏதோ அசாதாரணமானதோ, ஆரவாரத்திற்குரியதோ அல்ல. மாறாக, இதமானது, இனிமையானது. இதயத்தின் எழிலார்ந்த வெளிப்பாடாக வருகிறது. இத்தகைய அனுபவம் உள்ளவர்களே வழிபாட்டில் அதிக ஈடுபாட்டோடு பங்கேற்கின்றனர். வழிபாட்டின் ஒவ்வொரு செயலிலும் வாழ்க்கையை இணைத்துப் பார்க்கின்றனர்.

இறைவார்த்தையைக் கொண்டாடுகின்ற நேரத்தில் தங்கள் வாழ்க்கையில் வெளிப்படும் இறையாற்றலைக் கொண்டாடுகின்றனர். இணைந்து பாடுகின்ற நேரங்களிலும் பதிலுரை சொல்லும் நேரங்களிலும் தங்களின் உயிர் மூச்சிலிருந்து உணர்ந்து செயல்படுகின்றனர். இறைமாட்சியை வெளிப்படுத்தும் அத்தனை அடையாளங்களையும், ஈடுபாட்டோடு பயன்படுத்தி தங்கள் அனுபவங்களை ஆழப்படுத்திக் கொள்கின்றனர்.

ஒவ்வொரு வழிபாடும் வாழ்க்கைக் கொண்டாட்டமாக மலரும் நேரங்களில் சடங்குத்தனங்களும் சட்ட மனப்பான்மைகளும், தனிநபர் ஆதிக்கமும், வழிபாட்டை வியாபாரமாக்கும் போக்குகளும் மறைகின்றன.

‘இத்தகைய வழிபாடுகள் கத்தோலிக்கத் திருச்சபையின் இயக்கங்கள், வாழ்வின் ஊற்றாகவும், உச்சகட்டமான நிகழ்வாகவும் வழிபாடு அமைகிறது’ என்ற இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கூற்று இங்குதான் உண்மையாகிறது.

நமது வழிபாட்டிலும் வல்லமை உண்டு. அந்த வல்லமை வாழ்க்கையை வழிபாடு ஆக்கும் நேரத்தில் வருகிறது. வாழ்க்கையில் வெளிப்படும் இயேசுவின் உயிர்ப்புச் சக்தியைச் சொந்தமாக்கிக் கொள்வதில் வருகிறது. வாழ்க்கையில் பிறக்கும் வழிபாடும், வழிபாட்டில் பிறக்கும் புதிய வாழ்க்கையும் கடவுள் நிகழ்த்துகின்ற கால காவியங்கள். இணைந்து கொள்வதுதானே நல்லவர்களின் இயல்பு. (*வாழ்வும் வழிபாடும் தொடரும்*)

## நேர்காணல்....10ம் பக்கத் தொடர்ச்சி

**கேள்வி: நீங்கள் சிறந்த சமூகப் பணியாளராகத் திகழ்ந்துள்ளீர்கள். இப்படியானவர்களுக்குப் பல சவால்கள் இருக்குமே?**

பதில்: சாதாரணமாகக் குருக்கள் செய்யாத சில பணிகளை நான் செய்யத் தொடங்கினேன். அதாவது பின்தங்கிய பகுதிகளிலுள்ள மக்களுக்கான உதவிகள், ஊக்குவிப்புக்கள், தொழில் வாய்ப்புக்கள், சமூகப்பணிகள் போன்ற இன்னோரன்ன படிநிலைகளில் நான் அவர்களுக்குப் பணிபுரிந்து, என்னையும் அவர்களுள் ஒருவனாக இணைத்துக்கொண்டமையால் எதிர்ப்புக்கள், விளக்கயீனங்கள், சவால்களை நான் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. அவ்வேளைகளிலெல்லாம் ஆயர், குருக்கள் என்னை ஊக்குவித்து, தட்டிக்கொடுத்துப் பக்கபலமாய் இருந்தமையால் நான் எவ்வேளையிலும் மனம் சலிக்காமல் பணியில் ஈடுபட முடிந்தது.

நான் எனது பணித்தளங்களில் பல ஆபத்துக்களைச் சந்தித்திருக்கிறேன்.

நான் பேசாலைப் பங்குத்தந்தையாய் இருந்தபோது பிரச்சனை காரணமாக மன்னார்த் தீவிலுள்ள மக்களில் பலர் இந்தியாவுக்குச் சிதறியோட, எஞ்சியிருந்தவர்கள் பேசாலைக்கு வந்து ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர். ஒருநாள் படையினர் வெடிகளைத் தீர்த்தவண்ணம் ஆலயத்தை நோக்கி வந்துகொண்டிருந்தனர். மக்கள் உரத்த குரலெழுப்பிச் செபமாலை செபித்துக்கொண்டிருக்க, நான், இரு கைகளையும் உயர்த்திய வண்ணம், தனியனாக, அவர்களை நோக்கிச் சென்றேன். வெடிகள் எனது தலைக்கு மேலாகத் தீர்க்கப்பட்டுக்கொண்டிருந்தன. உடனே கப்டன் கைகளைக் கீழே விடும்படிகூறி என்னுடன் உரையாடினார். அனைத்தையும் கேட்ட பின்னர் தனது படையினரையும் அழைத்துக்கொண்டு திரும்பிச் சென்றுவிட்டார்.

அவ்வாறே கடலிலே பயணம்செய்தபோது ஒரு தடவை கடலிலே மூழ்கித் தத்தளித்த வேளையில் இறை இரக்கத்தால் உடன் பயணிகளால் காப்பாற்றப்பட்டேன். இவ்வாறு எனது பணித்தளங்களில் நாள் சந்தித்த உயிராபத்துக்கள் இன்னும் எத்தனை எத்தனையோ.....

*கேள்வி:* இறுதியாக ஒரு வினா. அதாவது மறைமாவட்ட மூத்த குரு என்ற வகையிலும், முதல் மறைமாவட்டக் குரு என்ற வகையிலும் மறைமாவட்டக் குருக்கள், துறவிகள், மக்களுக்கு நீங்கள் கூறும் செய்தி - அறிவுரை யாது?

பதில்: நாங்கள் இன்றைய தேவைகளை மனதில்கொண்டு, இறையரசின் விழுமியங்களை மையமாக வைத்துப் பணிபுரிவதுதான் எமது கடமை. நான்கூட 2ம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்னர்தான் வத்திக்கான் சங்க ஏட்டிலுள்ள “இன்றைய உலகில் திருச்சபை” என்ற மடலில் குறிப்பிட்டுள்ளவற்றை மையமாகக்கொண்டு ஏழைகள், கஷ்ரப்பட்டவர்கள், உரிமையிழந்தவர்களுக்குப் பணிபுரிய வேண்டுமென்று ஆசை ஏற்பட்டது.

இன்று எமது நாட்டில் நடந்துகொண்டிருக்கும் போரின் விளைவாக மக்கள் உரிமையிழந்து, உயிரிழந்து, உடைமைகளையிழந்து, நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே திருச்சபையின் மக்களாகிய குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் யாவரும் இந்த மக்கள் மட்டில் கூடிய கரிசனை கொண்டவர்களாகச் செயற்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. இதைத்தான் நான் என்னுடைய வாழ்வில் செயற்படுத்தினேன்.

நாம் ஏதோ பாரம்பரியமாகச் சில பணிகளைச் செய்துகொண்டு வருகிறோம்: அதனைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்ற மனநிலையோடு இராமல் நாம் வெளியே வந்து, இன்றைய தேவைகளை அறிந்து, அதற்கேற்ற விதமாக பணிபுரிந்தால்தான் எங்களுடைய திருச்சபையானது ஒரு அர்த்தமுள்ள திருச்சபையாகவும், சாட்சியம் கொடுக்கும் திருச்சபையாகவும் அமையும். அன்றேல் நாம் மக்களை இழப்பதோடு, அந்த மக்களே எம்மைத் தள்ளிவிடக்கூடிய நிலையும் ஏற்படும்.

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறுவிறுப்புத் தொடர் 36

## இயேசுவுக்கு விமானத்தில் முதலாம் வகுப்பு

சொல்லின் செல்வர் அமுது

அன்புப் பணியாளர் சபையின் துணைத் தொண்டர்கள் ஒன்று கூடியிருந்த ஞானவிழாவின் முடிவில் ஆச்சிரமத்தின் தலைவர் அன்னை திரேசாவுக்கு அறையுண்ட இயேசுவைத் தாங்கும் நாலடி உயரமான சிலுவை ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்தார். விமானப் பயணத்தில் அஃது அன்னை திரேசாவுக்கு பக்கத்தில் இடம்பெற்றது.

தூய வெள்ளைத் துணியால் சுற்றப்பெற்று மிகவும் பக்குவமாகச் சிலுவை தலைகாட்டியது. விமானப் பணியாளர் ஒருவர், அன்னையிடம் வந்து, முதலாம் வகுப்பில் இடங்கள் வெறுமையாய் இருக்கிறபடியால் அவ்விடத்தில் சிலுவையையும் கொண்டுபோய் உட்காருமாறு பணிவுடனும் அன்புடனும் வேண்டினார். விமானப் பணியாளரின் கருத்தை ஏற்றுக்கொண்டார் அன்னை. சிலுவையைத் தூக்கிக்கொண்டு முதலாம் வகுப்புக்குச் சென்றார். அங்கே சிலுவையை நிறுத்தி, அதனை நீண்ட இறப்பர் பட்டியால் கட்டிவைத்து விட்டுத் தனது பழைய இடத்துக்கே மீண்டும் வந்தார்.

"இது முறையான செயல். நாங்கள் இயேசுவை முதலாம் இடத்தில் வைக்க வேண்டும்" என்று அவர் கூறியபோது அவருடைய உடலின் ஒவ்வொரு அணுவும் ஆனந்தத்தால் கைதட்டின.

கோடைகால விடுமுறையில் அன்புப் பணிபுரியும் சகோதரர்களுக்குத் துணைபுரிய நல்லெண்ணமுள்ள பலர் பிற நாடுகளிலிருந்து - குறிப்பாக அமெரிக்காவிலிருந்து வருவது வழக்கம். அமெரிக்காவிலிருந்து மாணவர்கள் பலர் இவ்வாறு பணிபுரிய விரும்பி இந்தியாவுக்கு வந்தனர். அவர்களைச் சகோதரர்கள் வாருங்கள்! வந்து பாருங்கள்! என்று வரவேற்றனர்.

மாணவர்கள் துறவறச் சகோதரர்களுடன் இணைந்து பணிபுரிந்தனர். பலருக்கு அது வாழ்விலே ஒரு பொற்காலம். இலை மூடும் மலர்போல அவர்கள் உறவாடிய காலம். காலையில் கடலில் சூரியன் முகம் கழுவுமுன் 4. 30 மணிக்கு எழுந்து, தங்கள் படுத்த பாயைச் சுருட்டி வைத்து, ஒரு வாளித் தண்ணீரில் குளித்து, செபமும் தெய்வ ஆராதனைகளும் முடிவுற்றதும் காலை உணவு (சப்பாத்தியுடன் தேனீர்) அருந்திச் சகோதரர்களுடன் பணியின் முற்றத்திற்குச் சென்றனர். பேரிடர் பயக்கும் பணிகளிலும் அவர்கள் தயக்கம் காட்டியதில்லை.

சாவோர் இல்லத்தில் பணிசெய்த வரலாற்றை ஒருவர் கூறுவதைக் கேளுங்கள். "நான் தசை அழுகும் வருத்தத்துடன் வந்த ஒருவரைக் கவனித்தேன். அவருடைய கால் அழுக்கான சாக்கினால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. அவரை வெளியிலே கொண்டு சென்றேன். ஏனெனில் சாக்கை நீக்கியபோது காலின் துர்நாற்றம் தாங்கமுடியவில்லை. அதைக் கழுவியபோது இரத்தத்தில் தண்ணீர் கலந்து வந்தது. அவருடைய காலின் தசை பச்சை நிறமாகியிருந்தது. சதைப்பற்றும் எலும்புகளும் கீழே உதிர்ந்தன. முழங்காலுக்குக் கீழே வலிய எலும்பு மாத்திரம் தொங்கியது. அவ்வேளை மேலே மரத்திலிருந்து வந்த காகம் ஒரு தசைத்துண்டினைக் கொத்திக்கொண்டு போயிற்று. நோயாளி பசியால் வாடினார். என் கண்ணிலே நீரோடை. நெஞ்சிலே பூகம்பம் ...." என்று கூறியவர், சகோதரத் துறவிகள் ஏழைகளின் உணவையே அருந்தி வருகிறார்கள் என்றும் மாலை 6. மணிவரையும் பணிபுரிகின்றார்கள் என்றும் கூறுகிறார். தொடர்ந்து எழுதும்போது — "செபத்துக்காகத் துறவிகள் ஒன்றுகூடுகிறார்கள். விவிலியம் வாசிக்க இரவில் உணவை அருந்துகிறார்கள். அதையடுத்து ஒரு மணி நேரம் சல்லாபம். பகிடியும் சிரிப்பும் அங்கே சுவர்களில் சென்று தெறிக்கும். அந்த ஒருமணி நேரத்தில் எல்லாத் துன்பங்களையும் மறந்து போவார்கள்" என்று குறிப்பிட்டார்.



(கங்கை தொடர்ந்து பாயும்)

### அன்புப் பணியாளர்கள் செய்துவரும் சேவைகள்

**உடல் நலம் பேணல், ஆன்மநலம் பேணல்:**

வைத்தியசாலையில் நோயாளரைத் தரிசித்தல், மருத்துவ மனைகளுக்குச் சென்று ஆறுதல் கூறுதல், மறியற்கூடங்களைத் தரிசித்தல், திருவிவிலியம் படிப்பகம் நடத்துதல், ஞாயிறு பாடசாலை நடத்துதல், தொழுநோயாளர் வைத்தியநிலையைப் பொறுப்பு, தொழுநோயாளர் மருத்துவமனைகளை நடாத்துதல், புதுவாழ்வு நிலையங்களைக் கண்காணித்தல், கைவிடப்பட்ட குழந்தைகள் பராமரிப்பு, மரண வேதனைப்படுவோரைப் பாதுகாத்தல், காசநோயாளர் பிரிவுகளைக் கவனித்தல், ஆரோக்கிய நிலையங்களை நடாத்துதல், உலாவும் மருத்துவ நிலையங்களில் ஊழியம் புரிதல், எயிட்ஸ் நோயாளர் விடுதிகளில் சேவை செய்தல்.

**கல்விப்பணி:** சேரிகளில் ஆரம்பப் பாடசாலைகளை நடாத்துதல், தையல் சித்திரவேலை, கைப்பணி வகுப்புக்கள் நடாத்துதல், வணிகத்துறை கல்வியளித்தல், தட்டச்சு மொழிபெயர்ப்பு, வர்த்தகக் கணிதம், வளர்ந்தோர் கல்வி.

**சமூகப்பணி:** குழந்தைகள் நலம் பேணல், குழந்தை வளர்ப்புப் பண்ணை - இல்லம் அற்றோருக்கு இருப்பிட வசதிகள் - போதைக்கு அடிமையானோர் மற்றும் குடிகாரரைக் காப்பாற்றும் இல்லம், விவாகம் செய்யாத தாய்மார் பேணல் - இரவு தங்கும் வசதிகள் அளிப்பு - இயற்கையான குடும்பக் கட்டுப்பாட்டு நிலையத்தில் சேவை.

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் பகுதி இல.44

வினாக்கள் நவம்பர் மாத மன்னாவில் இருந்து தொகுக்கப்படுகின்றன. இப்போது வினாக்களுக்கு வருவோம்.

1. தற்போது திருச்சபையிலுள்ள கர்தினால்களின் தொகை என்ன?

2. முத்திப்பேறுபெற்ற நிலையிலிருந்த பிலிப் சமால்டன் இத்தாலி மறைமாவட்டக் குருவானவர். இவர் சென்ற ஆண்டு (2006) ஒக்டோபர் மாதம் 15ம் நாள் புனித இராயப்பர் பேராலயத்தில் நடைபெற்ற திருச்சடங்கின்போது புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். இவர் எந்தச் சபையைச் சார்ந்த குரவர்?

3. "பிற மதங்களுடனான உரையாடலில் ஒருபோதும் நமது கத்தோலிக்க அடையாளங்களை மறந்துவிடக்கூடாது" இது யாருடைய கூற்று?

4. "நாயக்கரா" நீர்வீழ்ச்சி ஆற்றின் குறுக்கே கயிறு கட்டி அதில் நடந்து காட்டியவர் யார்?

5. ஆசிய கத்தோலிக்க ஆயர் பேரவையின் 8வது மகாநாடு எந்த ஆண்டு எந்த மாதத்தில் நடைபெற்றது?

6. "உங்களின் சிந்தனை எப்போதும் உயர்வாகவே இருக்கட்டும். இந்த உலகையே வென்று ஆழப்பிறந்தவர்கள் நாம் என்பதை நினைவில் நிறுத்தி துணிந்து செயற்படுங்கள்" இது யாருடைய கூற்று?

7. செபமாலைத் தாசர் துறவறசபை ஒரு செபிக்கும் சபை. யாழ் மறைமாவட்டத்தில் ஆரம்பித்து இன்று இலங்கையிலும் இந்திய மறைமாவட்டங்களிலும் வேரூன்றி நிற்கின்றது. இதன் ஸ்தாபகர் யார்?

8. சென்ற வருடம் (2006) மார்கழி மாத ஆரம்பத்தில் மன்னார் மறை மாவட்டத்தின் அருட்பணித்திட்டமிடல் மகாநாடு நடைபெற்றது. அதன் தொனிப் பொருளாகத் தேர்ந்து கொள்ளப்பட்ட எண்ணக்கரு என்ன?

9. தேசிய அளவிலான கத்தோலிக்க தொழில்துறைப் பணியாளருக்கான கருத்தமர்வு எங்கே? எப்போது நடைபெற்றது?

10. நான்காவது ஆசிய இளைஞர் மகாநாடு 2006ம் ஆண்டு ஜூலை 28ந் திகதி முதல் ஆகஸ்ட் 5ம் திகதிவரை கொங்கொங் நாட்டில் YMCA YOUTH CITY என்ற இடத்தில் நடைபெற்றது. இதில் மன்னார் மறை மாவட்டத்திலிருந்தும் ஒருவருக்குப் பங்குகொள்ள வாய்ப்புக் கிடைத்தது. அவர் யார்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 42இற்கான கேள்விகளுக்கு 36 பேர் விடை அளித்திருந்தனர்.

**பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட**

**அதிஸ்ரசாலி:**

**ஆர். யேசுராஜா,சின்னக்கரிசல், பேசாலை.**

பாராட்டுக்குரியவர்களாக

தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. திருமதி. யசிந்தா கமில் ஜோண், எழுத்தூர், மன்னார்.
2. செ. இன்பென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
3. சு. ஸ்ரீபன்ராஜ் (விதுசன்), முத்தரிப்புத்துறை.
4. ரி. ஜெலிந்திரா, கன்னாட்டி, அடம்பன்.
5. செ. வளன் நியூமன் துரம், மடுத்தீனார் குருமடம், யாழ்ப்பாணம்.
6. அஜித்ரா பிரான்சிஸ், 5ம் குறுக்குத் தெரு, சின்னக்கடை, மன்னார்.
7. தி. கிருசாந்தினி, தரம் - 8, இலுப்பைக்குளம், நேரியகுளம்.
8. க. போல் சேவியர், டென்மார்க்.
9. ஜெ. ரொணி திலிப் குமார், எமில்நகர், மன்னார்.
10. அ. ஜஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்.

# ஆசிய மறைத்தூதுப் பணி மாநாட்டு அனுபவங்கள் ......

11ம் பக்கத் தொடர்ச்சி

பலவிதவிதமான சிற்றுண்டி வகைகள் பல இடங்களில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது முக்கியமானது அல்ல. நாம் விரும்பியவரோடு நம்மை அறிமுகம் செய்துகொண்டு நமக்கு விருப்பமான விடயங்களைக் கலந்துரையாடி புதிய உறவுகளை ஏற்படுத்தி ஆசியத் திருச்சபையில் புதியதொரு பரிமாணத்தைக் கட்டி எழுப்புதலே இதன் முக்கிய நோக்கமாகும். ஆயர், குருக்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினர் என்ற பேதம் இன்றி நாட்டின் எல்லைகள், மொழி, பண்பாட்டு மாறுபாடுகளை மறந்து, யேசுவின் பிள்ளைகளாக மலர்ந்த முகத்தோடு உறவு வளர்ந்ததைக் காண முடிந்தது. இவ்வேளையில் ஒரு சிறிய இசைக்குழுவினர் தாய்லாந்துக்கே தனித்துவமான இசைக் கருவிகளை மீட்டு இசை எழுப்பிக்கொண்டிருந்தனர்.

### 22ம் திகதி ஞாயிறு வாரம்

மறைபரப்பு ஞாயிறு அகில உலக திருச்சபையாலும் கொண்டாடப்படும் நாள். முதலாவது ஆசிய மறைத்தூதுப் பணியின் மாநாடு மறைபரப்புத் தினத்தன்று நிறைவு பெறுவதும் ஒரு வரலாற்றுப் பதிவேயாகும். காலை 8.15 மணிக்கு மாநாட்டு இசைவாக்கத்தோடு நிகழ்வுகள் ஆரம்பமாகின. ஒரு விசுவாசப் பகிர்வைத் தொடர்ந்து மாநாட்டின் தொகுப்புரை வழங்கப்பட்டது. இன்று மாநாட்டின் இறுதிநாள்! பகல் உணவோடு நிகழ்ச்சிகள் நிறைவு பெறுகின்றன என்பதால் நிகழ்வுகள் வேகமாக நடைபெறுகின்றன. மாநாட்டின் நினைவுச் சின்னமாக பங்கேற்போர் அனைவருக்கும் கழுத்தில் தொங்கவிடப்படக்கூடிய நாடாவுடன் ஒரு சிறிய சிலுவை (Mission Cross) வழங்கப்பட்டது. ஒவ்வொரு நாட்டுக்கும் பெரிய அளவிலான Mission Cross வழங்கப்பட்டது. மாநாட்டுத் தீர்மானம் வாசித்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இறுதியாக திருத்தந்தையின் சிறப்புப் பிரதிநிதி கர்தினால் கிறெசென்சிலோ செப்பே அவர்கள் தலைமை தாங்கிய கூட்டுப்பலியுடனும் மதிய உணவுடனும் மாநாடு நிறைவுபெற்றது.

### வீடு நோக்கி

மாலை 3.00 மணிக்கு சியாங் மாய் நகர லோட்டஸ் ஹொட்டலிலிருந்து சியாங்மாய் உள்ளூர் விமானத் தளத்தை அடைந்தோம். 5.00 மணிக்கு உள்ளூர் சேவையான 'தாய்' (Thai) விமானத்திலேறி 6.30 மணிக்கு 'பாங்கொக்' விமான நிலையத்தை அடைந்தோம். இது ஒரு புதிதாக அமைக்கப்பட்ட விமான நிலையம். எல்லா ஒழுங்குகளுமே புதிதாகவும் நவீனமாகவும் இருந்தன. பல இடங்களில் நடக்கவே வேண்டிய தேவை இருக்கவில்லை. தரைகளே நகர்ந்துகொண்டிருந்தன. படிகளில் ஏறி இறங்க வேண்டியிருக்கவில்லை. படிகளே ஏறிக்கொண்டும் இறங்கிக் கொண்டுமிருந்தன. எல்லா இடங்களும் சுத்தமாகப் பளிச் சென்றிருந்தன. ஒரு சிறு பேப்பர் துண்டையோ சொப்பிங் பேக்கையோ காணவே காணவில்லை. ஆயிரம் பேர் வருகிறார்கள் ஆயிரம் பேர் போகின்றார்கள். ஆனாலும் உறவுகள் இல்லை. உணர்வுத் தொடர்புகள் இல்லை.

இரவு 9.00 மணிக்கு 'காத்தே பசுவிக்" (Cathe Pacific) விமானமேறி 3.00 மணித்தியாலங்கள் பயணம் செய்து கட்டுநாயக்கா விமான நிலையம் வந்து சேர்ந்தோம். எமக்கும் தாய்லாந்துக்கும் 1.30 மணிநேர வித்தியாசம் உண்டு. எல்லாமே புதிய அனுபவங்கள், புதிய முகங்கள், புதிய மொழிகள், கலாச்சாரங்கள் மகிழ்ச்சியாகவும் நிறைவாகவும் இருந்தது. ஆசிய நாட்டு விசுவாசப் பரம்பல் அதன் உறுதியான நிலைப்பாடு பற்றிச் சொல்வதற்கு இன்னும் நிறையவே உண்டு. சந்தர்ப்பம் கிடைக்கும் போது சிறுசிறு தொகுதியாகத் தொடர்ந்து வெளிவரும்.

### நிறைவு

இலங்கையிலிருந்து 25 பிரதிநிதிகள். இவர்களில் நான்கு பேர் பொதுநிலையினர். யாழ் மறைமாவட்டத்திலிருந்து நம் நாட்டுச் சூழ்நிலை காரணமாக எவரும் பங்கேற்கவில்லை.

இரு பொதுநிலையினர் பங்கேற்றோம். ஒருவர் திரு. விக்ரர் என். சில்வா, அதில் நானும் ஒருவன். நாம் இருவரும் ஒரு அறையில் தங்கினோம். அறை இலக்கம் 2015. நல்ல புரிந்துணர்வுள்ள ஒரு துணை.

இது ஒரு வரலாற்று நிகழ்வு. மீண்டும் ஒரு ஆசிய மறைத்தூது மாநாடு நடைபெறலாம். ஆனால் முதலாவது ஆசிய மறைத்தூது மாநாடு நடைபெறவே மாட்டாது. அது மட்டுமல்ல, ஆசியாக் கண்டம்தான் இது போன்ற ஒரு மாநாட்டை முதன் முதலில் நடாத்தியிருக்கின்றது. இதில் பங்குகொள்வதற்கு மன்னார் மறைமாவட்டம் பொதுநிலையினர் ஒருவருக்கும் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது. பொதுநிலையினர் சார்பில் நான் பங்குகொள்ள இறைவன் திருச்சித்தம் கொண்டார். இறைவா உமக்கு நன்றி. இது இறைவனின் திருவுளம்!

மன்னார் மறைமாவட்டத்தின் மறைக்கல்வி, கல்வி, விவிலிய ஆணைக்குழுவின் இயக்குனரும், மறைபரப்புப் பணிகள் ஆணைக்குழுவின் இயக்குனரும், மன்னா பத்திரிகையின் பதிப்பாசிரியருமான அருட்தந்தை நேசன் அடிகளாரின் சிபார்சின் பேரிலேயே மன்னார் ஆயர் அவர்கள் என்னைத் தெரிந்தெடுத்தார். அருட்தந்தை நேசன் அடிகளாருக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு ஜோசேப் ஆண்டகை அவர்களுக்கும் எனது சிறப்பான நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

# பிறந்தநாள் வாழ்த்து



செல்வி. வி. பிரான்சிஸ்கா (ஷைந்து)

14.01.2007

மன்னார் கீரியன்குடியிருப்பில் வசிக்கும் திரு. திருமதி விக்ரர் சுபத்திரா தம்பதிகளின் செல்வப் புதல்வி வி. பிரான்சிஸ்கா (ஷைந்து) தனது முதலாவது பிறந்த நாளை 14.01.2007 அன்று தமது இல்லத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

"*சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்க வேண்டாம்*" எனக்கூறி தனது அரவணைப்பில் என்றும் பாதுகாக்கும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, தாத்தா, தொட்டப்பா, தொட்டம்மா, பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள், மாமாமார்கள், மாமிமார்கள், அக்காமார்கள் ஜெனிசி, நிரோனி, பிரின்சி, நிஸா, சுரபியா, சுரனியா அண்ணன்மார்கள் பிரின்சன், தர்ஷன், தவசீலன், அபிசன், மச்சிமார்கள், மச்சான்மார்கள், சித்தப்பா (அருள்சீலன்) மற்றும் உற்றார் உறவினர்கள் ஷைந்து குட்டியை குழந்தை யேசுவின் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

# குடும்பக் குவலயம்

## அன்பு வாழ்வு

அருட்பணி. எம். நிர்மலராஜ். செபமாலைதாசர் சபை

அன்புதான் பிரபஞ்சத்தின் பிரதான வேதம்,
அன்புதான் மானிடத்தின் மங்கள நாதம்,
அன்புதான் இதயத்தின் அந்தரங்க கீதம்,
அன்புதான் ஆத்மாவின் ஆனந்த இராகம்....!

அன்பு மானிட வாழ்வில் அத்திவாரமாய்த் திகழ்கின்றது. பிறக்கின்ற ஒவ்வொரு மானிட உயிரும் இறக்கும்வரை தேடுவதும், ஏங்கித் தவிப்பதும் இந்த நிறைவான, உண்மையான, நிலையான அன்பைத்தான். அன்புதான் ஒவ்வொரு மனிதனையும் முழு மனிதனாக்குகிறது. அன்புதான் மானிட வாழ்வின் முழுமைக்கு புத்துணர்ச்சியையும், புதுமையான உணர்வையும், புனிதமான எண்ணத்தையும் மனதில் வளரச் செய்கின்றது.

அன்பைப் பற்றி ஆழமாக சிந்தித்துப் பார்த்தால் ஒரு உண்மை புலனாகும். ஒவ்வொரு மனிதனும் மனித அன்பிலிருந்து இறை அன்பை நோக்கித் திருப்பயணம் செய்கின்றான்; ஏனெனில் அன்பினால் உருவாக்கப்பட்டு, அந்த அன்பை மற்றவர்களுடன் பகிர்ந்து வாழ அவன் அழைக்கப்பட்டுள்ளான்.

அன்பின் உள்ளாழத்தைப் புரிந்துகொள்ள பரிசுத்த விவிலியம் நமக்கு உதவி செய்கின்றது. "அன்பார்ந்தவர்களே! ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவோமாக." (1 யோவான் 4: 7 - 10). "அனைத்திலும் முதன்மையானது அன்பே " (1 யோவான் 12; 28 – 33) என்ற வசனங்கள் பரிசுத்த விவிலியத்தில் அன்பின் மகத்துவத்தையும், அன்பின் நிலைப்பாட்டையும் இது கடவுளிடமிருந்துதான் வருகின்றதென்பதையும் வெள்ளிடை மலையாகத் தெளிவுபடுத்துகின்றது.

பொதுவாக அன்பு என்ற அழகான, ஆழமான வார்த்தையை புரிந்தோரும், புரியாதோரும் உண்டு. *அன்பிற்காக நீ செயலாற்றினால், அன்பு உன்னில் செயலாற்றும* என்ற கருத்தை சிலர் அன்பு எப்போதும் இனிமையானது என்றும், வேறு சிலர் அன்பு உண்மையில் கடினமானது என்றும் தமது வாழ்க்கையின் அனுபவத்தை தெளிவாக வெளிப்படுத்துகின்றனர். எனவேதான் அன்பு என்ற மூன்றெழுத்தால் அகிலம் ஆழப்படுகின்றது, அவனி காக்கப்படுகின்றது.

அன்பு என்பதற்கு நீ அளிக்கும் விளக்கம் - நீ உன்னையே எப்படி அன்பு செய்கின்றாய் என்பதில்தான் அடங்கியுள்ளது. நீ உன்னையே முறையாக அன்பு செய்யக் கற்றுக்கொள்ளும்போது,





நீ மற்றவர்களின் அன்பை புரிந்துகொண்டு, உனது தனிப்பட்ட அன்பை அவர்களுக்கு செலுத்தமுடியும். ஏனெனில் நீ யாரையாவது, ஒருவரை அன்பு செய்யாதவரை உனக்கு ஏதும் அர்த்தம் தருவதாக இருக்காது. எனவேதான் அன்பு செய்யப்படுகின்றபோது மனிதன் நிறைவடைகின்றான். அன்பு செய்கின்றபோது வளர்ச்சி அடைகின்றான்.

இன்று மனித வாழ்க்கையில் அன்பு வாழ்வு மருவிக்கொண்டு செல்கின்றது. இன்றைய மனித வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையினரையும் சீர்தூக்கிப் பார்த்தால், *மனித மனங்கள் கலங்குவது அணுக்குண்டுகளால் அல்ல, அன்பற்ற இதயங்களால் தான் என்பது புலனாகும்.* இன்று எம் சமூகத்திலுள்ளவர்களைச் சந்தித்தால், அவர்களுடன் உரையாடினால், அவர்களில் எத்தனையோ பேர் தாங்கள் அன்பு செய்யப்படவில்லையென்றும், அன்பு செலுத்த முடியாதவர்களாய் இருப்பதாகவும் கூறுகின்றனர். ஏன் உலக சரித்திரத்தை கணிப்பிட்டுப் பார்த்தால், அன்பிற்காக வெகு சிலரே மடிகின்றனர், ஆனால் அன்பில்லாமல் பலர் மடிகின்றார்கள் என்பதே உண்மை.

எனவே, இந்த அன்பைப் பொறுத்தவரை எனது பங்களிப்பு என்ன என்ற வினாவை எழுப்பிச் சிந்திக்கின்றேன். "என்னிடம் எல்லாம் இருந்தும், அன்பு இல்லையென்றால் நான் ஒன்றும் இல்லாதவனே." என்னிடம் ஒன்றுமில்லாமல் அன்பு மட்டும் இருந்தால் நான் எல்லாம் உடையவன் என்ற பேருண்மையை என் மனதில் நிலைநிறுத்தி வாழ்க்கையின் பாதையை அன்பு என்ற அத்திவாரத்தால் கட்ட ஆசைப்படுகின்றேன். எனது வாழ்க்கையின் நிலைக்குள் நான் புதிய பாதையை தொடர முயலுகின்றேன். ●

# குடும்பம்! ஒரு கோவில்



சீ. செபமாலை,
ஓய்வுபெற்ற ஆசிரியர், ஆட்காட்டிவெளி

ஆதியிலே மனிதனை ஒருவனுக்கு ஒருத்தியாக, இணைந்த குடும்பமாக வாழக் கற்பித்தார் இறைவன். ஆண் மகன் தன் தாய் தந்தையை விடுத்து பெண்ணோடு கூடிவாழக் கட்டளையிட்டார். ஆளுமையின் அனைத்துப் பண்புகளோடும் ஆண் மகனையும், பேணுதற்குரிய அனைத்துப் பண்புகளோடு பெண் மகளையும் படைத்தார். மண்ணிலிருந்து மனிதனையும், மனிதனிலிருந்து மனுஷியையும் படைத்து - குடும்பம் என்ற பந்த இணைப்பிலே வாழக் கட்டளையிட்டார். ஆண் - பெண் இருவரிடையேயும் பிறந்த பாசம் பேறுகளைக் குடும்பத்தில் பிறக்கச் செய்தது. ஆளுமையிலும் பேணுதலிலும் பிறந்த பேறுகள் பதினாறு. இவை அமைந்த குடும்பமே கோவில் எனக் கொள்ளப்படும்.

புகழ், கல்வி, வலி, வெற்றி, இளமை, துணிவு, அறிவு, அழகு, பொறுமை, நுகர்வு, நல்வாழ்வு, பொன், நெல் நோயின்மை, வாழ்நாள் இவைகளைத் தமக்குத் தந்த ஆளுமையாலும் பேணுதலாலும் கடைப்பிடித்து நிற்கும் கணவன் மனைவியை தரம் உயர்த்துவதற்காக கடவுளின் நன்கொடையாக வருவதுதான் மக்கள்பேறு. குடும்பம் கோயிலாக இருந்தால் ஊரும் உலகும் போற்றும் மக்களைக் காசினிக்கே தந்து மகிழும்.

குடும்ப உறுப்பினர்களாகும் தந்தை தாய் பிள்ளைகள், கோவில் உறையும் தெய்வ நிலைக்குத் தம்மை உயர்த்தி, குடும்பம் ஒரு கோவிலெனக் கொண்டாடுகின்றனர். அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வமாக அமைந்து குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்றாகும் என்ற கூற்றுக்கமைந்த குடும்பத்தின் உறுப்பினரே குடும்பங்களைக் கோவில் நிலைக்கே உயர்த்துகின்றனர். இந்த வர்த்தகமானத்தை தமிழர் பாரம்பரியம் தலைமுறை தலைமுறையாகக் கொண்டாடி வருதல் கண்கூடு. இதுவே தமிழரின் பண்பாடு. இதனாலே தமிழர் சமுதாயம் போற்றுதற்குரிய சமூகமாக விளங்கி நின்றது.

பெற்றோர் அன்பு, பிள்ளைகள் அன்பு, சகோதரர் அன்பு, குடும்பவழி அன்பு, அயலவர் அன்பு, சமூக உறவைப் பேணிக் காக்கின்றது. இந்த நிலையைப் பேணிக்காக்க வழிசெய்யாத குடும்பங்களைக் கோவில் எனக் கொள்ளமுடியாது.

குடும்பத் தலைவனின் ஆளுமை அதிகார மோகங்கொள்ளாது தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்த முயல வேண்டும். இதற்குத் தலைவனிடம் பொறுமை, மன்னிப்பு, பரிவோடுகூடிய வழிகாட்டல் போன்ற நெறிமுறைகளைக் கையாளக் கற்றுக்கொள்ள வேண்டும்.


குடும்பத் தலைவி கணவனின் தேவை, பிள்ளைகளின் தேவை தனது தேவை கண்டு பொறுமை, கீழ்ப்படிதல் போன்றவற்றைக் கைக்கொள்ளும் போதுதான் குடும்பம் சிறந்து விளங்கும்.

பிள்ளைகள், "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை", "தாய் சொல் தட்டி நடவாதே" என்ற முதுமொழியை மனதிலிருத்தி, மதித்து நடக்கும்போதுதான் அறவழி பேணி, அறிவில் முதிர்ந்த பிரஜையாக முடியும். இந்த நிலையை எந்தக் குடும்பம் கைக்கொள்கின்றதோ அந்தக் குடும்பமே கோவிலுக்கு நிகராகும். ஒரு குடும்பம் தளத்திருச்சபையின் குட்டித்திருச்சபை. குட்டித் திருச்சபை நோய் இன்றி வாழ்வை மேற்கொள்ளுமானால், இறை குடும்பம் என்று போற்றப்பட்டு தளத்திருச்சபையில் இறையரசைப் பரப்பி நிற்கும். குடும்ப நலமே இறையரசின் மதிப்பீடு. நலமுள்ள குடும்பத்தால் மட்டுமே, அயல் உறவு பேண முடியும். நிறைவுள்ள குடும்பத்தில் தளம்பல் இராது, நேரம் மிச்சப்படும். அயல் உறவு பேணும் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

யேசு கற்பித்த செபத்தில் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற நாம் கைக்கொள்ளக்கூடிய மிகச்சுலபமான வழி குடும்ப நலம் பேணுதலாகும். குடும்ப நலம் பேணினால் தன்னலப்போக்கில் மாற்றம் ஏற்படும். சுயநேசம் அழிய இறைநேசம் மலரும். இறை குடும்பம் பெருகும். இறையரசு மலரும். குடும்பம் ஒரு கோவில் என்பதே இறை குடும்பம். ●

# மருத்துவப் பொழிவு

## வெங்காயத்தின் மருத்துவம்



- சிறிய வெங்காயத்தை நன்றாக வதக்கிச் சாப்பிட்டுவர இருமல் நீங்கிவிடும்.
- தோல் நீக்கிய வெங்காயத்தை நாள்தோறும் ஒன்று வீதம் சாப்பிட்டு வந்தால் குரல் கரகரப்பு நீங்கி தெளிவு பெறும்.
- வெங்காயச்சாறு எடுத்து அதில் போதிய உப்புக்கலந்து உண்டால் வயிற்றுவலி மறையும்.
- வெங்காயத்தை நறுக்கும்போது ஏற்படும் ஆவியை அப்படியே முகர்ந்து விட்டால் தலைவலி நீங்கும்.
- அறுத்த வெங்காயத்தைக் கொண்டு பரு உள்ள இடத்தில் தேய்க்க விரைவில் பரு நீங்கும்.
- நாட்டு வெங்காயத்தை இரண்டாக நறுக்கி மோரில் கலந்து சோற்றுடன் உண்டுவர உடற்சூடு நீங்கும்.

## வலிகளுக்கு நிவாரணம்!



பல் வலி : பல்வலி உள்ளவர்கள் காலையில் எழுந்தவுடன் ஒரு நெல்லிக்காயை நசுக்கிச் சாறெடுத்து அந்தச் சாற்றை வாயில் ஊற்றி (விழுங்கி விடாமல்) அப்படியே சற்று நேரம் கொப்பளித்துப் பிறகு உமிழ்ந்துவிட வேண்டும். இவ்வாறு செய்துவந்தால் பல் நோய்கள் குணமாகும்.

நெஞ்சு வலி : அகத்திக் கீரையை நன்றாகக் கழுவி சுத்தம் செய்து, நிழலில் உலர்த்தி எடுத்து சன்னமாக இடித்துத் தூள் செய்து அரித்து வைத்துக்கொண்டு நாள்தோறும் காலை, மாலை இரு வேளையும் இரண்டு தேக்கரண்டி தூளை வெந்நீரில் கலக்கிக் குடித்து வந்தால் நாளடைவில் நெஞ்சுவலி குணமாகும்.

மூட்டு வலி: மீன் எண்ணெய் வாங்கி வைத்துக்கொண்டு காலை, மாலை என இரு வேளை ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிடுவதுடன் சிறிது எண்ணெயை வலியுள்ள மூட்டுக்களின் மீதும் தடவிவந்தால் மூட்டுவலி படிப்படியாகக் குறையும்.

## மூல நோய் வருவதற்கான காரணங்கள்:

☆ மூலநோய்க்கு முதற் காரணம் மலச்சிக்கல்.
☆ அளவிற்கு அதிகமாக உறைப்பு உணவுகளை உண்ணுதல்.
☆ நீண்ட நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்திருத்தல்.
☆ அளவுக்கு அதிகமாக யோகாசனப் பயிற்சி செய்தல்.
☆ கர்ப்பகாலத்தில் ஆசனப் பகுதியிலுள்ள இரத்த நாளங்களை கருப்பை அழுத்துதல்.

## மூல நோயாளிகளின் உணவு முறைகள்



- உறைப்பான உணவுப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும்.
- திராட்சை, அப்பிள், பப்பாசி, தர்ப்பூசணி போன்ற பழங்களை அதிகமாக உண்ண வேண்டும்.
- கீரை வகைகளில் பசளிக்கீரை, வெந்தயக்கீரை, தாளிக்கீரை போன்றவற்றில் ஒன்றைத் தினசரி உண்ண வேண்டும்.
- கிழங்கு வகைகளில் கருணைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, கோவைக்கிழங்கு போன்றவற்றை உண்ண வேண்டும்.
- அதிகமான நீர் அருந்த வேண்டும். எளிதில் சமிபாடடையும் பிஞ்சுக் காய்கறிகளை உண்ண வேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது

- எஸ், றொக்சி பவித்திரா - ஆட்காட்டிவெளி.

## பேரீச்சம்பழ உருண்டை

### தேவையான பொருட்கள்



பேரீச்சம்பழம் - 1 கிலோ
சீனி ¼ கிலோ
தேங்காய் - 1
கோதுமை மா - ¼ கிலோ
தேங்காய் எண்ணெய் - ½ லீற்றர்
மஞ்சள் தூள் சிறிது.

**செய்முறை:** முதலில் பேரீச்சம்பழத்தை விதை நீக்கி அரைக்கவும். தேங்காய்ப் பூவை பொன்னிறமாக வறுக்கவும். அதனுள் சீனியையும், அரைத்த பேரீச்சம் பழத்தையும் கலந்து நன்றாக பிசையவும். பின்பு சிறு சிறு உருண்டைகளாகப் பிடித்து, மாவிற்குள் சிறிது மஞ்சள் தூளைக் கலந்து பதமாகக் கரைத்து அதற்குள் உருண்டையாகப் பிடித்துவைத்துள்ள பேரீச்சம்பழக் கலவையைத் தோய்த்துப் பொரித்து எடுக்கவும். பின்பு பரிமாறவும்.

## மன்னார் படகுதுறையில்....3ம் பக்க தொடர்

பொதுமக்களின் வசிப்பிடத்தைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை மிகத்தெளிவாக உள்ளது. நான் பார்த்த வரையில் 13 அப்பாவிப் பொதுமக்கள் புத்தாண்டின் முதல் நாளில் துண்டு துண்டாகச் சிதறியுள்ளனர். மேலும், காயமடைந்தவர்களின் பலர் உயிரிழக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இந்தப் பகுதியின் கத்தோலிக்க அருட்தந்தையரின் முன்னிலையில் எட்டுப் பொதுமக்களின் உடல்களை பள்ளமடு மருத்துவமனையில் பார்வையிட்டேன். இதில் மூவர் 2, 6, 11 வயதுடைய சிறார்கள். அவர்கள் அனைவரது உடல்களும் சிதைந்திருந்தன. மூவரது தலைகள் துண்டிக்கப்பட்ட நிலைய்யிலிருந்தன.

முழங்காவில் மருத்துவமனையில் தனக்குத் தெரிந்த ஐந்து பொதுமக்களின் உடல்களை இந்தப் பகுதியின் அருட்தந்தை நேற்று முன்தினம் காலை பார்வையிட்டார். 35க்கும் அதிகமான காயமடைந்த மக்கள் முழங்காவில் மருத்துவ மனைக்குக் கொண்டுவரப்பட்டு அவர்களில் மிகவும் கவலைக்கிடமான நிலைய்யில் இருந்த 25 பேர் அங்கிருந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

இவர்களின் பெரும்பாலானோர் சிறார்களும், பெண்களும் என்று பள்ளமடு மருந்த்துவமனையின் மருத்துவர் என்னிடம் கூறினார். அங்குள்ள மருத்துவர் கூறுவதை வைத்துப் பார்க்கும்போது இவர்களில் பெரும்பாலனோர் உயிர்பிழைக்க மாட்டார்கள் என்றே தெரிகிறது. எனக்குத் தெரிந்தவரையில், தனது மாமியாரைப் பார்க்க விடுமுறையில் சாதாரண உடையில் வந்திருந்த ஒரு விடுதலைப் புலி வீரரைத் தவிர, வேறு எவரும் இந்தச் சம்பவத்தில் கொல்லப்படவில்லை என்று ஆயர் அந்தக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# பெரியப்பா பதில்கள்





**கே : பெரியப்பா! முன்னரெல்லாம் ஞாயிறு பூசை, அருட்சாதனங்கள், திருவிழாக்கள் என்பவற்றோடு கிறிஸ்தவ வாழ்வு முடிந்ததுபோல் இருந்தது. ஆனால் இன்று, அன்பியம், புதுப்பித்தல், பொதுநிலைப் பணியாளர்கள் அது இது என்று பல விடயங்கள் வந்துவிட்டதே?**

*- மரிய வளன், வவுனியா*

ப : பெருக்கெடுத்து வருகிறது ஆன்மீக அருவி, புனித நீராட நீங்கள் தயாரா?

**கே : பெரியப்பா! அது எப்படி நறுக்குத் தெரிந்தாற்போல் உங்களால் மட்டும் பதில் சொல்ல முடிகிறது?**

*- அருள்மொழி, முருங்கன்*

ப : எதையோ கேட்டோம்.... என்னமோ சொன்னாங்க... என்று விடை சொல்லலாமா? உண்மையைச் சொன்னால் அதிகம் அலட்டுவது எனக்குப் பிடிக்காது. அறிவுபூர்வமான, ஆரோக்கியமான, சுவாரசியமான உரையாடலையே எப்போதும் நாடுவேன் - தேடுவேன்.

**கே : இன்று உலகாயிதப் போக்குகள் மலிந்து விட்டனவே... உண்மை நீதிக்கு இடமே இல்லைபோல் தெரிகிறதே...?**

*- முகுந்தன், மன்னார்.*

ப : இது காலமாற்றம் என்று நாம் கவலைப்படாமல் இருக்க முடியாது. நிதி இருந்தால் நீதி இருக்க வேண்டும்.
மனம் இருந்தால் மானம் இருக்க வேண்டும்.
தனம் இருந்தால் தானம் இருக்க வேண்டும்.

**கே : பெரியப்பா! பகல் கனவு காணும் பழக்கம் உண்டா?**

*- முரசொலிமாறன், செட்டிகுளம்*



ப : அட... எனக்கு இரவு நித்திரையே சரியாக வராது... அசந்து தூங்க பன்ரெண்டு ஒரு மணியாகும். பிறகு பகலில் எப்படித் தூங்குவது? தூக்கத்திற்கே வழியில்லையென்றால்.. பின்னர் கனவு எங்கே காண்பது?

**கே : சிறு வயதில் மணல் கோட்டை கட்டி விளையாடிய அனுபவம் உண்டா?** *- தயாளன், அடம்பன்*

ப : ஓம்... ஓம்... நிறையவே! மணல் கோட்டை கட்டியிருக்கிறேனே தவிர மனக்கோட்டை கட்டி என்றுமே ஏமாந்தது கிடையாது.

**கே : பொது நலம் பொது நலம் என்று சொல்லுகிறார்களே... தன்னலம் இருந்தால்தானே நான் வாழ முடியும்?**

*- வித்தியாதரன், பேசாலை*

ப : "என் வயலுக்கு மழை பொழிய வேண்டும் என்று வேண்டுவதைவிட உலகமெல்லாம் மழை பொழிய வேண்டும் என்று வேண்ட வேண்டும். உலகமெங்கும் மழை பொழிந்தால் உன் வயலிலும் அந்த மழை பொழியுமன்றோ" என்று நான் சொல்லவில்லை, திருமுருக கிருபானந்தவாரியார் கூறுகிறார்.

**கே : பெரியப்பா! 'நம்பிக்கை' பற்றி அடிக்கடி பதில் சொல்லியிருக்கிறீர்கள். 'கடவுள் நம்பிக்கை' பற்றி நீங்கள் கூறுவதில்லையே?**

*- அன்னைமேரி, பண்டிவிரிச்சான்*

ப : "மானிட வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் உலகில் சாதித்திருக்கும் அற்புதமான காரியங்கள் எல்லாம் நம்பிக்கையின் மூலமாகவே சாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த நம்பிக்கை பல வகையான வடிவம் கொண்டிருக்கலாம். கடவுளிடம் வைக்கும் நம்பிக்கைதான் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் கையாண்டு பார்த்து கைகண்ட பலன் அளிக்கக்கூடிய நம்பிக்கை என்பது உலக சரித்திரம் நிரூபிக்கும் உண்மை.

**கே : அரசியல்வாதிக்கும், இலக்கியவாதிக்கும் என்ன வேறுபாடு?** *- செ. பாலன், வங்காலை.*

ப : அரசியல்வாதி தன்னை முன்னிலைப்படுத்தி தத்துவத்தைப் பின்னுக்கு வைக்கிறார். இலக்கியவாதி தத்துவத்தை முன்னிலைப்படுத்தி தன்னைப் பின்னுக்கு வைக்கிறார்.

**கே : பெரியப்பா! ஆசையே அனைத்துத் துன்பத்திற்கும் காரணம் என புத்தர் சொல்லியிருக்கிறாரே...?**

*- மதனா, பள்ளிமுனை*

ப : உண்மை! அதனால்த்தான். உதறத் தெரிந்தவன், உயரத் தெரிந்தவன் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

**கே : நான் வாழ்க்கையில் முன்னேற நினைக்கிறேன். யாரை எனது மாதிரியாகக் கொள்ளலாம் என நினைக்கிறீர்கள் பெரியப்பா?**

*- யோகன், முள்ளிக்குளம்*

ப : அடுத்தவர் பாதையைப் பின்பற்றாதீர்கள். ஏனெனில் அது அவருடைய பாதை. உங்களுடைய பாதையைக் கண்டுபிடியுங்கள்.

**கே : இன்றைய இளைஞர்கள் திசைமாறிப் போகக் காரணம் என்ன? இந்நிலமையை மாற்ற என்ன செய்யலாம்?**

*- இளையவன், மன்னார்*



ப : வயசின் வேகம்... மனசின் தாகம்... இவர்களை வழிப்படுத்தி, நெறிப்படுத்த நல்ல ஆற்றுப்படுத்துனர்கள், ஆன்மீகவாதிகள் சமூகத்திற்குத் தேவை.

**கே : உண்மையும் நியாயமும் வெற்றி பெறுவதாகத் தெரியவில்லையே?**

ப : உண்மையும் நியாயமும் முடிவில் வெற்றி பெறும். ஆனால் உடனடியாக வெற்றிபெறும் என்று சொல்ல முடியாது.

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவு







மலர்வு: 26.05.1950
உதிர்வு: 01.02.2006

**திருமதி. இந்திரா அல்பிறட்**

மலர்வு: 10.07.1943
உதிர்வு: 02.01.2006

**திரு. அல்பிறட் விஜயரட்ணம்**

இல்லறத்தை நல்லறமாக்கி எமக்கெல்லாம் வழிகாட்டி பண்பாய், நேசமாய், பாசமாய் அரவணைத்து உயர்வாழ்வு தந்த அம்மா, அப்பாவே உங்கள் ஆன்மா சாந்திபெற உளமாற வேண்டுகின்றோம்.

*பிரிவால் துயருறும்: பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.*

## 3ம் மாத நினைவு

மலர்வு
06 - 04 - 1928



உதிர்வு
10 - 10 - 2006

**அமரர் யோசப் இம்மானுவல்**
**(செல்வநாயகம்)**

இன்றே நீ என்னோடு
வான் வீட்டில் இருப்பாய்.

"வாழ்வில் என்னை நேசித்தவர்களே
அன்றாட செபத்தில் என்னை
நினைத்தருளுங்கள்."

*இவரின் பிரிவால் துயருறும்,*
*மக்கள், சகோதரர், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

*28, மவுண்கார்மல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

## 19ம் ஆண்டு நினைவு

மலர்வு
27 - 03 - 1910



உதிர்வு
28 - 01 - 1988

**அமரர் ம.செபஸ்தியாம்பிள்ளை**
**(இளைப்பாறிய குள அதிகாரம்)**
**கன்னாட்டி, அடம்பன்.**

பண்புடன் பாசமாய் நடந்த எம் ஐயாவே!
பரமன் பாதம் தின்மும் நடந்தீரே
பாரினில் பணிகள் பல ஆற்றினீர்
பரகதி சேர பயணம் செய்தீரோ!
ஆண்டுகள் எழுபத்தெட்டு வாழ்ந்தவரே
ஆண்டவன் உம்மை அழைத்தாரோ?
முன்மாதிரி காட்டி, நீர் வாழ்ந்த வாழ்க்கை
பத்தொன்பது ஆண்டுகள் ஆனாலும்
எம் மனதில் மறையவில்லை.
உம் ஆன்மா சாந்தியடைய அனுதினமும்
இறைவனை வேண்டுகின்றோம்.

*பிரிவால் துயருறும்,*
*மனைவி பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

*தகவல்:*
*கிறகோரி பாலசிங்கம் (பாலு) கனடா.*

## மீண்டும் வாழ்க்கை....

8ம் பக்கத் தொடர்ச்சி......

மறுநாள் மயூரன் புறப்பட இருந்த நாளன்று கீரனும் வீட்டிற்கு வந்து அவனை வழியனுப்பத் தயாராகி நின்றான். மயூரன் இப்போது சவூதிக்குப் போவது, தன் குடும்பத்தில் உள்ள கஷ்டத்தைப் போக்கத்தான் என்றாலும், அதோடு இன்னுமொரு முக்கிய காரணமும் இருந்தது. அதாவது, தான் ஏழை என்பதற்காகத் தன்னை நிராகரித்து, மட்டந்தட்டிய மொழியரசிக்குமுன் பணம் படைத்த மற்றொரு மயூரனாகத் தோன்றி, அவளை அடையவேண்டும் என்பதே அக்காரணம்.

மயூரன் வீடே அன்று சோகத்தின் இருளால் சூழப்பட்டிருந்தது. மயூரனின் தங்கை அவனைப் பிரிந்திருப்பது எப்படியென்ற பிரிவுணர்ச்சியினால் உந்தப்பட்டு உப்பு நதிகளைப் பிரசவித்துக்கொண்டிருந்தாள். அவன் அம்மா, தன் பிள்ளை எதுவித தடங்கலும் இன்றி போய்ச்சேர்ந்து, நல்ல வேலை கிடைக்க வேண்டுமென மனதார செபித்துக்கொண்டிருந்தாள். இந்தச் சோக நாடகத்தையெல்லாம் அமைதியாக அவதானித்துக்கொண்டிருந்த கீரன், அந்த அமைதிச் சூழலை மாற்றியமைக்க முனைந்தவனாக, "என்ன! மயூரன் இன்னும் முக்கி, முக்கி நான்கு வருசம்தானே.... அங்கால பறந்தோடி வந்து உன்ர வசதிக்கு, விருப்பத்திற்கு ஏற்ற இடத்தில கலியாணத்தைச் செய்யுறதுதானே" அவனின் வழக்கமான இத்தகைய பகிடி இந்த வேளையில் இக்குடும்பத்தாருக்கு சிரிப்பை ஏற்படுத்தியதில் அதிசயமில்லை. ஆனால், மயூரனைப் பொறுத்தமட்டில், அது அவனுடைய எதிர்கால வாழ்வுக்கான முன்னுரையாகவே அமைந்தது. மறுநாள் அவன் சவூதிக்குப் புறப்பட்டுவிட்டான்.

காலம் தன் கடமையைச் செய்துகொண்டிருந்தது. சவூதியில் மயூரன் இருந்தாலும் அவன் நினைவுகள் மொழியரசியையே வட்டமிட்டவண்ணமிருந்தன. எப்போது தாய்நாடு திரும்பி அவளைச் சந்திப்பது என்பதே அவன் கனவும் நினைவும் எனலாம்.

நான்கு வருடத்திற்குப் பின்பு அவன் நினைத்தபடியே, பணத்தை உழைத்துக்கொண்டு தாய் நாடு திரும்பினான். வந்ததும், வராததுமாக நண்பன் கீரனைக் கண்டு, மொழியரசியைச் சந்திப்பதற்கான திட்டத்தைக் கேட்கின்றான். "மச்சான் நான் போன கிழமையே நீ வாறதா அறிவிச்ச உடனே அவளைப்பற்றிய விபரங்களைத் திரட்ட ஆரம்பிச்சன்... தற்செயலாக ஒருநாள் அவளை றோட்டில கண்டன். பின்ன என்ன... அவட வீடு எங்க இருக்கிறது எண்டத அறிய அவள விடாம, பின்னால போனன். அவட வீட்டு நம்பரையும் கண்டு பிடிச்சிட்டன்.." கீரன் கூறியதைக் கேட்ட மயூரன் அவளை அடைந்துவிட்டதாக நினைத்து ஆனந்தக் கூத்தாடினான்.

"மச்சான் உன்னைப்போல ஒரு பிரண்ட் எனக்குக் கிடைச்சது எனக்கு லக் தான்ரா... இப்பவே அவவிட்ட இந்தப் பெரிய பிறசன்ற்ரோட போய் அவ முன்னுக்கு நிற்கிறன்.."

மறுநாள் கீரன் கூறிய குறிப்பின்படி வீட்டை நெருங்கிவிட்டான். கீரன் கூறிய எல்லா அடையாளங்களும் அப்படியே இருந்தன. மனதில் எழும் சந்தோசத்தை அடக்க முடியாதவனாய், தவித்துக்கொண்டிருந்தான். மிகுந்த ஆசையுடன் அந்த வீட்டின் வாசற்படியில் காலை வைத்து முன் மண்டபத்திற்குள் நுழைகின்றான்.... அவள் மொழியரசிதான்.... அவளேதான்.... சந்தேகமில்லை..... வெள்ளைச் சேலை அணிந்தவளாய், அவன் முன் நின்றாள். அவளுடைய ஒரே குழந்தையும், அவளுடைய கையைப் பிடித்தபடி நின்றுகொண்டிருந்தது.

மயூரனுக்கு அந்த வீடே சுழன்றுகொண்டிருந்தது. அவன் ஆசையோடு வாங்கி வந்த பரிசுப் பொருட்கள் எல்லாம் அவனையறியாமலே, அவன் கையை விட்டு வழுகிக் கீழே விழுந்துகொண்டிருந்தன. அவன் உள்ளம் உடைந்து சுக்குநூறானது.

ஒருவாறு தன்னை சுதாகரித்துக்கொண்டவனாக, அவளோடு உரையாட எத்தனிக்கின்றான். அவள் அவனை உட்காரவைத்து தன் கதையைச் சுருக்கமாகச் சொல்கிறாள்.

மயூரன் தன்னைக் காதலிப்பது தெரிந்தும் அவனுடைய ஏழ்மையின் நிமித்தம் அவனைத் தான் நிராகரித்ததாகவும், பெற்றோருடைய வற்புறுத்தலால் தனக்கு வசதியான ஒரு இடத்தில் கல்யாணமாகியதையும் குழந்தை பிறந்து சில நாட்களில் கணவன் எறிகணைத் தாக்குதலில் மரணமானதையும் அதன் பின்னர் சென்ற மாதம்தான் தான் தன் சொந்த வீட்டிற்கு வந்ததையும் கூறுகின்றாள்.

மயூறனும் தான் மொழியரசியை அடைவதற்காக எவ்வாறு கஸ்ரப்பட்டு உழைத்தான் என்பதையும் ஆசையோடு அவளைப் பார்க்க வந்ததையும் விபரமாகக் கூறுகின்றான்.

இறுதியில் இன்றைய நிலையில்கூட தான் அவளை ஏற்றுக்கொள்ளத் தயார் என்று கூறி அவளுடைய பதிலுக்காகக் காத்திருக்கின்றான். அவள் ஓர் ஆழ்ந்த மௌனத்தில் குற்ற உணர்வோடு எங்கோ வெறித்துப் பார்த்தபடி இருக்கின்றாள். அவளுடைய ஆம் என்ற பதிலில் தங்கள் இருவருக்கும் மீண்டும் வாழ்க்கை பிறக்கும் என்பதை அவள் உணரமுடியாதவள் அல்ல.

.............................

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 57

## 2 அரசர்கள் - அதிகாரம் 01 - 12

உங்கள் விடைகளை 10. 02. 2007க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | 03 | | | ✸ | 04 | | | |
| | | 05 | | | 06 | | | 07 | ✸ | |
| | 08 | ✸ | 09 | | | | 10 | | | |
| | | 11 | | | | | | | | |
| | | | ✸ | 12 | | | ✸ | | | |
| | | | | | | | 13 | | | |
| 14 | | | | | | | | | 15 | |
| | | | | 16 | | | | | | |
| | | ✸ | | | | | 17 | | | |
| | 18 | | 19 | | | | ✸ | 20 | | 21 |

### வலமிருந்து இடம்

2. இஸ்ரயேல் அரசனுக்கு ............................ நம்மிடையே ஒருவன் இருக்கிறான்.
3. ஆண்டவரின் இல்லத்தைப்பழுது பார்த்த வேலையாள்களுக்காக மட்டுமே அது பயன்படுத்தப்..................... (3வது எழுத்து 4வதாக நிற்கிறது.)
7. அங்கே ....................... கதவைத் திறந்துகொண்டு ஓடி வந்துவிடு.
10. ஏனெனில் அவன்தன் தந்தை செய்து வைத்திருந்த ......................... சிலைத் தூணை அகற்றிவிட்டான்.
13. ஆண்டவர் என்னை ......................... நகருக்கு அனுப்பியுள்ளார்.
15. இவ்வாறு கணக்கிடப்பட்ட பணத்தை ஆண்டவரின் இல்லத்தில் பணியைக் கண்காணிக்குமாறு .......................ப் பட்டவர்களிடம் கொடுத்தனர்.
17. அசாவேல் அவனுக்குப் ............................ அரசனானான்.
19. தூதன் ஒருவன் அவனிடம் வந்து .................................. மைந்தர்களின் தலைகளைக் கொண்டுவந்திருக்கின்றனர் என்றான்.

### இடமிருந்து வலம்

1. அவ்வாறு ஒருவன் ........................ வெட்டிக்கொண்டிருந்தபோது அவனது கோடரி கழன்று தண்ணீரில் விழுந்தது.
4. இன்றுவரை அப்படியேதான் ......................... பட்டு வருகிறது.
5. பின்பு அவர் இளவரசனை வெளியே கூட்டிவந்து அவனுக்கு முடி ................................ உடன்படிக்கைச் சுருளை அளித்தார். (2வது எழுத்து 3வதாக நிற்கிறது.)
9. அவன் மீண்டும் அவர்களுக்குக் கீழ்க்கண்டவாறு மற்றொரு ............................... அனுப்பினான்.
11. எனவே அரசன் யோராம் உடனே இஸ்ரயேலர் அனைவரையும் ........................... ஒன்று திரட்டினான்.
12. ஆண்டவரின் திருமுன் தன் வாழ்நாள் முழுவதும் ..........................யாய் நடந்து வந்தான்.
16. ஏனெனில் அவர்தம் மைந்தராம் குல ................................ எந்நாளும் காப்பதாக அவளுக்கு வாக்களித்திருந்தார்.
19. உன் புதல்வர்கள் இஸ்ரயேலின் ...............................யில் நான்காம் தலைமுறைவரை வீற்றிருப்பர்.

### கீழிருந்து மேல்

6. யோராம் தம் மூதாதையரோடு ............................ கொண்டு தாவீதின் நகரில் அடக்கம் செய்யப்பட்டான்.
8. "ஆண்டவர் இன்று உம் தலைவரை உம்மிடமிருந்து ..........................க் கொள்ளப்போகிறார் என்பது உமக்குத் தெரியுமா"? (3ம் 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)
12. இங்கே எஞ்சியுள்ள இஸ்ரயேலர் அனைவருக்கும் நேரிடுவதே அவர்களுக்கும் ..........................
15. பின்னர் அவர்கள் நகர்களைத் தகர்த்து எல்லா நல்ல ......................... மீதும் ஆளுக்கு ஒரு கல் வீசி நிரப்பினர்.
18. .....................ம் பேசுவதற்கு நீ யார்?
19. "கடவுளின் ............................ விரைவாய் கீழே இறங்கிவாரும்.
20. அவனைப் பின்தொடர்ந்து வரும் அவன் தலைவனின் ......................... ஓசையும் கேட்கிறதல்லவா?
21. இவ்வாறு அவன் ........................... பெற்று அரசனானான்.

### மேலிருந்து கீழ்

1. அங்கு அவர்களோடு ......................... செய்துகொண்டார்.
2. அவர்களில் ............................. வரத்தவறக்கூடாது.
6. ஏகு தன் மூதாதையருடன் ............................ கொண்டான். (2வது எழுத்து 1வது எழுத்துக்கு மேலே உள்ளது)
7. அது .......................... மகன் ஏகூவைப் போன்றுள்ளது.
8. நீ போய் ........................விற்று உன் கடனைத் தீர்த்துவிடு.
11. அவளைச் ............................. உடனே விரைந்து செல்.
12. ................................ நாபோத்தின் இரத்தத்தையும், அவன் பிள்ளைகளின் இரத்தத்தையும் கண்டேன்.
14. இங்கே ................... அடியார்கள் மட்டுமே இருக்க வேண்டும்.
15. அவன் தன் தலைவரிடம் வந்து அவர்முன் ..........................

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி**
**இல. 56ற்கான முடிவுகளை 2007ம் ஆண்டு பெப்ரவரி மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**
உள்நாடு - இலங்கை ரூபா 400
வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)

# நீங்காத நினைவுகள்

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 28 - 10 - 1939



உதிர்வு 05 - 02 - 2004

**அமரர் செலஸ்ரினம்மா பொன்னையா**
**(நெடுங்கண்டல் - அடம்பன்)**

ஆண்டுகள் மூன்று சென்றாலும் அம்மா உங்கள் மதி முகம் மீண்டும் மீண்டும் தோன்றுதம்மா. மின்னல் ஒளிக்கீற்றினைப்போல் தாண்டுகின்ற வருடமெல்லாம் தாயே உம்மை நினைக்கின்றோம், வேண்டுகின்றோம். வேதனைகள் பட்டபரன் பாதமதில் நீண்ட காலம் நீர்வாழ நித்தியமாய் வீற்றிருப்பீர்.

*பிரிவால் துயருறும்,*
*அன்புக் கணவர் பொன்னையா Rtd.P.M,*
*அருமைப்பிள்ளைகள் லெஸ்ரர், லொயிட், சாமினி, லெஸ்லி, மருமக்கள் பேரப்பிள்ளைகள்.*
*தகவல்: பொன்னையா PM, கொழும்பு.*

## 4ம் ஆண்டு நினைவு

மலர்வு 10 - 02 - 1946



உதிர்வு 06 - 02 - 2003

**திரு. திருச்செல்வம் தாவீது**
**(முருங்கன் கமம், முருங்கன்)**

பாசமிகு ஐயா! பாரினில் பரமனின் வழிகாட்டி பாசத்தை நாளும் பொழிந்தீர்கள். பல ஆண்டுகள் எமக்காய் பாடுபட்டு உழைத்தீர்கள். பிள்ளைகள் வாழ பல துன்பங்களை வாழ்வில் அனுபவித்தீர்கள். நான்கு ஆண்டு எம்மை விட்டுப்பிரிந்தாலும் எம் மனதில் என்றும் நீங்காது உங்கள் நினைவு. உங்கள் ஆன்மா நித்திய சாந்தி அடைய என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**

The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's Street
Mannar, Sri Lanka.

தொலைபேசி. இல. 023 - 2232377
தொலைநகல் இல. 023 - 2232377

பதிப்பாசிரியர்,
மன்னா
திருமறைப்பணி நிலையம்,
புனித செபஸ்ரியார் வீதி
மன்னார்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 55ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்**

*முதலாம் பரிசு*
ம. நதியா,
மருதமடு, முருங்கன்.

*இரண்டாம் பரிசு*
வி. ஜெஸ்மன்,
கவயன் குடியிருப்பு,
தலைமன்னார்.

*மூன்றாம் பரிசு*
வி. நியூஜினி,
பள்ளிமுனை கிழக்கு,
மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 75 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 72 பேர்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.55ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

**பாராட்டுப்பெறும் 50 அதிஸ்ரசாலிகள்**

1. க. சிறோமி, இலுப்பைக்குளம், நேரியகுளம்.
2. பி. றோனேஷ், கவயன் குடியிருப்பு.
3. சிறகுடைந்த இளம் சிட்டு, வேதசாட்சி கோயிலடி, தோட்டவெளி.
4. அ. கரோலின் கீர்த்திக்கா, 70. பேராலய வீதி, திருகோணமலை.
5. எஸ். செலஸ்ரீனா (மரியை), நொச்சிக்குளம், உயிலங்குளம்.
6. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
7. பீ. நவரட்ணம், புதுக்கமம், உயிலங்குளம்.
8. தி.மேரி கலிஸ்ரா றோஸ், வெற்றிலைக்கேணி, முள்ளியான், யாழ்.
9. அ. அசம்ரா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
10. ம. லின்ரா, பாலையடிப்புதுக்குளம், வட்டக்கண்டல்.
11. மி. ஆன் சுஷாந்தினி, முருங்கன்பிட்டி, முருங்கன்.
12. ம. மரிய எழிலன், மருதமடு, முருங்கன்.
13. அ. ஆன் சோபிகன், செம்மண்தீவு, மாவிலங்கேணி.
14. ச. ஜோண்சன், அச்சி இல்லம், குருக்கள் மடம், மட்டக்களப்பு.
15. ச. லெனாட் சுதன், அச்சி இல்லம், குருக்கள் மடம், மட்டக்களப்பு.
16. எஸ். பிரியதர்சினி, நறுவிலிக்குளம், வங்காலை.
17. டபிள்யூ. அபிஷா, மாதிரிக்கிராமம், வங்காலை.
18. க. றகுநாதன், தரம் - 10, இலுப்பைக்கடவை, மன்னார்.
19. லீ. டெய்சி, புனித செபஸ்ரியார் கோவில்வீதி, பெற்றா, மன்னார்.
20. பி. சேவியர் ரோஸ் மேரி, கீளியன் குடியிருப்பு, தலைமன்னார்.
21. ஆ. லக்ஸனா, இல. யு07, மடுக்கோயில், மடு.
22. பீ. கஸ்தூரி, இல. 25/1, ராணி மில் வீதி, இறம்பைக்குளம்,வவு.
23. திருமதி. அருள்நாதன் வதனி, முதலை குத்தி, உயிலங்குளம்.
24. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
25. நீ. றஞ்சினி, தி.கு.க.மடம், பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோயில்.
26. பி. பிறிஸ்ரலா, தி.கு.க.மடம், பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோயில்.
27. எஸ். நிலாந்தினி, பள்ளிமுனை, மன்னார்.
28. இ. றொசின்டன், பள்ளிமுனை, மன்னார்.
29. றொ. கவிதா, அரிப்பு, சிலாவத்துறை.
30. திருமதி. வசந்தி சத்தியசீலன், எழுத்தூர், மன்னார்.
31. திரு. ஜோ. மரியரட்ணம், 09/32, பூங்கா வீதி, வவுனியா.
32. ஏ. யோகவதனி, ஆயுள்வேத மத்திய மருந்தகம், பூங்காவீதி, வவு.
33. அகுஸ்தீன் இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
34. அ. ஜஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்.
35. எம். நிரோஜன், பள்ளிவாசல் வீதி, கீரி. மன்னார்.
36. எஸ். றமேஷ், பார்மேனி வீதி, கீரி, மன்னார்.
37. கவினா, தாமோதரம்பிள்ளைவீதி, கீரி, மன்னார்.
38. லா. கிறேஸ் ஜொஸ்பின், யூனிட் 5 (29), வாரிக்குட்டியூர், வவுனியா.
39. அ. பிருந்தா வீர்ஜினி டயஸ், 100 வீட்டுத்திட்டம், வங்காலை.
40. வி. வீஜினி பிகிறாடோ, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
41. கே.சுரேஜினி, குருநாகல் வீதி,சென் பீட்டர்ஸ்லேன், நிந்தனி, புத்தளம்.
42. எம். ராதா, கவயன் குடியிருப்பு, தலைமன்னார்.
43. செ. அனுபா, இல. யு. 06, மடுக்கோயில், மடு.
44. செ. நிசாந்தினி, பள்ளிவாசல் வீதி, கீரி, மன்னார்.
45. ரா. நளினி, கீளியன் குடியிருப்பு, தலைமன்னார்.
46. பி. ஜெனேசன் பறுனாந்து, முள்ளிக்குளம், மறிச்சுக்கட்டி.
47. எஸ். அன்ரன் எக்ஸ்பெற்றா, சுவிஸ்.
48. கோ. ஆன் யூலியானி றோச், புனித லூசியா ம.வி., பள்ளிமுனை.
49. வி. யூட்சாந்தினி, துள்ளுகுடியிருப்பு (றோ.க.த.க. பாடசாலை).
50. என். ஜனார்த்தனா, மணற்குளம், உயிலங்குளம்.

## அமரர் அருட்திரு ...................

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பலியைத் தொடர்ந்து பஸ்ரியன் அடிகளாரின் உருவச் சிலைக்கு முன்பாக நினைவஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வின் தொடக்கத்தில் வங்காலைப் பங்குமகன் செல்வன் ஜோசப் ஜெறோமி மார்க் அவர்களினால் புதிதாக வடிவமைக்கப்பட்ட பஸ்ரியன் அடிகளாரின் திருவுருவச் சிலை மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களினால் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது. திரைநீக்க நிகழ்வின் பின்னர் இளம் சிற்பி ஜெறோமி அவர்களை மன்னார் ஆயர் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து மடு வலய பிரதி உதவிக் கல்விப்பணிப்பாளரும் வங்காலை கத்தோலிக்க ஆசிரியர் சங்கத் தலைவருமான திரு. ஜோசப் ஆரோக்கியம் குரூஸ் அவர்களினால் உள்ளத்தைத் தொடும் வகையிலான - சிறந்த ஆய்வின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட - நினைவஞ்சலி உரை நிகழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மன்னார் ஆயர் அவர்கள் பஸ்ரியன் அடிகளாருடைய சிறுபராயத்து வாழ்வைச் சுட்டிக்காட்டி ஏழைகள் மட்டிலான அவருடைய அன்பையும் கரிசனையையும் இன்றைய இளம் தலைமுறையினருக்கு உதாரணமாகக் காட்டினார்.

இந்நிகழ்வுகளை வங்காலைப் பங்குத் தந்தை அருட்பணியாளர் ஞானப்பிரகாசம் தலைமையில் வங்காலை அருட்பணிச் சபையினர் ஒழுங்கமைத்திருந்தனர்.

# மன்னா

## திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு
## MISSIONARY CHILDHOOD SUNDAY

28.01.2007



கிறிஸ்துவின் அன்பை நமது நாட்டில் பிரகாசிப்போம்

**Let us radiate Christ's love in our land**






## இலங்கையின் அப்போஸ்தலர் ஆசாரத்திற்குரிய ஜோசவ்வாஸ் திருவிழா

16.01.2007

மேரி பஸ்ரியன் அடிகளாருடைய திருவுருவச் சிலையை புதிதாக வடிவமைத்த வங்காலை மண்ணின் மகன், இளம் சிற்பி செல்வன். ஜோசப் ஜெரோமி மார்க் அவர்களை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை பொன்னாடை போர்த்தி கௌரவிக்கின்றார். அருகில் வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஞானப்பிரகாசம் அடிகள் காணப்படுகின்றார்.



## 1வது பிறந்தநாள் வாழ்த்து



14 * 01 * 2007

### செல்வன். பொ. பிறிற்றோ


அன்பின் ஊற்றாய் நல்ல, அறிவின் சிகரமாய் என்றும்
பண்பின் வழுவமாய்ப் பாரோர் போற்றிட
ஆயிரம் பிறைகள் கண்டு, ஆயிரம் வசந்தம் கொண்டு
ஆயிரம் கலைகள் வளர்ந்து, அவனியில் என்றும் உயர்வாயே!

பிரான்சில் வசிக்கும் திரு. திருமதி. பொனவந்தியூர் (விஜயன்) மேரி ஜெனற் தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிறிற்றோ தனது முதலாவது பிறந்த தினத்தை பிரான்சில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, பிரான்சில் வசிக்கும் தொட்டப்பா, தொட்டம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சின்னம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் எல்லாம் வல்ல இறைவன் அருள்பெற்று சகல கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றார்கள்.

தகவல் : செ. கிறிஸ்ரி, பபா (மன்னார்)
(பெரியப்பா, பெரியம்மா)

## எம் உறங்காத விழிகளோடு...

### 61ம் நாள் நினைவு



மலர்வு 1982 * 08 * 17

உதிர்வு 2006 * 11 * 23

**செல்வன். றெறன்ஸ் பேர்னாட்**
(*B.Sc. Computer Engr, M.Sc. Wireless Network*)
(கணினிப் பொறியியலாளர், அமெரிக்கா)

ஏறி நின்றாய் அறிவின் சிகரத்தில் எம்மகனே
கூறிடுவாய் வங்க மண்ணின் புகழ் அமெரிக்க மாநிலத்தில்
என்றிருந்தோம் - பறந்து விட்டாய் நீ,
பதறவைத்து உறங்கி விட்டாய் எம்மைக் கதறவைத்து
இறந்தது நீயல்ல, எம் இதயங்களை தான்மகனே!
நாம் மறந்தது உன் நினைவல்ல எம் கண்ணில்
நித்திரைகள்தான் - உறுப்புக்களைத் தானமாக்கி
உலகில் வாழவிட்டு துறந்து நீ சென்றது - உன்
உயிர் மட்டும்தானே - மறக்க முடியுமா உன்
மகத்துவத்தை எம் மாநிலம். உறங்காத விழிகளோடு
கலங்கி நிற்கின்றோம். உறவுகள் நாம் உனை இழந்து
பதறி நிற்கின்றோம். கறங்காது சுழல்கின்ற எம் மனத்துயர்
நீங்க உறங்காத இறைவனிடம் வேண்டிடுவாய் எம்மகனே

(இவரது இரங்கல் திருப்பலி 22.01.2007 அன்று வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில், ஒப்புக்கொடுக்கப்படும்)

இவரின் பிரிவால் துயருறும்
பெற்றோர் ஜே. ஜே. பேர்னாட் காமல்,
சகோதரி மரியா ஜெயதீபா (அவுஸ்திரேலியா) குடும்பத்தினர்

### 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 1976 * 09 * 22

உதிர்வு 2006 * 01 * 15

**செல்வி. அ. றொபின்ரா லெம்பேட்**
(எழுதுவினைஞர், இதிவர கடற்றொழில் கூட்டுறவு வங்கி, தலைமன்னார் கிராமம்)

திகதி குறித்தனனோ காலன் விதித்தேரை இழுத்தனனோ
இன்று விழும் நீரெல்லாம் எம் விழி நீர்.
உன் மலர்ந்த முகமும் குமதச் சிரிப்பும்
குவலயமே விலை பெறுமோ?
நிலைபேறில்லா வாழ்க்கையென நினைத்தனையோ
நிலவுலகம் துறந்தனையோ?
யுவதியாய் யுக்தி சொல்வாய் - பக்தியின் சபைதனிலே
சுடர் விடுவாய் சூரியனாய் - கலை வளர்த்தாய்
எம் ஒருங்கிணைத்தாய் - ஏன் பிரிந்தாய் தாயே!
எது நடந்தபோதிலும், இடி விழுந்தபோதிலும்
அது நடந்ததாய் உன் முகம் காட்டாதே.
உனக்கெதிர்ப்பும் மறுப்புமில்லை ஊரில்
அதை மறுக்க யாரும் இல்லை
சிறப்பிழந்து சிரிப்பிழந்த சிறகிழந்து
மனம் ரணமாகியஞம் ஒரு கூட்டுப் பறவைகள்.

இவரின் பிரிவால் துயருறும்
தாய், சகோதரங்கள், உற்றார், நண்பர்கள்

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பில் நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது